198594

COMPARE THE PRICES

எங்களுடைய விலையையும், தரத்தையும், ஊழியத்தையும், வேறு எந்த கம்பெனியுடனும் ஒப்பிட்டுப் பாருங்கள் என்று நாங்கள் உறுதியாகக் கூறுகிறோம். எங்களிடமிருந்து வாங்குவதிலேயே லாபம் உண்டு என்பது நிச்சயம். எல்லா கடிகாரங்களும் 4 முதல் 7 வருடங்கள்வரை பிழையின்றி உழைக்க உத்தரவாதமுள்ளவை. கடிகாரங்களுடன் ஒரு ஒரிஜினல் ஸ்விஸ் லெதர் அல்லது பிளாஸ்டிக் ஸ்டிராப், ஒரு நல்ல வெல்வெட் பெட்டியும், தபால் செலவு, பாக்கிங், விற்பனை வரி முதலியவை இல்லாமல் அனுப்பப்படும்.

இலவசம்

ஒவ்வொரு கடிகாரத்துடனும், ஒரு அமெரிக்கன் பவுண்டன் பேனா இலவசமாக அனுப்பப்படும்.

இரு கடிகாரங்களுக்கு ஒரு நல்ல பேனா பென்சில் செட்டுடன் டயரி ஒன்றும் அல்லது பூராவும் பித்தளையாலான 2 செல் டார்ச் திரும்பக்கூடிய முகப்புடையது ஒன்று இலவசமாக அனுப்பப்படும்.

ஒரே சமயத்தில் 3 கடிகாரங்கள் ஆர்டர் செய்பவர்களுக்கு அழகிய மேஜை கடிகாரம் ஒன்று இலவசமாக அனுப்பப்படும்.

ஒவ்வொரு கடிகாரத்துடன், நவீனமான அழகிய பிளாஸ்டிக் காலண்டர் இலவசமாகத் தரப்படும்.

நீண்ட சதுர வடிவம் சைஸ்: 7¾

காட்லாக் நெ.		ஜுவல்	விலை
435	குரோம் ஸ்டீல் பின்புறம்	5	33
436	ரோ கோ. ,,	5	36
437	பூராவும் ரோ. கோ. கேஸ்	5	40
438	குரோம் ஸ்டீல் பின்புறம்	7	38
439	ரோ. கோ ,,	7	42
440	முழு ரோ. கோல்டு	7	45
497	குரோம் எஃகு பின்புறம்	15	50
498	ரோ. கோல்டு டி	15	55
439	ரோ. கோல்டு டி	7	42
	கனக் கண்ணாடியுடன்	15	62
499A,	20மைக்ரான் தங்ககேஸ்	15	65
499B,	ரோ கோல்டு எஃகு பின்புறம் ஸ்பெஷல்	17	75
503	18 காரட் தங்க முலாம்—சென்டர் செகண்டுடன்	15	80



ரவுண்டு சிறிய செகின்டு சைஸ் 10½"

காட்லாக் நெ.		ஜுவல்	விலை
407	குரோம் ஸ்டீல் பாக்	5	20
408	ரோ. கோல்டு டி	5	23
409	முழு ரோ. கோல்டு கேஸ்	5	26
410	குரோம் ஸ்டீல் பாக்	7	30
411	ரோ. கோல்டு டி	7	33
418	முழு தங்க கேஸ்	7	36
468	குரோம் ஸ்டீல் பாக்	15	38
469	ரோ. கோல்டு டி	15	43
470	20 மைக். தங்க கேஸ்	15	53
471	குரோம் ஸ்டீல் பாக்	17	58
472	ரோ. கோல்டு டி	17	63
473	20 மைக். தங்க கேஸ்	17	73



சின்ன வட்ட வடிவம்
சென்டர் செகின்டு 8¾

காட்லாக் நெ.		ஜுவல்	விலை
419	குரோம் ஸ்டீல் பின்புறம்	5	30
420	ரோல்டு கோல்டு டி	5	33
421	பூராவும் ரோ கோ கேஸ்	5	35
422	குரோம் ஸ்டீல் பின்புறம்	7	34
423	ரோ. கோல்டு ,, ,,	7	37
424	முழு ரோ. கோல்டு கேஸ்	7	40
485	குரோம் ஸ்டீல் பின்புறம்	15	59
486	ரோ. கோ. ,,	15	64
488	ரோ. கோல்ட் டி	17	95
489	20மைக்ரான் தங்ககேஸ்	17	110



சென்டர் செகண்டு சைஸ்: 10½

401	குரோம் ஸ்டீல் பின்புறம்	5	22
402	ரோ. கோ. ,,	5	25
403	பூராவும் ரோ. கோ. கேஸ்	5	28
404	குரோம் ஸ்டீல் பின்புறம்	7	35
405	ரோ. கோ. ,,	7	38
406	ரோ. கோ. ,,	8	43
474	குரோம் ஸ்டீல்பின்புறம்	15	43
475	ரோ. கோ. ,,	15	48
477	குரோம் ,,	17	65
478	ரோ கோல்டு டி	17	70
479	20மைக்ரான் தங்ககேஸ்	17	80



டானு வடிவ சைஸ்—6¾

447	குரோம் ஸ்டீல் பின்புறம்	5	37
448	ரோல்டு கோல்டு டி	5	40
449	பூராவும் ரோ. கோ. கேஸ்	5	43
450	குரோம் ஸ்டீல் பின்புறம்	7	41
451	ரோ கோ. ,, ,,	7	44
452	பூராவும் ரோ. கோ. கேஸ்	7	48
452B	ரோ. கோ. ஸ்டீல் பின்புறம் அழகிய ஆப்டிக் கிளாஸ்	7	50
506	குரோம் ஸ்டீல் பின்புறம்	15	52
507	ரோ. கோ. ,, ,,	15	57
508	பூராவும் ரோ, கோ. கேஸ்	15	60
509	20 மைக்ரான் தங்க கேஸ்	15	67

வாட்டர் புரூப், ஷாக் புரூப்,
டஸ்ட் புரூப், சென்டர் செகண்டு
காந்த எதிர்ப்பு சைஸ்—8¾

530	குரோம் ஸ்டீல் பின்புறம் தட்டை ரேடியம் டயல்	15	85
531	ரோ. கோ. ஸ்டீல் டி தட்டை—ரேடியம் டயல்	15	90
532	20 மைக்ரான் தங்ககேஸ் தட்டை—ரேடியம் டயல்	15	95
533	குரோம் ஸ்டீல் பின்புறம் தட்டை வடிவம் ரேடியம் டயல்	17	105
534	ரோ. கோ. ஸ்டீல் பின்புறம் தட்டை—ரேடியம் டயல்	17	110

லேடீஸ் நவீன நீண்ட சதுரம்—சைஸ் 5¼

562	குரோம் ஸ்டீல் பின்புறம்	5	40
563	ரோ கோ. ,, ,,	5	43
564	ரோ. கோ. டி	7	48
565	குரோம் ஸ்டீல் பின்புறம்	15	60
566	ரோ. கோ. ,, ,,	15	63
567	20 மைக். தங்க கேஸ்	15	68
568	ரோ.கோ.எஃகுபின்புறம்	15	70
569	20 மைக்ரான் தங்ககேஸ்	15	80
570	18 காரட் கெட்டி தங்கம்	17	140

அலாரம் டைம்பீஸ் நெ. 584 சைஸ் 4

580	பேபி டைம்பீஸ் அழகானது ரூ.	18
581	நவீன அலாரம் டைம்பீஸ்	20
582	ஸ்விஸ்மேட் அலாரம் டைம்பீஸ்	22
583	இங்கிலீஷ் மாடல் அலாரம் டைம்பீஸ்	20
584	பிரான்ஸ்மேட் அலாரம் டைம்பீஸ் வெள்ளை ரேடியம் டயல்	25

ASIA WATCH HOUSE

DIRECT IMPORTERS OF WATCHES.

A 36. SADASHIVE LANE, P. B. 3607, GIRGAUM, BOMBAY - 4.

ADAPEX

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ் :: மவுண்ட்ரோட் :: சென்னை.

அடியிற்கண்ட ரயில்வே பிளாட்பாரங்களில் எமது புத்தகசாலைகள் இருக்கின்றன.

ரயில்வே ஸ்டால்கள் :

1. விழுப்புரம்	15 ஈரோடு ஜங்ஷன்
2. கூடலூர் N. T.	16. திருப்பூர்
3 கும்பகோணம்	17 மாயவரம் ஜங்ஷன்
4. விருதுநகர்	18 விருத்தாசலம்
5 கோயமுத்தூர்	19 பொள்ளாச்சி
6. திருவாரூர்	20. ஸ்ரீவைகுண்டம்
7. திண்டுக்கல்	21. திருத்துரைப்பூண்டி
8 திருச்சிகோட்டை	22. பழனி
9. திருச்சி ஜங்ஷன்	23 தாம்பரம்
10 கரூர்	24. மதராஸ் பீச்
11 மானுமதுரை	25 திருநெல்வேலி
12 தென்காசி	26. ஒலவக்கோடு
13 சேலம் மார்க்கெட்	27 செங்கற்பட்டு
14. மதுரை ஜங்ஷன்	28 தூத்துக்குடி
	29 ராமனுதபுரம்

பிராஞ்சு : திருப்பதி

மேற்படி இடங்களில் எல்லாவிதமான இங்கிலீஷ், தமிழ்ப் புத்தகங்களும், தினசரி; வாரப் பத்திரிகைகளும், அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய இடங்களில் பிரசுரமாகும் வாரப் பத்திரிகைகளும், மாதப் பத்திரிகைகளும் கிடைக்கும்.

மானேஜர்,

சுதேசமித்திரன் புத்தகசாலை,

விக்டரி ஹவுஸ், மவுண்ட்ரோட், சென்னை

தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை
198574
சென்னை

சுதேசமித்திரன் வாரப்பதிப்பு பொருளடக்கம்

பக்கம்

நிகழ்ச்சிச் சித்திரம்	தானு	4
விவாகப் பொருத்தம்	பத்மா நாராயணன்	7
தங்க நிற ஜம்பர்	கோமதி சுவாமிநாதன்	10
கலாமண்டபம்		15
நிலா முற்றம் (தொடர்கதை)	சுகி	19
விளம்பரம் தேவை	என். என்.	25
இதுவும் மாயைதானே !	ரா.	27
ஆசாபங்கம்	டி. எஸ். சுப்பாராவ்	29
ஹிந்தி பாடங்கள்	பண்டித்ஜீ	32
குஸ்திச் சண்டை	ஙு. ரா.	37
பட்டணத்துப் படகு	குங்குமம்	43
தேர்த்தட்டு வார்த்தை	வாரன்	45
சிறுவர் பகுதி	எஸ். ரங்கராஜன்	47
காந்திஜீ கண்ட கனவு	ரா. சாரங்கபாணி	52
உடல் நலம்	ராஜகோபாலாச்சாரியார்	54
வாக்குப் பலித்தது	ஹாஸ	56
ஸங்கீத பாரிஜாதம்	பண்டித கிருஷ்ணமாச்சார்யா	59
ராமானுஜ நூற்றந்தாதி (காயக சிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்கார்)		62
விலை வாசி		64

"மித்திரன்" வாரப்பதிப்பில் தோன்றும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன அனைத்தும் கற்பனையே. அவை யாரையும் குறிப்பிடுவன அல்ல.



வாழிய செந்தமிழ்

சுதேசமித்திரன் வாரப்பதிப்பு

வாழ்க நற்றமிழர்

Vol XXI] விக்ருதி௵ புரட்டாசிமீ 22உ ★ 1950-௵ அக்டோபர்மீ 8உ No. 36

தொழில் வளம் செழிக்க

தொழிலபிவிருத்தி பற்றி ஏதாவதொரு பிரசங்கமோ, அறிக்கையோ வேளியாகாத நாளில்லை. எனினும் இவற்ருல் திட்டமான பலன் ஏதாவதுண்டா என்பது அனைவரும் அறிந்ததுதான். தொழில் வளர்ச்சிக்கு வழி வகை காண்பதில் இன்று பல ஸ்தாபனங்கள் ஈடுபட்டிருப்பதாக விளம்பரமாகி வருகிறது. முக்கியமாக இந்திய சர்க்கார் நியமித்துள்ள தேசிய திட்டக் கமிஷன் இத்துறையில் ஏற்றுக்கோண்டுள்ள போறுப்பு மகத்தானது. ஆனுல் அதன் வேலையும் உடனடியான பலன் எதுவும் அளித்துவிடுமேன்று எதிர்பார்ப்பதற்கில்லை. அனுஷ்டானத்திற்கு வரப பல வருஷங்களாகக் கூடிய திட்டங்கள் அமைப்பதிலேயே அதன் கவனம் திரும்பியிருக்கிறது. அத்தகைய திட்டங்கள் நமக்கு மிகவும் அவசியமானவைதான். எனினும் அதே சமயத்தில் பல தொழில்களிலும் உற்பத்தியை கூடியவரை உடனடியாக அதிகரிப்பதற்கான வழிகளில் நாம் கவனம் செலுத்துவதும் அத்தியாவசியமாகும்.

இந்த நோக்குடன் சமீபத்தில் இந்நாட்டிலுள்ள பல வகைத் தொழில்களையும் நேரில் பார்வையிட்ட ஒரு பார்லிமெண்டு அங்கத்தினர் கோஷ்டியின் சார்பில் டாக்டர் தேஷ்முக் சர்க்காருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பித்திருக்கிருர். இக்கோஷ்டியினர் தங்கள் சுற்றுப் பிரயாணத்தின் மூலம் புதிய உண்மை எதையும் கண்டுபிடித்து விட்டதாகச் சோல்ல இடமில்லை. எனினும் அவர்கள் சார்பில் டாக்டர் தேஷ்முக் வேளியிட்டுள்ள யோசனைகளின்படி சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கோள்வராயின் தோழில் துறையில் தற்போது காணும் மந்த நிலை விரைவில் ஓரளவேனும் திருந்துமேன்று எண்ணுகிருேம. பார்லிமெண்டு கோஷ்டியினர் இரும்பு-எஃகுத்தொழில், கப்பல் கட்டுதல், மோட்டார் தயாரிப்பு, மின்சார சாதனங்கள், பருத்தி, சணல்; சிமிட்டி தயாரிப்பு முதலிய பல தொழில்களைப் பார்வையிட்டிருக்கின்றனர். இவற்றில் தற்போதைய இயந்திர வசதிகளைக் கொண்டே உற்பத்தியைப் பெருக்குவது அசாத்தியமன்று. எனினும் பல கோளாறுகளால் உற்பத்தி அதிகரிக்காமல் தடைபட்டுக் கிடக்கிறது. அக்கோளாறுகளை உடனுக்குடனே ஆராய்ந்து அவற்றைப் பரிகரிப்பதற்கான வழிகளை சர்க்காருக்குத் தெரிவிக்கும் பொருட்டு சர்க்கார் பார்லிமெண்டு தோழில் நிர்வாகிகள், தொழிலாளர் இந்நான்கு தரப்புகளுக்கும் பிரிதிநிதித்துவமுள்ள ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டுமேன்பது டாக்டர் தேஷ்முக்கின் யோசனைகளில் ஒன்று. தோழில் துறையில் தற்போதுள்ள சங்கடங்களில் பல எளிதில் நீக்கக்கூடியவை. எனினும் இதில் துரிதமாகக் கையாளக் கூடிய ஒரு சேயல் முறைக்கு இடமில்லாததால் அச்சங்கடங்கள் வீணுக நீடித்துக்கோண்டிருக்கின்றன. மேற்குறித்த யோசனை அமுலுக்கு வருவதன் மூலம் இக்குறைபாடு நீங்கக் கூடும்.

தோழில் துறையில் ஈடுபட்டவர்களிடை அடுத்தபடி என்னுகுமோ என்ற கலக்கம் நீடித்து வருவதையும் டாக்டர் தேஷ்முக் எடுத்துக் காட்டியிருக்கிருர். குறிப்பாக தோழில்களை சர்க்கார் தங்கள் வசமாககிக் கோள்வது பற்றியே இந்த சந்தேகமேல்லாம். இப்போதைக்குத் தாங்கள் அவ்வாறு சேய்ய உத்தேதிக்க வில்லையேன்று சர்க்கார் ஏற்கேனவே கூடியவரை திட்டமாக அறிவித்திருப்பது உண்மைதான். டாக்டர் தேஷ்முக் கூறுவதுபோல் அவர்கள் இன்னும் ஒருபடி முன் சேன்று, சம்பந்தப்பட்ட தோழில்கள் நேரான முறையில் நடத்தப்படும் வரை அவற்றைத் தங்கள் வசமாக்க முற்படப் போவதில்லையேன்று அறிவிப்பது தோழில் வட்டாரங்களில் இன்னும் திடமான நம்பிக்கை யுண்டாக்கக்கூடும். அவர்கள் தோழில் துறையில் புதிய போறுப்பு எதுவும் ஏற்கக்கூடிய நிலையிலில்லை யேன்பது தேளிவு. இப்போறுப்பை ஏற்பதற்கேன்று ஒரு தனி ஊழியவர்க்கத்தை சர்க்கார் சிருஷ்டிப்பதானுலும் அது எளிதில் நடந்தேறக்கூடிய ஒரு காரியமல்ல. எனவே இப்போதைக்கு நடவாத ஒருகாரியத்தைப் பற்றி திரும்பித் திரும்பிப்பேசி வீண்பீதி யுண்டாக்குவதை விட, டாக்டர் தேஷ்முக் கூறுவதுபோல் சர்க்கார் திட்டமான ஒரு உறுதிமோழியை வேளியிட்டு தோழில்களுக்கு ஆக்கமளிப்பதே அறிவுடைமையாகும். தோழில் துறையில் ஈடுபட்டவர்களை அடியோடுகேட்டவிழ்த்துவிட வேண்டுமேன்று யாரும் சோல்லவில்லை. தோழில்கள் துரிதமாக வளர்ச்சியடைவதற்குள்ள வில்லங்கங்களை நீக்கி, அதேசமயத்தில் தோழில்களில் ஈடுபட்டவர்கள் விபரீத வழிகளில் இறக்காதவாறு போதிய கண்காணிப்பு இருக்கும்படி சர்க்கார் சேய்யவேண்டுமேன்று டாக்டர் தேஷ்முக் வற்புறுத்தியுள்ளார். அவரது யோசனைகளில் சர்க்கார் உரிய கவனம் சேலுத்துவார்களா?

பி. ஸி. ஜி. தடுப்பு மருந்து குத்துதல்



ஐ. நா. சர்வதேச க்ஷயரோக எதிர்ப்பு ஸ்தாபனத் தலைவரான டாக்டர் லண்ட் சமீபத்தில் மேற்படி தடுப்பு மருந்தை சென்னை, வைத்தியக்கல்லூரியில் ஒருவருக்கு குத்தியபோது எடுக்கப்பட்ட படம்.

இன்னுமா தாமதம்?

சமீபத்தில் பிறந்த ஒரு அவசரச்சட்டத்தை யொட்டி அத்தியாவசியப் பண்டங்களின் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் ராஜ்ய சர்க்காரிடமின்றி தங்களிடமே இருந்து வரவேண்டுமென்று மத்திய சர்க்கார் முடிவு செய்துவிட்டனராம். அவ்வதிகாரம் யாரிடமிருந்தாலும் சரி, அத்தியாவசியப் பண்டங்களின் விலை உடனே குறையவேண்டுமென்பதே பொது மக்கள் கோருவதெல்லாம். எனினும் இவ்விஷயத்தில் அதிகாரிகள் காட்டிவரும் அறிவு தீட்சண்யத்தையோ, சுறுசுறுப்பையோ யாரும் பாராட்டப் போவதில்லை.

மேற்குறித்த அவசரச் சட்டம் அமுலுக்கு வந்து சுமார் ஒருமாதமாகிறது. எனினும் அதன்படி விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள பண்டங்கள் ஒரு சிலதான். நிர்ணயிக்கப்பட்டுள்ள விலையோ சாதாரணமாக மார்க்கட்டில் இருந்து வருவதை விட இன்னும் சிறிது தூக்கலானது! விலையைக் கட்டுப்படுத்தப் போவதாக சொல்லிக்கொண்டு உண்மையில் அதை இன்னும் தூக்கி விடுவதுதான் அதிகாரிகள் தற்போது செய்யும் கைங்கைர்யம். மின்சார பல்புகள், க்ஷவர பிளேடுகள், பால் புட்டிகள் போன்ற பண்டங்களைவிட வெண்ணெய், நெய், தனியா, மிளகாய் வற்றல், நல்லெண்ணெய் போன்ற இன்றியமையாத பொருள்களின் விலை சமீபகாலமாக விசேஷமாக அதிகரித்திருப்பதை சர்க்கார் அறியாதிருக்க முடியாது. ஆனால், அவற்றின் விலையைக் கட்டுப்பாடு செய்வதுபற்றி அதிகார வட்டாரங்களில் இன்றுவரை திட்டமான யோசனை எதுவும் உருவாகக் காணோம். யாரோ சிங்காரித்துக் கொள்வதற்குள் பட்டணம் கொள்ளை போய் விட்டதாகச் சொல்வதுண்டு. அவ்வாறே மேற்குறித்த பண்டங்கள் விஷயத்தில் அதிகாரிகள் திட்டமான நடவடிக்கை எடுத்துக்கொள்ளு முன் அவை பெரிதும் கள்ளமார்க்கட்டுக்குப் போய்விடுமோ என்று அஞ்சுகிறோம்.

விவாகப்பொருத்தம்

ஸ்ரீமதி பத்மா நாராயணன்

குழந்தை இல்லாமல் முதல் மனைவி இறந்துவிட்டால், சந்ததிக்காகவேமறு விவாகம் செய்துகொள்வதாகச் சொல்லி, இரண்டாம் தாரத்தைத் தேடுவார்கள் அதுஒரு அப்பட்டமான காரணம். முதல் மனைவி குழந்தைகளைப் பெற்றுப் போட்டுவிட்டு இறந்துவிட்டாலோ, பாவம், அந்தக் குழந்தைகளுக்காகவே மறு விவாகம் செய்துகொள்வதாகச் சொல்லி வேறு மனைவியைக் கொள்வார்கள்! ஆனால், இவ்விரண்டு காரணங்களுக்கும் ஊடாக, பாசியினுள் நூல் ஓடுவதேபோல், ஸ்திரீ சபலம் மறைந்து கிடக்கிறது என்பதை, யார்தான் அறியமாட்டார்கள்?

ராஜாராமனின் மனைவி, தனது இருபத்திரண்டு வயதுக்குள் இரண்டு குழந்தைகளைப் பெற்றுவிட்டு, அவைகளை நிர்க்கதியில் விட்டுவிட்டு மறைந்தாள் சாந்தாவுக்கு வயது ஐந்து; சகுந்தலாவுக்கு வயது மூன்று நாசிக்கில் சர்க்கார் ரூபாய் அச்சடிக்கும் யந்திரசாலையில் அவனுக்கு உயர்ந்த உத்தியோகம்; சம்பளம் நானூறு ரூபாய்; வயதோ இருபத்தெட்டுதான். மேலும் மதுரை ஜில்லா முல்லையாற்றுப்பாசனத்தில் பூர்வீக சொத்து ஐந்து ஏக்கர் நஞ்சையுண்டு. உடன் பிறந்தாரோ தாய்தந்தையரோ, ஒருவரும் கிடையாது அவனிடம் அக்கரை கொள்ளும் நெருங்கிய உற்ருர் உறவினர் ஒருவரும் கிடையாது ஆனால் அவனது நிலங்களை மாத்திரம் சோழவந்தானில் தனது தூரத்து உறவினராகிய ஆத்மநாதய்யரை மேல்பார்த்துக்கொள்ளும்படி விட்டிருந்தான். ஆத்மநாதய்யரும் பெரிய பணக்காரர்தான்.

மனைவி இறந்து கிட்டத்தட்ட ஒரு வருஷம் ஆகிவிட்டது. ராஜாராமன் மறுவிவாகமே செய்துகொள்வதில்லை என்று தீர்மானம் செய்தபடி, தனக்கு வந்த உயர்ந்த அந்தஸ்துள்ள பெண்களைக்கூடத்தட்டிக்கழித்தான், சென்ற வருஷம் அவன் நிராகரித்த ஜாதகங்கள் மாத்திரம் சுமார் இருநூறுக்கு மேலிருக்கும்! இதிலிருந்து அவன் மனேதிடம் தெரிகிறதல்லவா?

நாசிக்கில் அதே தொழிற்சாலையில். பல தென்னிந்தியர்கள் வேலை பார்த்து வந்தனர் எல்லோரும் அவனுக்குப் பழக்கம்தான். ஒரு வீட்டில் ஒரு விதவையான தாயும் அவள் பிள்ளையும் மாத்திரம் இருந்தனர், அவளுக்கு ஐம்பது வயதுக்கு மேலிருக்கும். அவளுடைய பராமரிப்பில், தன் குழந்தைகளாகியசாந்தாவையும். சகுந்தலாவையும் விட்டுவிட்டு, தானும் அங்கேயே சாப்பிட்டு வந்தாள்.

தங்கள் தாயார் இறந்துவிட்டது இரண்டு குழந்தைகளுக்கும் நன்ருகத் தெரியும் ஒரு வருஷமாக அந்நியஸ்திரீ ஒருத்தியிடம் தாங்கள் வளர்ந்து வருவதும் அவைகளுக்குப் புலப்பட்டது அந்தக்கிழவி, குழந்தைகளை நன்ருகத்தான் கவனித்து வந்தாள். வேளா வேளைக்குச் சாப்பாடு தலை பின்னிவிடுதல். குளிப்பாட்டுதல் எல்லாம் ஒழுங்காகவேதான் செய்து வந்தாள் அன்பாகவும் பேசினுள். ஆனுல் குழந்தைகளின் முகத்திலோ உற்சாகமில்லை. அவளுடைய உபசாரங்கள் அவைகளின் உள்ளத்தைத் தொடவில்லை; அங்கு ஏதோ ஒரு இடத்தில் பெரிய பிளவொன்று இருக்கத்தான் செய்தது

ராஜாராமன் இதைஉணராமலில்லை ஆனுல் அவனுக்கு ஒரு சந்தேகம் என்னவென்ருல் தான் மறுவிவாகம் செய்துகொண்டால், தனக்கு வாய்க்கும் மனைவிமாத்திரம் அவர்களிடம் அன்பாக இருப்பாள் என்பது என்ன நிச்சயம்? அவளுக்கும் சில குழந்தைகள் பிறந்துவிட்டால், பிறகு வீட்டில் போட்டியும் பூசலும் அல்லவோ மலிந்துவிடும்? ஐயையோ வேண்டாம் குழந்தைகள் இங்கேயே இருந்து விட்டுப் போகட்டும், என்று முடிவு செய்தான் சில சமயம், குழந்தைகளின் ஏக்கத்தை எப்படியாவது போக்க வேண்டுமே என்றும் கவலைகொண்டான்,

''பரிக்ஷைக்கு எப்படிடா படிச்சிருக்கே''

'' எஸ் கணபதியைத்தான் நம்பியிருக்கேன் ''

"இங்கிலீஷ் ப்ரொபஸர் எஸ். கணபதியையா ?''

"இல்லேடா, சாக்ஷாத் சிவ பெருமான்பிள்ளை கணபதியை '!

2

ராஜாராமனின் தூரத்து உறவினராகிய ஆத்மநாதய்யர் மிகவும் ஒழுக்கமுள்ளவர். அவனுடைய நிலங்களை மேற்பார்த்து அவனுக்குத் துரோகம் செய்யாமல், நடந்து வந்தார். ஆனுல், அவர் பெரிய கருமி என்று அந்தப் பக்கத்தில் பெயர் வாங்கியிருந்தார், அநாவசியமாக யாருக்கும் ஒரு வேளைச் சாப்பாடு கூடப் போடமாட்டார். அத்தகையவர், ராஜாராமனுக்கு இரண்டு மாதம் லீவு எடுத்துக்கொண்டு, குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு சோழவந்தானில் தன் வீட்டில் வந்து இருக்கும்படி கடிதம் எழுதிக்கொண்டேயிருந்தார். ராஜாராமனுக்கும், சொந்த ஊருக்குப் போய் பல வருஷங்களாகிவிட்டதாலும், மனைவி இறந்த துக்கத்திற்கு மாற்றுதலாக இருக்குமென்று நினைத்தும், கடைசியில் அவருடைய வேண்டுகோளுக்கு இணங்கினுன். குழந்தைகளுக்கும் அது ஆறுதலாக இருக்குமென்று எண்ணினுன்.

சோழவந்தானுக்கு வந்ததும், அவனுக்கு ஒரு விஷயம் ஆச்சரியத்தைக் கொடுத்தது. ஆத்மநாதய்யருக்கு பதினேழு வயதில் ஒரு பெண் இருக்கிருள் என்பதுதான் அது ஏதோ பத்து வருஷங்களுக்கு முன் அவன் அவளைப் பார்த்தது பின்னுல் அவள் இருப்பதையே அவன் மறந்துவிட்டான். மேலும் தன் மனைவி இறந்த பிறகு அவர் தனக்குப் பல கடிதங்களில் பல ஜாதகங்களை வைத்து அனுப்பியிருந்தார். குழந்தைகளின் பொருட்டாவது அவன் மறு விவாகம் செய்து கொள்ள வேண்டும் என்று அவர் வற்புறுத்தி வந்தார். அவன் எழுதும் பதில்களில் குழந்தைகளின் சந்தோஷமே தன் குறிக்கோள் என்றும். மாற்ருந்தாய் இல்லாமலே அவைகள் சந்தோஷமாயிருக்கும் பக்ஷத்தில், தான் மறுமணம்

செய்துகொள்ளாமல் இருப்பதே நலம் என்றும் எழுதிவந்தான்

தனக்கே விவாகத்திற்குப் பெண் இருக்கிறாள் என்று ஏன் அவர் எழுதவில்லை யென்பது அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது

மதுவுண்ட வண்டுபோல். ரீங்காரம் செய்துகொண்டு கவலையற்று சகல சௌக்கியங்களையும் பெற்று துள்ளிக்கொண்டிருந்தாள் துர்க்கா, அவன் குழந்தைபோன்ற சுபாவம் படைத்தவள் யாரைக் கண்டும் வெட்கப்படவோ ,பயப்பட வோமாட்டாள். இளமை அவள் உடலில் பொங்கிக்கொண்டிருந்தது அவள் உள்ளத்திற்குத் தெரியாது. அது இன்னும் ஐந்து வயதுப் பருவத்திலேயே இருந்தது.

ராஜாராமன் அவளைக் கண்டதும் ஒருகணம் பிரமித்துவிட்டான். அவளை நேராக நிமிர்ந்து பார்க்கக்கூட வெட்கப்பட்டான். அவளது சௌந்தரியம். அவனது சங்கல்பத்தைக் காட்டாற்று வெள்ளம் சிறு கட்டைகளை அடித்துக்கொண்டு போவதேபோல், தகர்த்து விடும்போலிருந்தது. தன் குழந்தைகளைத் திரும்பிப் பார்த்தான். மறுகணம் சங்கல்பம் உரம் கொண்டது "உன் குழந்தைகளின் சத்துரு அவள். அவளை நினையாதே" என்று அவன் மனம் சொல்வதுபோலிருந்தது.அவளை மறந்தான்.

துர்க்கா ராஜாராமனை வரவேற்ற மாதிரி அவனையே வெட்கமடையச் செய்தது. நேருக்கு நேர் வந்து நின்றுகொண்டு, வாங்க மாமா. அக்கா செத்துப்போனாள்னு கேள்விப்பட்டு எனக்கு ரொம்ப துக்கம். குழந்தைகள் சவுக்கியமோல்லியோ? என்று கேட்டாள். "சவுக்கியம்தான். இதோ பார்" என்று சாந்தாவையும் சகுந்தலாவையும் அவன் சுட்டிக்காட்டினான். "வாடி என் கண்மணி" என்று சொல்லி ஒருவர் மாற்றி ஒருவரை எடுத்து முத்தமிட்டுக்கொஞ்சி மகிழ்ந்தாள் துர்க்கா. இவ்வளவு ஆர்வத்துடன் அவைகளை அவள் கொஞ்சியது, அவனுக்குச் சற்று ஆறுதலாயிருந்தது.

ஆயிற்று சுமார் ஒருமாதம் ஓடி விட்டது ராஜாராமன் அங்குவந்து. அந்தக் குறுகிய காலத்திற்குள், துர்க்காவிணிடம் அவன் கண்ட மாறுதல் பிரமிக்கத்தக்கதாயிருந்தது. குழந்தைத்தனமான ஆட்டங்களெல்லாம் உள்ளடங்கின. வெளி சேஷ்டைகள் ஸ்தம்பனமடைந்தன. அதேசமயத்தில், உள்ளத்தில் பொதிந்துகிடந்த ஏதோ ஒன்று வெளிக்கிளம்ப ஆரம்பித்தது. இது மனத்தைச் சார்ந்தது. ராஜாராமன் அந்த வீட்டில் இருந்ததுதான் அதற்குக் காரணமோ என்றுகூடச் சொல்லலாம். குழந்தைகள் இருவரும், துர்க்காவையே சதா சுற்றிக்கொண்டு, ஆநந்தமாக இருந்தன. தன் சொந்தத் தங்கைகள்போல அவள் அவர்களைக் கவனித்து வந்தாள்.

3

"ஏன் மாமா, உங்களுக்குப் பெண் இருக்கிறாள் என்று ஏன் எழுதவில்லை?" என்று கேட்டான் ராஜாராமன். ஆத்மநாதய்யரைப் பார்த்து. 'நீதான் கலியாணமே வேண்டாம் என்று சொல்லும்போது, அவளைப் பற்றி ஏன் எழுதுவது? என்றார் அவர் அவனுக்குப்பதில். ஆனால் அந்தச்சமயத்தில்கூட, 'நீ என் பெண்ணை மணந்து கொள்," என்று அவர் சொல்லவில்லை. ராஜாராமனும் அதைப்பற்றி ஏன் கவலைகொள்ளவேண்டும்? மறுவிவாகம் என்ற பேச்சே அவனிடம் கூடாதே. தன் அருமைக் குழந்தைகளின் ஆநந்தமே அவனது ஆநந்தமும்.

இரண்டுமாத லீவு முடிந்ததும், ராஜாராமன் நாசிக்குக்குப் புறப்பட்டு விட்டான். போகும்போது, துர்க்கா, அவனிடம் வந்து, 'மாமா, சாந்தாவும், சகுந்தலாவும் இங்கேயே இருக்கட்டும். நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் குழந்தைகளை வைத்துக்கொண்டு கஷ்டப்பட வேண்டாம்,'' என்று கெஞ்சினாள். ராஜாராமனுக்கோ. தன் குழந்தைகளைப் பிரிவது என்பது, தன் உடலிலிருந்து உயிரைப் பிரிப்பது போன்றது. ஆகையால், அவன் அதற்குச் சம்மதிக்கவில்லை. இருந்தாலும், அவைகளையே கேட்டுவிடலாம் என்று நினைத்து, 'நீங்கள் இங்கே இருக்கிறீர்களா? பாட்டியிடம் வருகிறீர்களா?' என்று கேட்டு வைத்தான். 'நாங்கள் வரமாட்டோம். இங்கேயே இருக்கோம்,' என்றன இரண்டும் ஏககாலத்தில். அவன் சிறிது பின்னடைந்தான். ஆனால், அவைகளைத்தான் இல்லாமல் இவ்வளவு தூர ஊரில் விட்டுச் செல்ல அவன் இஷ்டப்படவில்லையாததால், கூட்டிச் செல்வதென்றே தீர்மானித்தான்.

குழந்தைகளுடன் குழந்தையாக விளையாடிய துர்க்கா அந்த முடிவைக் கேட்டுப் பெரிய ஏமாற்றமடைந்தான். தந்தையிடம் சென்று முறையிட்டாள் 'போடீ அசடே, அவன் இப்போது கூட்டிக்கொண்டு போனால் போகட்டும். எப்படியும் அதுகள் உன்னிடம் வந்துதான் தீரும்,' என்று அவர் சொல்லி அவளைக் சமாதானப் படுத்தினாள். அது எப்படி முடியும் என்று அவளுக்குப், புரியாமல், அரை மனதுடன் அப்பால் நகர்ந்தாள்.

4

ராஜாராமன் குழந்தைகளையும் அழைத்துக்கொண்டு புறப்பட்டுச் சென்றவுடன், அந்த ஊரில் எல்லோரும், கருமியாகிய ஆத்மநாதய்யர் எப்படி மூன்று ஆத்மாக்களுக்கு இரண்டு மாதம் வீட்டில் வைத்துச் சாப்பாடு போட்டார் என்றே ஆச்சரியப்பட்டார்கள். சிலர், அவ

னுடைய நிலங்களையும் அவர் மேற்பார்ப்பதால், கணக்கில் தள்ளிக்கொள்வார் என்று பேசிக்கொண்டார்கள். வேறு சிலர், அவனையே அவர் தன் மாப்பிள்ளையாக்கிக்கொள்ளப் போகிறார் என்றும், அதற்காகவே விவாகத்தை வெறுத்து வந்த ராஜாராமனைத் தன் வீட்டில் தங்கச் செய்து, அவனைச் 'சரி செய்கிறார்' என்றும் சொல்லிக்கொண்டார்கள், உண்மை என்னவோ யாருக்குத் தெரியும்?

ஆனால், அவருடன் நெருங்கிப் பழகியவர்கள், சென்ற இரண்டு மாத காலத்தில் அவர் ராஜாராமனிடம் தன் பெண்ணைக் கலியாணம் செய்துகொள் என்று கேட்கவேயில்லையென்று வாதித்தார்கள். அது என்னவோ உண்மைதான், பின் அவர் அவனை வரவழைத்ததன் மர்மம்தான் என்ன?

மீண்டும் நாசிக்கில், ராஜாராமன் குழந்தைகளை அந்தப்பாட்டி வீட்டிலேயே விட்டுவைத்துத்தானும் அங்கேயே சாப்பிடத் தொடங்கினான். அவனை மறு விவாகம் செய்துகொள்ளும்படி தூண்டிக்கொண்டேயிருந்த பாட்டியும், அவன் ஊரிலிருந்து திரும்பிவரும்போது, அது விஷயமாக ஏதாவது முடிவு செய்திருப்பான் என்று நம்பியிருந்தாள். அவன் தன் மனதை மாற்றிக்கொள்ளவில்லையென்று தெரிந்ததும். அவள் மிகவும் கவலைப்பட்டாள். குழந்தைகளை முன்னையும் விட அனுதாபத்துடன் கவனிக்கத் தொடங்கினாள்.

குழந்தைகளோ சோழவந்தானில் இருந்தபோது கொண்ட உற்சாகத்தையிழந்து, பழைய ஏக்கத்தையடைந்தன. ஏக்கம் அதிக ஆழமாயிற்று என்றே சொல்லலாம். ராஜாராமன் அவைகளைக்கண்டு மனம் வருந்தினான். எல்லா சௌகரியங்களும் இருந்தும் அவை ஏன் உள்ளம் குன்றியிருக்க வேண்டும் என ஆச்சரியப்பட்டான். "துர்க்காவிடம் போகலாமா?" என்று சில சமயம் கேட்பான் அவை உடனே "அங்கே கொண்டுவிடு" என்று கூவிக் குதிக்கத் தொடங்கிவிடும். அதிலிருந்து அவைகளின் உள்ளம் எந்த மையத்தைச் சுற்றிச் சுழல்கிறது என்பதை ஓரளவு கண்டுகொண்டான்.

சுமார் ஒரு மாதம் கழித்து, ஆத்மநாதய்யரிடமிருந்து அவனுக்கு ஒரு கடிதம் வந்தது அதில் அவர், தன் பெண் துர்க்காவை அவனுக்கு மணம் செய்துகொடுப்பதாய் நிச்சயித்திருப்பதாகவும் அதற்கு அவன் மறுதளிக்காமல் இணங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டிருந்தார் அக்கடிதத்தின் பின்குறிப்புஒன்றில்,இரண்டுகாரணங்களை அவர் விளக்கியிருந்தார் ஒன்று,தன்சொத்துபூராவும்ஏகபுத்திரி துர்க்காவையே சேரும் ; மற்றொன்று குழந்தைகள் சாந்தாவும்சகுந்தலாவும் துர்க்காவை மிகவும் நேசிப்பது முந்தியதைவிடப் பிந்திய காரணம் ராஜாராமனை ஆகர்ஷித்தது அதற்கேற்றாற்போல், துர்க்காவைப் பிரிந்தது முதல், குழந்தைகள் மனச்சந்துஷ்டியை பூரணமாக இழந்துவிட்டதையும் அவன் உணர்ந்தான்.

ஒருவேளை, பின்னால் அவள் தன் குழந்தைகளை வெறுக்கத் தொடங்கினால்—? சே அதெப்படி சாத்தியம்? குழந்தையுள்ளம் படைத்த துர்க்கா, எந்த வஸ்துவையும் வெறுக்கப் பழகியவளல்ல. அவள் மனது, தான் ஆராய்ந்தவரைக்கும் உயர்ந்த பண்பை பெற்றது. ஆம்; கபடமற்ற அவளைத் தான் விவாகம் செய்துகொள்வதுதான் நியாயம் அதுவே தன் அருமைக குழந்தைகளுக்கும் நன்மைதருவது. இந்த முடிவை அவன் தன் பதிலில் தெரிவித்துவிட்டான். தன் குழந்தைகளுக்காகவே தான் விவாகம் செய்துகொள்ளப்போகும் பெண், பார்த்துப் பழகிப் பொறுக்கியெடுத்தது என்று அவன் திருப்திகொண்டான்.

ஆனாலும், நேரில் கேட்காமல், கடிதமூலம் அவர் ஏன் தெரிவித்தார் என்பதுதான் அவனுக்கு விளங்காத புதிராகயிருந்தது.

5

"உன் குழந்தைகளுடன் என் பெண் எப்படி நடந்துகொள்கிறாள் என்பதை அறியவே, நான் உங்களை இங்கு வந்து இரண்டு மாதம் தங்கச் சொன்னதற்குக் காரணம். சந்தேகமற துர்க்கா குழந்தைகளை நேசிக்கிறாள். அந்த உண்மை அவள் குழந்தைகளை விட்டுப் பிரிந்தபிறகு அடைந்த வேதனையிலிருந்து வெளியாகிவிட்டது. சிலர், உடனிருக்கும் வரை நேசிப்பார்கள்; பிரிந்ததும் மறந்துவிடுவார்கள். அப்படியில்லாமல், இது உண்மையன்பு என்று நிச்சயமான பின்புதான், நான் இந்த முடிவுக்கு வந்தேன். மேலும் இந்த விவாகம்மூலம் குழந்தைகளின் சந்தோஷம் பெருகுவதை நீ உணர்ந்திருப்பாயாதலால், கலியாணத்தை நீ மறுக்கமாட்டாய் என்று எனக்குத் தெரியும்" என்று ஆத்மநாத அய்யர் தன் மாப்பிள்ளையிடம் விவரித்தார். துர்க்கா பெருமையுடன் விம்மிதமடைந்தாள் !

—



தங்கநிற ஜம்பர்

—— கோமதி ஸ்வாமிநாதன் ——

என்னைக் கண்டவுடனேயே தையற்கார முனிசாமி திரு திரு வென்று விழித்தான். கைகள் அவசரம் அவசரமாக மெஷினுக்குப் பின்னால் இருந்த துணிக் குவியலின் ஊடே நுழைந்து தேட ஆரம்பித்தன அவன் செய்கைகளிலிருந்தே அவன், நான் பத்து நாட்களுக்கு முன் கொடுத்த பாவாடைத் துணியை பிரித்துக்கூடப் பார்க்கவில்லையென்று ஊகித்துக் கொண்டேன். என் ஆத்திரம் அடக்க முடியாமல் பீறிட்டெழுந்தது. 'இந்தா! முனிசாமி! நீ தைத்தது போதும்! துணியை இந்தப் பக்கம் எடு!' என்றேன் என் குரலில் ஒலித்த கடுமை எனக்கே அசாதாரணமாகத் தோன்றியது.

'கோவித்துக்கொள்ளாதீங்க சாமி! ஒரே நிமிஷத்தில் முடித்து தந்துவிடுகிறேன். அப்படி உட்காருங்க' என்று ஒரு மாஜி நாற்காலியை (தற்சமயம் மூன்றரைக் கால்கள்) காண்பித்தான். அவன் கைகள் என்னவோ இன்னும் என் துணியைத் தேடிக் கொண்டுதானிருந்தன. 'முனிசாமி! இதோடு ஒரு நிமிஷம். ஒரு நிமிஷம் என்று நீ இருபது தடவைகளுக்கு மேல் சொல்லி என் பையனை அலைய வைத்துவிட்டாய்; இனிமேலும் ஒருவன் உன் வார்த்தைகளை நம்பினால் அவனைப்போல் முட்டாள் இந்த உலகத்திலேயே இருக்கமாட்டான் பதினெட்டாம் பெருக்கிற்கு குழந்தை ஆசைபட்டாளே யென்று துணியை வாங்கிக் கொண்டுவந்தால், நீ அடுத்த வருஷத்திய பதினெட்டாம் பெருக்கிற்குக்கூட தைத்துக் கொடுக்க மாட்டாய் போலிருக்கிறது! என் கோபத்தை மேலும் கிளப்பாமல் துணியைக் கொடுத்து விடு. குறித்த நேரத்தில் தைத்துக் கொடுக்கும் தொழிலாளிகள் உலகத்தில் அஸ்தமித்துப் போய்விடவில்லை!' என்றேன் படபடப்புடன், அதற்குள் முனிசாமி துணிப் பொட்டலத்தை தேடி எடுத்துவிட்டான். "சாமி! ஒரு விஷயம் எனக்கு ரொம்ப வேண்டிய வாடிக்கைக்காரர்களுக்கு, நான் குறிப்பிட்ட நேரத்தில் கொடுப்பதில்லை! அதற்கு ஒரு காரணம் இருக்குது!" என்றான். நிதானமாக! "பேஷ்! இப்படியானால் நான் உனக்கு வேண்டாதவனாகவே இருக்கிறேன் குறிப்பிட்ட நேரத்தில் அப்போதாவது துணிகளை தைத்துக் கொடுப்பாயல்லவா?" என்று கேட்டுக் கொண்டே அந்த நாற்காலியில் உட்கார்ந்தேன் அதற்குள் அவன் பாவாடைத் துணியை வெட்ட ஆரம்பித்திருந்தான். முனிசாமி பொதுவாக நல்ல தொழிலாளி. திறமை சாலியும் கூட. அவன் எனக்காக தைத்துக் கொடுத்திருந்த புஷ்கோட்டுகள் என் மேலதிகாரியின் பாராட்டுதல்களுக்குக்கூட பாத்திரமாயிருந்தன. ஆகவே அவனுடன் தீர்மானமாக சண்டை போட்டுவிட்டு வேறு ஒருவனைத் தேடிப் போக நானும் உண்மையில் விரும்பவில்லை. போலிக் கோபத்துடன்தான் பேசினேன் மேலும் என் பெண் மீனு புதுப் பாவாடைக்காக மூன்று நாட்களாகவே அடம் பிடித்து அழுதுகொண்டிருந்தாள். ஆகவே எப்படியும் இன்று பாவாடையை கையில் வாங்கிக் கொண்டு போய் விட வேண்டும் என்ற தீர்மானத்துடன் உட்கார்ந்தேன்

துணியை மிஷினில் கொடுத்துக் கொண்டே முனிசாமி பேச ஆரம்பித்தான். "சாமி! நான் இந்தத் தொழிலுக்கு வந்து இருபது வருஷங்களாகுதுங்க! எங்க ஊரு ஸ்ரீபுரத்திற்கு பக்கத்திலே உள்ள ஒரு கிராமம் எங்க தகப்பனுர் அவர் காலத்தைப் பூரா, கிராமத்திலேயே ஓட்டிட்டாருங்க! ஆனால் எனக்குத்தான் கொஞ்சம் பட்டிண வாச மோகம் பிடிச்சதுங்க, பெரியவர் காலமான உடனே, நான் கிராமத்திலேயிருந்த வீட்டை விற்று புது மிஷின் வாங்கிட்டு ஸ்ரீ புரத்திற்கு வந்து சேர்ந்தேன். என் அதிருஷ்டம் கோவில் தெருவிலே ஒரு நல்ல இடம் அகப்பட்டதுங்க பட்டாமணியம் சுப்புசாமி ஐயரு வீட்டுக்கு எதிர்த்தாப்போல்! நான் போன வேளையோ என்னவோ, எனக்கு நிறைய வேலை கிடைச்சுக்கிட்டே இருந்தது"

நான் இடைமறித்தேன். 'இந்தா முனிசாமி! நீ தைக்கவேண்டியது பாவாடை! பேச்சு வேகத்திலே அதை கவுனாகவோ தலையணை உறையாகவோ தைத்துவிடாதே" என்றேன் சிரித்துக் கொண்டே.

'அப்படி மாற்றி தைத்த சம்பவம் தான் இந்தக் கதைக்கே அஸ்திவாரமுங்க. முழுதும் கேளுங்க' என்று உற்சாகத்துடன் ஆரம்பித்தான் அவன்!



தந்தை:—டேய், கழுதே...... இத்தனே நாழி எங்கேடா அலேஞ்சிண்டிருந்தே ?

மகன்:—வண்ணான் வீட்டுக்கு போயிருந்தேன்...அப்பா.....

2

"பட்டாமணியம் சுப்புசாமி ஐயருக்கு நல்ல செல்வாக்கு. மனிதர் நல்ல மனிதர் ஆனால் முன்கோபம்மாத்திரம் எப்போதும் மூக்கு மேலேயே நிற்கும். நான் ஸ்ரீ புரத்திற்குப் போய்ச் சேர்ந்தபோது அவருக்கு நாற்பது வயது இருக்கும். அவருக்கு இரண்டே இரண்டு பெண்கள்தான். மூத்த பெண், காமாட்சியை, பக்கத்து ஊரு மிராசுதார் பையனுக்கே கல்யாணம் பண்ணிக் கொடுத்திருந்தார். இரண்டாவது பெண் மங்களம். அப்போதுதான் கல்யாண பருவத்தை அடைந்திருந்தாள். காமாட்சியின், அழகு, நிறம் எல்லாம் சுமார்தான். அவள் எல்லாவற்றிற்கும், கோபம் உள்பட தன் அப்பாவைக் கொண்டிருந்தாள், ஆனால் மங்களமோ, எல்லாவற்றிற்கும் தன் தாயாரின் பிரதிபிம்பமாகவே விளங்கினாள். அபார அழகி எலும்மிச்சம்பழம் போன்ற நிறம். எடுப்பான மூக்கு இருவரையும் ஒன்ருகப் பார்த்தால் சகோதரிகள் என்றே சொல்லமுடியாது மங்களத்திற்கு அப்போது சுப்புசாமிஐயர் வரன் பார்த்துக்கொண்டிருந்தார். எந்த பாக்கியவான்

கொடுத்துவைத்திருக்கிருனே என்று நான் நினைப்பதுண்டு

அப்போது காமாட்சியும் பிறந்த வீட்டிற்கு வந்திருந்தாள். ஒரு நாள் பிற்பகல் மூன்று மணியிருக்கும். சகோதரிகள் இருவரும் கையில் ஒரு கட்டுத் துணியுடன் என் கடையை நோக்கி வந்தார்கள் அவர்கள் துணி தைப்பதற்கு என்னிடம் வருவது அதுதான் முதல்தடவை மரியாதையுடன் அவர்களை வரவேற்று, துணிகளை கையில் வாங்கிக்கொண்டேன் காமாட்சிக்கு இரண்டு ஜம்பரும், மங்களத்திற்கு இரண்டு ஜம்பரும் தைப்பதற்கு இரண்டு ரகத் துணிகள் இருந்தன காமாட்சியின் புருஷன் பட்டிணத்திற்குப் போய் சமீபத்தில் ஒரு நல்ல தங்கக் கலரில் சில்க் ஒன்று வாங்கி வந்திருந்தானும். அந்தத்துணியை தனக்கும், மற்ருெரு சாதாரண துணியை மங்களத்திற்காகவும் அளவு ஜம்பர்களுடன் கொடுத்துவிட்டு காமாட்சி தன் சகோதரியை அழைத்துக் கொண்டு திரும்பிப்போய்விட்டாள்

துணிகளை எடுத்துப் பார்த்தேன் அந்தத் தங்கக் கலர் சில்க் மங்களத்திற்குத்தான் நன்ருக இருக்கும் சிவப்பு நிறத்திற்கேற்ற கலர், சற்று இரட்டை நாடியாகவும் கறுப்பாகவும் இருக்கிற காமாட்சிக்கு அது சற்றும் சோபிக்காது, காமாட்சி திருப்பித் திருப்பி. 'பட்டிணத்திலிருந்து வாங்கி வந்தார், பட்டிணத்திலிருந்து வாங்கி வந்தார்' என்று ஆசையுடன் சொல்லிக்கொண்டதிலிருந்து அவளுக்கு அந்தத் துணிமேல் தவிர்க்கமுடியாத பிரேமை விழுந்துவிட்டது போல் தோன்றியது. ஆனால் என் உள்ளத்திலே ஓர்வித பிடிவாதமான ஆசை மேலோங்கி பிசாசுபோல் எழுந்தது 'அதே தங்கக் கலர் சில்க் துணியை மங்களத்திற்குத்தான்தைக்க வேண்டும். பிறகு காமாட்சி கோபித்துக்கொண்டால் ஞாபகப் பிசகு என்று சொல்லிவிடலாம்' என்று தீர்மானிக்கச் செய்தது. அந்த ஆவல். அதன் பிரகாரம் செய்துவிட்டேன்

துணி தைக்கக் கொடுத்தது போலவே, மூன்று நாட்கள் கழித்து சகோதரிகள் இருவரும் எதிர் வீட்டிலிருந்து நான் மெஷின் வைத்திருந்த திண்ணை ஓரத்தில் வந்து நின்று, தைத்த உருப்படிகளைக் கேட்டார்கள், நான் ஒன்றும் அறியாதவன் போல் இரண்டு ஜம்பர்களையும் எடுத்து காமாட்சியின் கையில் கொடுத்தேன். அதைப் பார்த்ததுமே காமாட்சிக்கு விஷயம் புரிந்துவிட்டது முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன. "ஏனப்பா! இந்தத் துணியை எனக்கல்லவா தைக்கச் சொன்னேன்!" என்று சீறினாள் அதில் ஓர் பெண் புலியின் ஆக்ரோஷம் நிரம்பியிருந்தது! "அடாடா! சின்னம்மாவிற்கென்றல்லவா நினைத்தேன்" என்று நிதானமாகச் சொன்னேன். சொல்லிவிட்டு சின்ன அம்மா முகத்தையும் பார்த்தேன். நான் செய்தது ரொம்ப சரி என்று மங்களம் சொல்வது போலிருந்தது அவள் பார்வை காமாட்சி கோபத்துடன் சில்லரையை விட்டெறிந்துவிட்டு துணிகளை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள் மங்களமும் பின்தொடர்ந்தாள்.

'விஷயம் அதோடு தீர்ந்தது! நம் ஆவலும் நிறைவேறியது. என்று நான் ஆனந்தப்பட்டேன! ஆனால் என் சந்தோஷம் அற்ப சந்தோஷமாகப்போய்விட்டது ஒரு மணி நேரத்திற்கெல்லாம், சுப்புசாமிஐயர், பிரமாதமாக சப்தம் போட்டுக் கொண்டு நாலைந்து பேர் புடை சூழ என்னுடன் பெரிய போருக்கே வந்துவிட்டார் 'மடையா! தடியா!" என்று கூப்பாடு போட்டார்! "உன் மிஷினையே உடைத்து தூள் தூளாக்கி விடுகிறேன் பார்! குழந்தை ஆசையுடன் கொடுத்த துணியை குட்டிச் சுவராக்கிவிட்டாய்!" என்று குதித்தார்! அப்போதுதான், அவரிடம் காமாட்சிக்குத்தான் சலுகை ஜாஸ்தி என்று தெரிந்துகொண்டேன்! நான் விஷயம் இவ்வளவு தூரம் முற்றும் என்று நினைக்கவில்லை ஆகவே பயந்து நடுங்கி "சாமீ! ஞாபகப் பிசகா செய்துட்டேனுங்க! மன்னிக்கணும்!" என்றேன். அவருக்கு கோபம் அடங்கவில்லை நான் கடை வைத்திருந்த திண்ணையின் சொந்தக்காரர், அவர் கோபத்திற்கு தூபம்போட்டார். அவருக்கு ஏற்கனவே நான் இலவசமாக துணிகள் தைத்துக் கொடுக்கவில்லை என்ற ஆத்திரம், கடைசி முடிவாக, பட்டாமணியம் சுப்புசாமி ஐயர் என்னை அந்தத் தெருவிலிருந்து வெளியேற்றிய பிறகுதான் மனம் சமாதானமடைந்தார், அன்றிரவே நான் தேரடித் தெருவில் ஓர் திண்ணையை வாடகைக்கு அமர்த்திக்கொண்டு மிஷினுடன் போய்ச் சேர்ந்தேன் இவ்வளவு மனக் கஷ்டங்களிலும், நாம் நினைத்ததைச் சாதித்துவிட்டோம் என்ற திருப்தி எனக்கு ஆறுதலைக் கொடுத்தது.

3

நான் புது இடத்திற்குப்போய் சுமார் பதது நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் மங்களம் தன் வீட்டு வேலைக்காரப் பையனுடன் சில துணிகளை எடுத்துக்கொண்டுவந்தாள் நல்ல வேளை அந்தப் பகுதியில் எனக்கு போட்டியாக வேறு ஆள் இல்லை! இருந்தால், சுப்புசாமி ஐயர், என்னிடம் தையல் வேலைகளைக்கொடுக்க ஒப்புக்கொண்டிருக்கமாட்டார். அன்று மங்களம், நான் தைத்துக் கொடுத்திருந்த தங்கக் கலர்சில்க் ஜம்பரைத்தான் போட்டுக்கொண்டிருந்தாள். ரொம்ப லட்சணமாகவும் பொருத்தமாகவும் இருந்தது,

"டைலர்! இந்தத் துணிகளை வரும் வெள்ளிக்கிழமை காலைக்குள் அவசியம் கொடுக்கவேண்டும். இன்றைக்கு திங்கள்கிழமை, நான் வெள்ளிக்கிழமை எங்கள் பாட்டியுடன் மாயவரம் போகப் போகிறேன்! அதற்குள் கொடுத்துவிடுவாயல்லவா?" என்றாள். அவள் பருவமடைந்தையாகியும்அவள் குரலில் ஓர்வித குழந்தையின் குறுகுறுப்பு இருந்தது "அம்மா! வியாழக்கிழமையே வாங்கிக்கொள்ளுங்கள்!" என்றேன். நான் அவள் சிரித்தாள். "அதெல்லாம் சரி! இந்த ஜம்பர்கள் எல்லாம் எனக்குத்தான் எங்க அக்கா காமாட்சி அளவிற்குதைத்துவிடாதே! இதோ! நான் போட்டுக்கொண்டிருக்கும் ஜம்பர் பாஷனிலே தைக்கவேண்டும்! என்று சொல்லிக்கொண்டே கிளம்பினாள்

அவள் பேச்சு, நடைபாவனை எல்லாவற்றிலுமே ஓர் தெய்வீக சக்தி வீசுவது போன்ற பிரமை எனக்கு உண்டு. இல்லாதபோனால் துணிந்து அவள் அக்காவிற்கான ஜம்பரை அவளுக்கே தைத்துக் கொடுப்பேனு? அவள்போய் வெகுநேரமாகியும் அவள் போன வழியையே பார்த்துக்கொண்டு நின்றுவிட்டேன் என் சிந்தனையை மறுபடியும் இவ்வுலகிற்கு இழுத்துவந்தான். அடுத்த வீட்டு வாசு!

'என்ன முனிசாமி! ரொம்ப ஒழுங்காக பட்டாமணியத்தோட பெண்ணிடம், வியாழக்கிழமையன்றே துணிகளை தைத்துக் கொடுத்துவிடுவதாகச் சொல்லிவிட்டாயே?' என்று கேட்டுக்கொண்டே வந்தான் வாசு! நான் கடை வைத்திருந்த வீட்டிற்கு அடுத்த வீட்டுக்காரர் பையன் அவன் சுமார் இருபது வயது இருக்கும் ஷோக் பேர்வழி. திருச்சினப்பள்ளியில் ஏதோ ஒரு கல்லூரியில் வாசித்துக்கொண்டிருந்தவன் லீவிற்கு வந்திருந்தான். நல்ல அழகனும்கூட அவனிடம் எனக்கு ஓர்வித மரியாதை உண்டு

'ஆமாம்! அவசியம் கொடுத்துவிடுவேன் வேறு வேலையில்லை' என்றேன். வாசுவைப் பார்த்து 'இல்லை! நீ ஞாயிற்றுக்கிழமை வரை அந்தத் துணிகளைத் தொடக்கூடப் போவதில்லை அதனால், பட்டாமணியத்தின் பெண் ஊருக்குப் போகப்போவதில்லை வெள்ளிக்கிழமையன்று அவன் பாட்டி மாத்திரம்தான் போகப் போகிறாள்' என்று கண்களைச் சிமிட்டிக்கொண்டே சொல்லிவிட்டு, சட்டைப் பையிலிருந்து ஒரு ரூபாய் நாணயமொன்றை என் பக்கமாக நீட்டினான் எனக்கு ஒன்றும் புரியவில்லை' என்றேன் வாசு என்னருகில் வந்தான். குரலை தணித்துக்கொண்டான்.

'முனிசாமி! நான் உன்னிடம் ஒரு ரகசியம் சொல்கிறேன். உன்னை நம்பித்தான் சொல்கிறேன். உனக்குத் தெரியுமோ தெரியாதோ? பட்டாமணியமும் நாங்களும் தூற உறவினர்கள், இடை

யேதான் எங்க தகப்பனுருக்கும் பட்டாமணியத்திற்கும் ஒரு வரப்பை உத்தேசித்து மனஸ்தாபம் ஏற்பட்டது. மங்களம் எனக்காகவே பிறந்தவள், ஆகையால் எங்கள் பெற்ருேர்கள் மனஸ்தாபம் அதன் ஊடே நிற்பதை நான் வெறுக்கிறேன். அவர் என்னவோ தன் பெண்ணிற்கு வேறு இடங்களில் தீவிரமாக வரன் பார்த்துக் கொண்டிருக்கிருராம்! அவளை அவள் பாட்டியுடன் வெள்ளிக்கிழமையன்று மாயவரம் அனுப்பிக்கும் நோக்கமே அதற்காகத்தான். அங்கு காமாட்சிக்கு பக்கத்து சொந்தத்தில் பம்பாயில் வேலை பார்க்கும் பையன் ஒருவன் இருக்கிருன். அந்தப் பையனின் தாயாரும் வந்திருக்கிருளாம் அவள் பார்க்கும்படி யதேச்சையாகப் போவதுபோல் மங்களத்தை அனுப்பப் போகிருர்கள் அந்தப் பையன்மீது சுப்புசாமிக்கு ஒரு கண், பாட்டி எப்படியும் வெள்ளிக்கிழமை புறப்பட்டாக வேண்டும். நீ மாத்திரம் ஜம்பர் தைத்துக் கொடுக்காமலிருந்தால் மங்களம் போகமாட்டாள் நான் எப்படியும் ஒரு வாரத்திற்குள் என் தகப்பனுர் மனதை சரிபடுத்தி விடுவேன் அவர் இந்த விவாகத்திற்கு சம்மதித்து விடுவார்! சுருக்கமாகச் சொன்னால் என் வாழ்க்கையே உன் கையில் இருக்கிறது மங்களம் மாத்திரம் மாயவரம் போனுளோ அப்புறம் நான் இலவு கார்த்த கிளிதான்! இந்த விஷயங்களை யெல்லாம் அவர்கள் வீட்டு வேலைக்காரி ரகசியமாய்ச் சொன்னுள்!......இப்போதாவது புரிகிறதா? இந்த ஒரு ரூபாயை காப்பி சாப்பிட வைத்துக் கொள்."



வாசு பேச்சை நிறுத்தினுன். அவன் உள்ளக் கொந்தளிப்பு வார்த்தைகளிலே பரிணமித்தது நான் ரூபாயை வாங்கிக்கொள்ளவில்லை! அதற்கென்ன! நான் பார்த்துக்கொள்கிறேன் என்று மழுப்பினேன். ஆனுல் மனதிலே மாத்திரம் நான் மங்களத்திற்கு அளித்த வாக்குறுதியை மீறக்கூடாதென்று தீர்மானித்துக்கொண்டேன்! ஏதோ அந்த நேரத்தில் என் மனது வாசுவின் காதலை விட என் வாக்குறுதியைத்தான் பெரிதாகக் கருதியது!

கடைசியில் வாசுவிற்குத் தெரியாமல் புதன்கிழமை ராத்திரியே ஜம்பர்களைத் தைத்து, வியாழக்கிழமை காலை,

பட்டாமணியம் வீட்டிற்குப்போய் வாசலில் கோலம் போட்டுக்கொண்டிருந்த மங்களத்திடம் கொடுத்துவிட்டுத் திரும்பினேன் வாசு என்னவோ நான் ஜம்பர் துணிகளை வெட்டவேயில்லை என்று நினைத்துக்கொண்டிருந்தான்! எனக்கோ என் வாக்குறுதியைக் காப்பாற்றிக் கொண்டதுபற்றி உள்ளம் பூரித்தது.

வெள்ளிக்கிழமை சாயங்காலம், வாசு ஆத்திரத்துடன் என்னிடம் வந்தான். அவன் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன 'முனிசாமி! நான் அவ்வளவு சொல்லியிருந்தும் நீ என்னை மோசம் செய்துவிட்டாய்! மங்களம். இன்று மூன்று மணி வண்டிக்கு மாயவரம் போய்விட்டாள்!' என்று கருவிக்கொண்டே போனுன், அவனைப் பார்த்தபோது எனக்கு பரிதாபமாக இருந்தது.

4

அன்று இரவு எட்டு மணிக்கு நான் கோவிலுக்குப் போய்விட்டு அங்கிருந்தபடியே, நான் சாப்பிடும் விடுதிக்கும் போய் சாப்பாட்டையும் முடித்துக்கொண்டு, கோவில் தெரு வழியாக வரும்போது,. பட்டாமணியம் வீட்டு வாசலில் ஏகக் கூட்டமாக இருந்தது ஜனங்கள் கும்பல் கும்பலாக கூடிப் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தக் காட்சி எனக்கு பிரமிப்பையும் பீதியையும் எழுப்பியது. தனித்து நின்ற ஒருவரிடம்விஷயத்தை விசாரித்தேன். அவர் இரண்டு விளுடிகளில் சமாசாரத்தைச் சொல்லிவிட்டார். அப்பப்பா! என்ன பயங்கரமான விஷயம்! 'அன்று மாலை தஞ்சாவூரிலிருந்து கிளம்பியமாயவரம் பாசஞ்சர், ஆடுதுரைக்கு அடுத்தாற்போல் கவிழ்ந்துவிட்டது! ஏகச்சேதம்! அதில் தான் பட்டாமணியத்தின் பெண்ணும். தாயாரும் பிரயாணம் செய்தார்கள்! பட்டாமணியம் பிளஷர்கார் அமர்த்திக் கொண்டு கும்பகோணம் ஆஸ்பத்திரிக்

'உனக்கு ஒரு வேடிக்கை தெரியுமோடா கண்ணு! கார்த்தாலே கோட் பாக்கெட்லே 10 ரூபா நோட்டு ஒண்ணு வெச்சிருந்தேன். இப்போப் பார்த்தா அது 5ரூபா நோட்டா மாறியிருக்கு... !

"நான் ஒண்ணும் உங்க பணத்தை எடுத்து நகை பண்ணி போட்டுக்கலே நெய்க்காரன் வந்து பழைய பாக்கி 5 ரூபாவைக் கொடுத்தாத்தான் போவேன்னு பழியா உட்கார்ந்திண்டிருந்தான் உங்கக்கிட்டே அப்புறம் சொல்லிக்கலாம்னு கோட்டுப் பையிலேந்து எடுத்துக் கொடுத்தேன்."

குப் போயிருக்கிறார்! அங்கிருந்து என்ன செய்தி வருகிறதோ என்றுதான் எல்லோரும் காத்துக்கொண்டிருந்தார்கள்' என்று அந்த ஆசாமி சொன்னார்.

என் இதயத்தையே இரும்புச் சம்மட்டிகொண்டு அடிப்பதுபோலிருந்தது. 'அடாடா! நாம் மாத்திரம் இன்று ஜம்பர் தைத்துக் கொடுக்காமலிருந்தால், மங்களம் இந்த துரதிருஷ்ட ரயிலில் பிரயாணம் செய்திருக்கமாட்டாளல்லவா? அடடா! வாசுவின் வார்த்தையைக் கேட்டிருந்தாலும், இந்த விபத்திற்கு ஆளாகியிருக்கமாட்டாளே!' என்று உள்ளம் துடித்தது, என்னை அறியாமலேயே நடந்து என் கடைத் திண்ணைக்கு வந்தேன்.

அப்போது வாசுவின் வீட்டு வாசலில் ஒரு பிளஷர் கார் நின்றுகொண்டிருந்தது. அவசரம் அவசரமாக வாசு அதில் புறப்பட யத்தனம் செய்துகொண்டிருந்தது தெரிந்தது. 'சரிதான்! அவனும் கும்பகோணத்திற்குத்தான் போகிறான். நாமும் கூடப் போகலாம்' என்று எண்ணி வாசுவிடம் தயங்கிக்கொண்டே போனேன். 'முனிசாமி! வா! வா! உனக்கு விஷயம் தெரியுமல்லவா? இதோ கும்பகோணத்திற்கு புறப்பட்டுக்கொண்டிருக்கிறேன் நீயும் எனக்கு துணைக்கு வருகிறாயா?' என்றான், பதில் பேசாமல் காரில் ஏறி உட்கார்ந்தேன்!

கும்பகோணத்தை அடையும்போது இரவு ஒன்பது மணிஆய்விட்டது மனதோ திடுக்திடுக் என்று அடித்துக் கொண்டது. எத்தகைய செய்தி காதில் விழுமோ என்ற பயம்! நல்ல வேளை! ஆஸ்பத்திரி வாசலிலேயே எங்கள் அதிர்ச்சி நீங்கி விட்டது பட்டாமணியம் தன் தாயாருடனும். மங்களத்துடனும் காரில் ஏறிக்கொண்டிருந்தார். வாசு தன் குடும்ப மனஸ்தாபங்களையெல்லாம் விட்டு விட்டு அவரை அணுகி "மாமா! மங்களத்திற்கு ஒன்றுமில்லையே?" என்றான் அந்தக் குரலில் தான் எத்தகைய உணர்ச்சி!

சுப்புசாமி ஐயரும் தயங்காமல் பதிலளித்தார், "ஒன்றுமில்லையப்பா! ஆண்டவன் காப்பாற்றி விட்டார்! இவர்கள் வண்டிக்கு சேதம் இல்லை! மன அதிர்ச்சி மாத்திரம்தான்!...... நீயும் காரில் ஏறிக் கொள்ளேன்!" என்றார். அந்தக் குரலிலே ஒலித்த இனிமை. அவர் பழைய மனஸ்தாபங்களை மறந்து விட்டதாகவே தெரிவித்தது "இல்லை! மாமா! நானே ஒரு காரை அமர்த்திக் கொண்டுதான் வந்தேன். எனக்கு அங்கிருக்க மனம்தாளவில்லை" என்றான். இருவர் கார்களும் புறப்பட்டன!

"முனிசாமி! நீ மாத்திரம் ரொம்ப யோக்கியமாக துணிகளைத் தைத்துக் கொடுக்காமலிருந்தால், மங்களம் ரயிலில் புறப்பட்டிருக்கமாட்டாள். இத்தகைய மனக் கலக்கமும் ஏற்பட்டிராது!" என்றான். அவன் சொன்னதில் உண்மை இருந்ததுபோல்தான் எனக்குத் தோன்றியது! அதிலிருந்து நான் எனக்கு வேண்டியவர்கள் ஒருவருக்கும் குறிப்பிட்ட நேரத்தில் தைத்துக் கொடுப்பதில்லை."

5

முனிசாமி பேச்சை நிறுத்தினான் அப்போது அவன் கையிலே பாவாடையும் உருவாகியிருந்தது. பாவாடையை வாங்கிக் கொண்டேன். "முனிசாமி! உன் கதை படே ஜோர்! ஆனால் என் பெண் ஒரு ஊருக்கும் போகப் புறப்பட்டுக்கொண்டிருக்கவில்லை! அதைத் தடுக்க வாசுவைப் போல் அவளுக்கு ஒரு காதலனும் ஏற்படவில்லை! அவளுக்கு வயது ஐந்துதான்" என்று சொல்லிக் கொண்டே கிளம்பினேன்.

"எலிக்ஸிர் அஸ்வகந்தா"

★

மஹரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி, வயிறு, முதுகு, இடுப்புவலிகள் ஒழிந்து, நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர, இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது

"எலிக்ஸிர் அஸ்வகந்தாவே".

40 தோலா கொண்ட டின் ரூ. 10. தபால் செலவு பிரத்யேகம்.

★

ஆயுர்வேத வைத்தியர்

T. V. ஜெயராம சாஸ்திரிகள்,

வீரராகவ வைத்தியசாலா,

ஸ்ரீரங்கம். P. O S. I.

பாத்ருடுவின் "பால சஞ்சீவினி" (Regd.)

Phone: 84254.

குழந்தைகளின் சுரல், குலை ஜுரக்கட்டி வியாதிகளைச் சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான் அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாறாதீர்கள்

Dr. பிள்ளா பாபய்யா பாத்ருடு & பிரதர்,

19, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7 சாரங்கபாணி கோவில் கீழ வீதி

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்ட்.

"வீயார்"

★

பெரிய நகரங்களிலுள்ள சினிமாக் கொட்டகைகளில் சனி, ஞாயிறுகளிலும், மற்றும் விடுமுறை நாட்களிலும் மத்தியானவேளையிலும். காலையிலும், மாட்டினி ஆட்டங்கள் நடவாமல் இருப்பதில்லை சில கொட்டகைளில் ஆங்கில, ஹிந்தி, ஸ்பெஷல் படங்களும், சிலவற்றில் வழக்கம் போல் நடக்கும் தமிழ், தெலுங்கு படங்களும், காண்பிக்கப்படுகிறது அது எந்தப்படமாயினும் கூட்டத்திற்கு குறைவில்லை. சினிமா ஆட்டம் 9½ மணிக்கு ஆரம்பமென்றால் 7 மணிக்கே க்யூ'வில் நிற்க ஆரம்பித்து விடுகிறார்கள், அதே போல் 3 மணி ஆட்டத்திற்கு 12-30 மணிக்கே கூட்டம் பதை பதைக்கிற வெய்யிலில் கால்கடுக்க நின்றுகொண்டு அவர்கள் படும் அவஸ்தை (பூரிப்பு என்றுதான் அவர்களுக்கு தோன்றுகிறது!) சொல்லத்தரமில்லை ஆனால் இதே ஜனங்கள் ஸ்டேஷனில் டிக்கட் வாங்கும்போதோ, அல்லது ஒரு பொதுஸ்தலத்திலிலோ சிறிது நேரம் அதிகம் நிற்கும்படி ஆகிவிட்டால் டிக்கட் கொடுப்பவருக்கும், நிர்வாகிகளுக்கும் ஒருவர் மாற்றி ஒருவர் கொடுக்கும் அர்ச்சனைகள் காது கொடுத்து கேட்கமுடியாது நான் ஒரு சமயம் ஒரு கோவிலுக்கு ஸ்வாமி தர்சனம் செய்யச் சென்றேன் அன்று ஏதோ விசேஷம் ஒரே கூட்டம் அர்ச்சனை செய்ய ஏராளமான பேர் வந்திருந்தனர் உள்ளே குருக்களோ இருவர்தான். ஏதோ அவர்களால் கூடுமானவரை சமாளித்துகொண்டுதானிருந்தனர். கூட்டத்தில் ஒருவர் வேண்டுமென்றே துடுக்குத்தனமாக 'எத்தனை நாழி ஐயா நிற்பது! சீக்கிரம் அர்ச்சனை செய்து கொடுமய்யா" என்று சற்று அதட்டலாகவே கூறினார். குருக்கள் ரொம்பவும் சாமர்த்தியசாலி அவர் உடனே 'ஏன் சினிமாவுக்கு போய் வெய்யிலில் 4-மணி நேரம் நிற்கலாம் சுவாமி சந்நிதியில் ½-மணி நேரம் நிற்பதால் உமது வேலைகெட்டு கால் கடுத்து பசிகூட வந்துவிட்டதோ இந்த அதட்டல் உருட்டல்களை ஏன் அங்கே வைத்துக் கொள்வதுதானே?' என்றார். பேசியவர் மூச்சு விடவில்லை! இதே போல்தான் இருக்கிறது தற்சமயம் சினிமாக்களில் டிக்கட் வாங்கி சினிமா பார்க்கும் பாடு! முதல், இரண்டாவது வகுப்புகளில் சுலபமாக டிக்கட் பெறலாம்! வாஸ்தவம்! நம்மைப் போல் 'மிடில் கிளாஸ்' ஜனங்களின் பாடுதான் உலகில் (சினிமா உலகிலுங்கூட) திண்டாட்டமாயிருக்கிறது.

இந்த ஆட்டங்களுக்கு பெண்களும் அதிகம் வர ஆரம்பித்துவிட்டனர். ஏதோ பத்திரிகையில் பார்த்தேன். அவர்கள் முகம் சிவக்க, காலில் ரத்தம் கட்ட வியர்க்க வியர்க்க க்யூவில் நின்று தவம் செய்யும் விபரங்களை அக்கூட்டத்தில் பெண்மணிகள். குழந்தைக் குட்டிக்காரிகளாக இருந்துவிட்டால் கேட்கவேண்டியதில்லை

சில கொட்டகைகளில்தான் இந்த 'க்யூ ஏற்பாடு பாக்கி உள்ள தியேட்டர்களில் 'முண்டனுக்கு முதல் பாக்கு வெற்றிலை ஒரே கலாட்டா சினிமா பார்ப்பதற்கென்று அலங்கார உடை அணிந்துவந்த ரஸிகர் அலங்கோல உடையுடன் உள்ளே நுழைவதைப் பார்க்கலாம் இந்தக் கலாட்டாக்களை போலீஸாரோ, அல்லது தியேட்டர் சொந்தக்காரர்களோ கண்ணெடுத்துப் பார்ப்பதில்லை இது மாட்டினிகளுக்கு மட்டும் ஏற்பட்டதல்ல.

'க்யூ'வில் டிக்கட் கொடுக்கும் வழக்கமுள்ள தியேட்டர்களில், சென்ற வாரம் கலாமண்டபத்தில் வெளியானது போல் கள்ளமார்க்கட் தாண்டவமாடுகிறது. அதை அகற்ற சில தியேட்டர்களில் ஒருவருக்கு ஒரு டிக்கட் வீதம் கொடுக்கிறார்கள் அதனால் ஏற்படும் சங்கடங்கள் சில நாம் இரு நண்பர்களுடன் போவதானால் மூவரும் ரயில் போல் கோத்துக் கொண்டுதான் உட்செல்ல வேண்டும், பெண்டு பிள்ளைகளுடன் போவார்கள் பாடும் திண்டாட்டந்தான்

இந்த மாட்டினி ஆட்டங்களில் சிறுவர்கள், மாணவர்கள்தான் அதிகம் தென்படுகிறார்கள். படமோ சொல்ல வேண்டியதில்லை ஆங்கிலம்! அரை முக்கால், கால் நிர்வாணப்படங்கள்" இதனால் ஏற்படும் தீமைகள் பற்றி முன்பே 'கலாமண்டபத்தில்' வெளியாயிருக்கிறது, அதை நான் இங்கு மறுமுறை கூறவேண்டியதில்லை.

பொதுவாகவும், கடைசியாகவும் மாட்டினி காட்சிகள் சம்பந்தமாக கீழ்க்கண்ட குறைகளை தியேட்டர் முதலாளிகள் கையாண்டால் சவுகரியமாயிருக்காதா என்று தோன்றுகிறது

1. காலை 8 மணிக்கு ஒரு காட்சியும் மாலை 4-15 மணிக்கு ஒரு காட்சியுமாக வைக்கலாம். (அநேகமாக ஆங்கில ஹிந்தி படங்கள் 2 மணி நேரத்திற்கு மேல் ஓடாது)

2. டிக்கட் கொடுக்கும் ஸிஸ்டத்தை நல்ல முறையுல் மாற்றி அமைக்கலாம் டிக்கட் வாங்கு மிடங்களின் மேல் ஏதாவது சூரிய வெளிச்சத்தை தடுக்க ஏற்பாடுகள் செய்யலாம்

3. பெண்களுக்கு தனியாக டிக்கட் கொடுக்க ஏற்பாடு செய்வதை அவர்களை கொட்டகைக்குள்ளேயே விட்டு பணத்தை வசூலித்து டிக்கட் பெறச் செய்யலாம்.

4 சிறுவர், மாணவர்கள் அதிகம் வருவதால் ஆபாச ஆங்கிலப்படங்கள் காண்பிப்பதை கூடியவரை குறைத்து விடலாம்.

கோதுமை ரேஷன் காரணமாக இவர்கள் ரொட்டி செய்ய உட்கார வில்லை. ஹிந்திப்படம் 'பிஜ்லி'யில் இது ஒரு காட்சி.

நமது பம்பாய்க் கடிதம்

தந்தையும் மகனும்

சினிமா மிகவும் பிரபலமான பிறகு, வெகு சிலரே நாடகத்திலும் ஊக்கம் செலுத்தி, நல்ல பெயர் எடுத்திருக்கிறார்கள். சினிமாவிலும் பிரசித்தமாக பெயர் எடுத்து, நாடகத் துறையிலும் மெச்சத்தகுந்தபடி சோபித்து, நாடகக் கலையைமேலும் மேலும் விருத்தி செய்ய வேண்டுமென்று பாடுபடுபவர் பம்பாயில் ஒருவரே. இவர்தான் கீர்த்திபெற்ற நடிகர் பிரிதிவிராஜ்.

ஹிந்துஸ்தான் சித்ராவின் 'பிஜ்லி'யில் தண்ணீர் மொள்ளச் செல்லும் ரேஹனு.

பிரிதிவிராஜ் கபூர் மிகுந்த அனுபவமும், திறமையும் வாய்ந்த நடிகர். இவர் ஒருநாள் சினிமாவில் நடிக்க ஸ்டுடியோவுக்குச் செல்லாவிட்டால், அன்று நாடக மேடையில் இருப்பார். நாடக மேடையில் இல்லாவிட்டால், ஏதாவது ஒரு ஸ்டுடியோவில் காமிராவுக்கு முன்னால் நடித்துக்கொண்டிருப்பார். ஆகையால் இவரைக் கண்டுபிடித்து, பத்து நிமிஷமாவது பேச உட்கார வைப்பதற்குள் எனக்கு போதும் போதுமென்று ஆகிவிட்டது

தகப்பனுக்குக் கட்டளை

அன்றொருநாள், நான் இவருடைய மகன் ராஜ்கபூர் தயாரிக்கும் 'அவாரா' என்னும் படத்தின் ஷூட்டிங்கைப் பார்க்கப்போயிருந்தேன். அங்கு பிரிதிவிராஜ் தன் மகனின் கட்டளைப்படி நடித்துக்கொண்டிருந்தார். ஸ்டுடியோவில் பிரிதிவிராஜும், ராஜ்கபூரும் தகப்பன், மகன் மாதிரியே தோன்றவில்லை. மிக்க பயிற்சியுள்ள பிரிதிவிராஜின் நடிப்பை, மகன் ராஜ்கபூர் திருத்தி, எப்படி நடிக்கவேண்டுமென்பதைச் சொல்லிக்கொண்டிருந்தார். இதை கவனித்துக் கொண்டிருந்த எனக்கு மிகவும் வேடிக்கையாகயிருந்தது. பிரிதிவிராஜின் நடிப்பின் பகுதி சற்று முடிந்தவுடன், அவருடன் சற்று பேச உட்கார்ந்தேன்.

'நான் நடிகன்'

'நடிப்புக் கலையில் தேர்ந்தவராகிய நீங்கள், எப்படி அவ்வளவு அனுபவமில்லாத மகனின் புத்திமதிகளை ஏற்றுக்கொள்கிறீர்கள்," என்று முதன் முதலாக கேட்டேன். இதற்கு, பிரிதிவிராஜ் சொன்னார்: 'ஸ்டுடியோவிற்குள் இருக்கும் செட்டில், நான் ஒரு சாதாரண நடிகன்தான் மற்ற கலைகளைப்போல், நடிப்புக் கலைக்கு எல்லையே கிடையாது மேலும் என் மகன் டைரக்டர் அவனுக்குத்தான் என்னைக் காட்டிலும், ஒவ்வொருவரும் எப்படி நடிக்கவேண்டுமென்று தெரியும். நான் நடிப்பதற்கு ராஜ்கபூரிடமிருந்து பணம் வாங்குகிறேன் ஆகையால், நடிகனுகிய நான், டைரக்டர் சொற்படி நடக்கவேண்டியதே"

பிரிதிவிராஜ் தன் மகனின் விஷயங்களில் தலையிடுவதேயில்லை இருவரும் ஒரே வீட்டில் இருக்கிறார்களே தவிர, ஒருவருடைய சங்கதி மற்றவருக்குத் தெரியாது இருந்த போதிலும், அவர்களுக்குள் இருக்கும் ஒற்றுமையும் அன்யோன்யமும் மிகவும் பாராட்டத்தக்கது தன்னைக் காட்டிலும், தன் மகன் தற்சமயம் பிரசித்திபெற்று செழிப்பான நிலைமையில் இருக்கிறானேயென்று, பிரிதிவிராஜ் மிகவும் குதூகலப்படுகிறார். எந்தத் தகப்பனுக்குதான் இந்த நிலைமையில் மகிழ்ச்சியிருக்காது?

இந்தியப்படங்களுக்கு இன்றியமையாத டான்ஸ் கிளம்பிவிட்டது. 'பிஜ்லி'யில் நடிகை ஷிதாரா.

இன்றைய படங்கள்

சினிமாவைப்பற்றிப் பேசுகையில் பிரிதிவிராஜ் தற்காலப் படங்கள் மிகவும் மோசமாகயிருக்கிறதென்றும், முன் காலத்துப் படங்களைக் காட்டிலும், இப்பொழுது தயாரிக்கும் படங்கள் மிகவும் இழிவான நிலைமையில் இருக்கிறதென்றும், சினிமாவில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும்—பட முதலாளிகள், டைரக்டர்கள், நடிகர்கள், மற்ற சிப்பந்திகள், சினிமா விசிறிகள்—ஒரு மனதாக உன்னதமாக படங்களைத் தயாரிக்கவேண்டுமென்று தீர்மானித்து அதன்படி நடந்தால்தான், சினிமா உருப்படுமென்று சொன்னார்

பட்டதாரி

பிரிதிவி ராஜுக்கு தற்சமயம் 44-வயதாகிறது இவர் செல்வாக்கு வாய்ந்த நல்லகுடும்பத்தில் பெஷாவரில் பிறந்து, பஞ்சாப் கல்லூரியில் பி ஏ. பட்டம்பெற்று வக்கீல் உத்தியோகத்திற்கு ஆயத்தமானார். ஆனால் இவர் சிறு வயதிலிருந்து, பள்ளியில் நடித்துக்கொண்டிருந்ததாலும், இக்கலையில் இருக்கும் ஊக்கத்தினாலும், சினிமாவில் 1929-ம் வருஷம் சேர்ந்தார் இவருடைய முதல் படம் "சினிமாப் பெண்" இவர் இதுவரையில் 60-படங்களுக்கு மேல் நடித்திருக்கிறார். "சிகந்தர்" என்னும் படத்தில் இவர் மிகவும் அபாரமாக நடித்ததால், அதிலிருந்து இவருக்கு நல்ல பெயர் கிடைத்தது

பிரிதிவிராஜின் நாடகங்கள் பம்பாயில் மிகவும் புகழ்பெற்றுவிட்டன இந்த நாடகங்களில் "சகுந்தலா" 'தீவார்' 'பதான்" "சத்தார்" இவைகளைச் சொல்லவேண்டும் தன் நாடகக் கம்பெனியுடன், சில சமயங்களில், இந்தியாமுழுவதும் சுற்றுப்பிரயாணம் செய்கிறார். நல்ல வசீகரமும், உயரமும், அகன்ற மார்பும், தாராள மனதும் படைத்தவர் பிரிதிவிராஜ்

தி. மா. ராமச்சந்திரன்.

படுக்கையிலும் கவர்ச்சி காட்டும் இந்தப் பைங்கிளிதான் கீதாபலி. பாவேர் நயன் என்ற ஹிந்திப்படத்தில் கூரைமேல் படுத்து சோக ரஸத்தைக் காட்டவேண்டிய அவசியம் நேரிட்டிருக்கிறது.

இந்த மீசைக்கார பிரிதிவிராஜ் 'தாஹோ' ஜில் நடிக்கிறார்.

இந்தியாவில் நாடகம்

★

[சக்திதாஸன் சுப்ரமண்யன்]

தமிழ் நாட்டு நாடக மேடையிலே சுகுண விலாஸ சபா செய்த சீர்திருத்தங்களைப் பற்றிச் சென்றவாரம் குறிப்பிட்டிருந்தேன் அதன் பிறகு கன்னையா கம்பெனி புகுத்திய புதுமைகளைப் பற்றியும் சொன்னேன்.

கன்னையா கம்பெனிக்குப் பிறகு தோன்றிய நாடகக் கம்பெனிகள் பல. நடிகர்களும் பலர் சமீபத்தில் மூட்டப்பட்ட டி கே. எஸ். சகோதரர்களின் பால ஷண்முகானந்த சபா,, நவாப் ராஜமாணிக்கத்தின் தேவி நாடக சபா இரண்டும் குறிப்பிடத்தக்கவை.

கால வெள்ளத்திலே மூச்சுப் பொறுக்காமல் மறைந்து போன

நாடகக் கம்பெனிகள் அநேகம் தவிர இன்னும் எவ்வளவோ அமெச்சூர் நாடக சபாக்கள். தோன்றியிருக்கின்றன; மறைந்துமிருக்கின்றன.

இப்படியாக நாடகக் கம்பெனிகள் வளர்ந்த போதிலும் நாடக தியேட்டரானது அன்றுபோல் என்றும் அசையாதிருக்கிறது. வளர்ச்சி என்பதே இல்லை.

இப்போது தமிழ் நாட்டிலே நாடகக் கொட்டகைகளே கொஞ்சம்; அவற்றிலும் பெரும்பாலானவை மாட்டுக் கொட்டகை மாதிரிதான்: கலையுணர்வு கொஞ்சமும் தலை காட்டாத இடங்கள்!

சென்னை ராஜ்யத்தின் தலைநகரான சென்னையிலே 'கலை' பற்றிய ஆரவாரம் பிரமாதமாக அடிக்கடிக் கேட்கிறது.

நவீன முறையில் எவ்வளவோ கட்டிடங்கள் தினமும் தோன்றிக்கொண்டிருக்கின்றன. சினிமா தியேட்டர்கள் முளைக்கின்றன. ஆனால், நவீன முறையில் நல்லதாக ஒரு நாடகம் போடவேண்டுமானால், ஒரு தியேட்டர் கிடையாது தியேட்டர் அமைப்புக் கலையானது மேற்கு நாடுகளிலே பிரமாதமாக வளர்ந்துவிட்டது அதன் சாயல்கூட நம் தமிழ் நாட்டில் விழவில்லை. ஆனால், கலை கலை என்கிற பேச்சு என்னவோ பிரமாதமாகத்தானிருக்கிறது.

மின்சாரத்தின் உதவியாலே தியேட்டர்களிலே எவ்வளவோ புதுமைகளை உண்டுபண்ணி விட்டார்கள் மேற்கு நாடுகளிலே. இன்றைய தினம் தமிழ் நாட்டு நாடக மேடையில் வெளிச்சம் போடுவதற்குத்தான் மின்சாரம் உபயோகிக்கப்படுகிறது. படுதாக்களை எல்லாம் இன்னமும் கயிறு கட்டி இழுத்துக் கொண்டுதானிருக்கிறோம். சமூகத்திலே புதுப்புது எண்ணங்கள் வளர்ந்துவிட்டன, அதற்குத் தகுந்தபடி நாடக மேடையானது முன்னுக்கு வரவில்லை.

இதற்கு முக்கிய காரணம் ஒன்று. நாடகத்தின்மீது அபிமானம் கொண்ட ரஸிகர்கள் அதிகரித்தார்கள். ஆனால், நாடக வளர்ச்சியில் அக்கரை கொண்ட அறிஞர்கள் அதிகரிக்கவில்லை.

சென்ற ஐம்பது வருஷங்களாக நாடகத்தையே தொழிலாகவும், ஜீவனோபாயமாகவும், கலையாகவும் போற்றி வாழ்ந்து இறந்தவர்கள் எண்ணிறந்தோர் இவர்கள் எல்லாம் ஜீவனோபாயத்துக்குவேறுவகையின்றி

நாடக மேடை ஏறினார்கள் என்று சொல்வது அறியாமை. எல்லாராலும் புறக்கணிக்கப்பட்டதும், ஜன சமுதாயத்துக்கு மிக முக்கியமானதும் ஆகியகலையை இவர்கள் அழியாமல் பாதுகாத்துக் கொடுத்தார்கள், வறுமையால் வாடிய போதிலும். விடாமல் இருந்தார்கள்

நாடகத்தைப்பற்றி இவர்கள் அறிந்ததெல்லாம் எப்படி? பரம்பரையாகப் பழைய இலக்கியங்களிலிருந்து வாத்தியார் சொல்லிக் கொடுத்ததும் நாடக மேடையானது தினசரி அனுபவத்தில் படிப்பித்துக் காட்டியதும் இப்படித்தான்,

மாஜி மனைவியான நார்கிஸ் மாஜி கணவனை அசோக் குமாரை காதலிக்கும் "ஆதிராத்" கதையை அசோக் டாக்கீஸ் திரையில் பாருங்கள்.

பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள் சங்கீத வித்யாலயங்கள், இன்னும் எவ்வளவோ ஸ்தாபனங்கள் தினமும் தோன்றுகின்றன. ஏராளமாயிருக்கின்றன. ஆனால் நாடகம் போன்ற–நடிக்கிற கலையைச் சொல்லிக் கொடுப்பதற்கென்று எங்கேயாவது ஒரு பள்ளிக்கூடம் இருக்கிறதா?

சர்வகலாசாலைகள்! பேர் எப்படி? இந்த சர்வகலாசாலைகளிலே நாடகக் கலைக்கு இடமிருக்கிறதா? அமெரிக்கா தேசத்திலே ஒவ்வொரு சர்வ கலாசாலையும் நாடகக் கலையை போதிக்கிறது. நம்முடைய தமிழ் நாட்டிலே அதற்கு வழியே காணோம்.

நாடகத்தின் தன்மை உயரவில்லை உயரவில்லை என்றால், அதெப்படி உயரும் நல்ல நாடகங்களை ஆதரிப்பதற்கான ரஸிகர்களை உண்டுபண்ண வேண்டும் இந்த வேலையானது தொடங்கப்படவேண்டிய இடம் பொதுஜன மேடை அல்ல. பள்ளிக்கூடம்.

பள்ளிக்கூட பாட திட்டத்திலே நடிப்புக்கும் இடம் அளிக்கவேண்டும், நடிப்புக் கலையை போதிக்கவேண்டும்.

தவிரவும் இப்போதெல்லாம் நாடகம் போடுவதென்றால் செலவு அதிகம் பிடிக்கிறது என்று சொல்கிறார்கள் உடை, ஸீன் வாடகைக்காரர் வாங்குகிற பணம்கூட ஒரு நடிகனுக்குக் கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள்.

தமிழ் நாட்டிலே பெரிய நகரங்கள் குறைவு. கிராமங்களே அதிகம். பெரிய நகரங்களில் நாடகம் போடுகிறபோதுதான் செலவு அதிகம்.

நாடகக்காரர்கள் கிராமங்களில் நாடகம் போட்டால், செலவு அதிகம் பிடிக்காது ஸீன் ஸெட்டிங் முதலிய ஆடம்பரங்களைக் குறைத்து, உணர்ச்சி மிக்கநடிப்புக்கு முக்கியஇடம் கொடுத்தால் கிராம மக்கள் ரஸிப்பார்கள்.

(முற்றிற்று)



6

பின் வாசல்

'பட்டணத்தில் கூட இப்படி வீடு கிடையாது' என்று பவானி சொன்னாள், பட்டணம் முழுவதும் சர்வே பண்ணியவள் போல இப்படிச் சொன்னதும் காந்திமதிக்கு உச்சி குளிர்ந்துபோச்சு. எனக்குக்கூட காப்பியில்லாமல் அத்தனை காபியும் பவானிக்குக் கொடுத்துவிட்டாள் அடிக்கடி தங்க பிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியை துடைத்துக்கொண்டு அங்குமிங்கும் உலாவினாள்.

உங்கள் வீட்டுக்காரருக்கு உங்கள்மீது இஷ்டம் கிடையாதோ?

இஷ்டமா? கொள்ளை கொள்ளையாக இஷ்டம் என்று சொல்லுவாள் என எதிர் பார்த்தேன் அவள் இல்லையென மறுக்கவுமில்லை.

'ஏன்?' என்று மாமியார் காரி கேட்டாள்

பொதுவாக, வீடுகளுக்கு வீட்டுத் தெய்வத்தின் பெயரை இடுவதே பழக்கம். உங்கள் பெயரையொட்டி விடாமல், நிலா முற்றம் என்பது நன்றாகவேயில்லை' என்றாள் பவானி

செத்த பாம்புக்கு உயிரூட்டி விஷமேற்றுவது போல, மனசில் பட்டாலும் அதுவும் அவள் பெயர்தானே நிலா என்றால் மதி மதி என்பது காந்திமதியின் சுருக்கம் இன்னொரு வகையாகப் பார்த்தால் மதியின் காந்தி—நிலா வீசுமிடம் எது நிலா முற்றம்! காந்திமதி விலாஸ் என்பதைவிட நிலா முற்றம் என்பது மறைபொருள் வைத்துள்ள...'என்று இந்த ரீதியில் சொன்னேன்

பவானிக்கு விட்டுக்கொடுக்காமல், ஆமாம் அப்படித்தான் பெயர் இடப்பட்டது என்றாள் காந்திமதி எனக்கு ஒரே உத்சாகம் அந்தச் சமயம் யாரும் அங்கே இல்லாவிட்டால் என்ன நடந்திருக்குமோ?

இவ்வளவு இடத்தையும் தரிசாகப் போட்டிருக்கிறீர்களே எங்கள் பட்டணமென்றால் விட்டு வைப்போமோ? செடிகொடிகள்!'

'எங்களுக்கும் அதே தான் எண்ணம்' என்றேன் அந்தப் பெண் சற்றும் கூச்சமின்றி என்னெதிரிலேயே கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்து பேசிற்று. என் மாமியார் ஒரு தினுசாகப் பார்த்தாள்

'முயல்–குழி முயல் ரொம்ப அழகாக இருக்கும் பந்து பந்தா ஓடி யாடித் துள்ளும் வளர்க்கலாமே' என்றாள்

நான் கேள்வி முயல் தவிர வேறு முயல் பார்க்காதவன், முயல், ஆந்தை, கோட்டான் எதுவுமே பிடிக்காது! என்றேன்

"சில வீடுகளில் பட்டணத்தில் கருங்குரங்கு வளர்க்கிறார்கள்." என்று பெருமையாகச் சொன்னாள்

"ஓகோ அதுதான் பட்டணத்துலே பவுடர் நிறையப் போடுகிறார்களோ!" என்று மாமியார் சொன்னாள் பவானியும் கன்னத்துக்கு மேலாக நாலு இஞ்சு பவுடர் அப்பியிருந்தாள், ஆனால் ஆள் மட்டும் சிகப்பு ரத்தம் வற்றிப் போன சிகப்பு

பின் வாசலில் கண்டிப்பாக முயல் நிற்கலாம் இல்லை மான் வளர்க்கலாம் எங்கள் சித்தப்பாவின் ஷட்டகர் காட்டிலாகா உத்தியோகஸ்தர் மான் பிடித்து தரச் சொல்லுகிறேன்.

'இது என்ன அரண்மனையா? மான் நிற்க இடம் போதாது.

மானை நீங்க பார்த்ததில்லை யென்று தெரிகிறது. மான் ஒரு கன்றுக்குட்டி உயரம் இருக்கும் என்று உயரம் பருமன் காட்ட ஆரம்பித்தவள் கீழே தரையில் மான் படமும் போட்டுக் காண்பித்தாள், அவள் போட்டது மான்படமென்று சொன்னால் உலகத்திலுள்ள எருமைக் கன்றுகள் உயிரைவிடவேண்டும் சோணிக்கன்றுக்குட்டி மாதிரி போட்டாள்.

'மானை பார்த்திருக்கிறேன் என்றேன் என் வார்த்தையைச் சொல்லும்போது மானைப் பார்த்திருக்கிறேன் என்று அர்த்தம் மட்டுமே மனசில் இருந்தது, சொன்ன பிறகு தான் 'மானே' என்பது பெண்ணைக் குறிப்பதாக குறிப்பறிந்தேன் காந்திமதியும் சற்று கடுமையாக என்னைப் பார்த்தாள். அவளுக்கு வந்த கோபத்தில் லபக்கென்று இன்னொரு நாற்காலியில் உட்கார்ந்துவிட்டாள். நான் வியர்த்து விறுவிறுத்துப் போனேன்.

பின்பக்கம் பின் வாசலில் என்ன போடலாம்?

'போடுவது ஒன்றும் வேண்டாம், மரம் பயிர்வைக்கலாம், ஆரஞ்சு கொய்யா என்ருள்

''மரம் பயிர்வைத்தால் குரங்கு வரும் என்ருள் காந்திமதி

' இந்த ஊரில் குரங்கு தொல்லை யுண்டா பட்டணத்தில் ஒரு குரங்குகூடகிடையாது. முருங்கைமரம் இருக்கிறதோ, உங்கள் பிளான்படி?

'முருங்கைமரம் இல்லையே' என்றேன்.

'வேதாளம் வருமோ வராதோ. இழை இழையாக நசு வினி பூச்சிகள் கம்பிளி பூச்சிகள் நெளியும்' என்ருள்

'முன்வாசல் அலங்காரம்கூட அவ்வளவு முக்கியமில்லை, பின்வாசல் துப்பரவு வேண்டும். பின் வாசலில் இங்கெல் லாம் பெண்கள் நடமாட்டம் அதிகம் அதனுல் அவர் களுக்குப் பிரியமான வஸ்துக்களை இங்கேயே விட்டுவிட வேண்டும்,

'கருவேப்பிலை மரம், கொத்தமல்லிப் பாத்தி, இவை பின் வாசல் பக்கம் இருக்கவேண்டும்' என்ருள் காந்திமதியின் தாய்,

'இருக்கட்டு' மென்றேன்.

'இங்கே இருந்தாரே அவர்பெயர் என்ன சொன்னீர்கள்?' என்ருள் பவானி, திடீரென்று

'நீ இரங்காயெனில்' என்றேன்.

'ஏன்?' என்ருள் காந்திமதி, பவானி முகத்தைப்பார்த்து.

'சும்மாதான் கேட்டேன் அவரை பட்டணத்தில் பார்த் திருப்பதாக நினைப்பு வந்தது,'

'எங்கே பார்த்தீர்கள்?' என்றேன்.

'பின் வாசலில்' என்றவள் சொன்னதற்காக உதட்டைக் கடித்துக் கொண்டாள். அவனைக்கண்டு பயந்து ஓடினதில் குட்டு இப்போதுதான் புரிந்தது ஆனுல் காரணம்?

நீ இரங்காயெனிலுக்கும் பின் வாசலுக்கும் சம்பந்தம் என்ன?'

'ஒன்றுமில்லை மதராஸில் எங்கள்வீட்டு அடுத்த வீட் டில் ஒருநாள் மாலை இவரைப் பார்த்தேன்'

'மாலையென்ருல், சாயங்காலம்தானே?' என்றேன்.

'மாலைக்கு வேறு என்ன பொருள்?'

'கழுத்தில் விழுந்தமாலை' என்று படிக்காண்பித்தேன்,

'நானே மாலை யென்ருல் நீங்கள் காமாலையென்கிறீர் களே, பாருங்கள் காந்திமதியம்மா. உங்கள் புருஷர் பெரிய வாயாடி' என்ருள்,

'தவருக எண்ணிவிடக்கூடாது. அடுத்த வீட்டுப் பின் பக்கத்தில் நீ இரங்காயெனில் நின்றுகொண்டிருந்தான் அப்புறம்' என் கதையை வளர்த்தினே

'சும்மா நிற்கவில்லை கனியைத் திருடி?' என்றதும் 'பவானியம்மா. கனியா கன்னியா' என்று கேட்க ஆசை பிறந்தும் நாவடக்கிக்கொண்டேன்,

'எங்கள் வீட்டுக்குக் கீழ்பக்கம் இவர் வந்து தங்கிய வீடு, அதற்கு கீழ் பக்கத்து வீட்டிலே நல்ல ஒட்டு மாங்கனி. அதை சுற்று முற்றும் பார்த்தபடியே பறித்தார். அந்த மரத்துப் பழம் கற்கண்டு மாதிரி இருக்கும் இதை நான் பார்த்து விட்டேன்.'

'அடடா அப்புறம் கூச்சலிட்டீர் களோ?''

'ஊரான் தோட்டத்தில் யாரோ திருடிஞல் நான்யேன் கூச்சல் போட வேண்டும்? சும்மா இருந்தேன். இரண்டு பழங்களையும் பறித்தார். அப்புறமும் பறிக்கப் போனபோது 'யாரங்கே' என்று பொய் குரலில் கத்திவிட்டு மல்லிகைப் பந்தலுக்குள் ஒளிந்துகொண்டேன்.

'அப்படியா விஷயம், நீ இரங்கா யெனில் அண்ணு வரட்டும் கேட்க லாம்' என்ருள் மதி.

'பறித்த மாம்பழங்களை அப்படியே. போட்டுவிட்டு வீட்டுக்குள் ஓடினுர். நான் அதை எடுக்க போகலாமா வேண்டாமாவென்று திகைத்த சமயம், சொந்தக்காரரே வந்துவிட்டார். அதனுல் கைக்கெட்டிய பழங்கள் வாய்க்கெட்டாமல் போய்விட்டன.'

'அதனுல்தான் நீ இரங்காயெனும் போய்விட்டான். அதனுல் பின் பக் கத்துக் கொல்லையில் மாமரம்—அதா வது ஒட்டு மாங்கன்று வைப்பது நல்லது என்கிறீர்கள்'

'செவ்விளநீர் பார்த்திருக்கிறீர்களா? அதுவும் நல்லது' என்ருள்.

'பின்புற வாசலிலே ஒட்டுமாங் கன்றுகளும் செவ்விளநீர் தென்னங் கன்றுகளும் வைப்பதென முடிவு செய்தோம். குழி தோண்டி மண்ணை ஆறப்போட்டு உரம் அடித்துவிட் டோம். உயர்ந்த ஜாதி மரங் களுக்கும் வித்துக்களுக்கு புஷ்பச்

செடி வகைகளுக்குமாக ஸ்ரீரங்கம் போய்வந்தேன். செடி கொடிகள் வித்துகள் வாங்குவது முக்கியமல்ல வென்றும் இந்தச் செடி கொடி களுடன் பழகிய நபர் தோட்ட வேலைக்கு நல்ல ஆள் வேண்டுமென் றும் சொன்னுர். தோட்டம் சில வருஷங்களில் பலன் தரும் காலத்தில் தோட்டச்செலவும் வீட்டு விறகும் மற்றும் பல வகை லாபங்களும் கிடைக்குமென்று ஆசைகாட்டினுர் தோட்டத்திலே மாதம் சராசரி இரு நூறு ரூபாய் வருமென்ருல் நிலா முற் றத்தின் பெருமை எப்படி வளரப் போகிறது



தோட்டக்காரன் வந்தான் செடி கொடிகள் வைக்கவேண்டிய இடங் களிலே கிணறுகள் பல தோண்டி ஞன் செடி கொடி இல்லாத இடங் களையெல்லாம் பள்ளத்தை மேடாக வும் மேட்டைப் பள்ளமாகவும் நிரவி அன்ருடம் ஐந்து பத்து செலவழித்து விட்டான். உரவண்டிகள் வந்தன. மணல் வண்டிகள் வந்தன, வண்டி கள் உள்ளே வரமுடியாதபடி குழிகள் தோண்டப்பட்டதால் மணலையும். உரத்தையும் முன் புறத்திலிருந்து பின் வாசலுக்கு அமைக்க கூலி ஆட்கள் சாரை சாரையாகப் புறப் பட்டார்கள். எப்போதும் வீட்டுக்குப் பின்ஞல் சந்தைபோல கலகலவென இருந்தது நாலு வருஷத்திலே தெனிந்தியாவிலே பழத்தோட்டத் திற்குப்பரிசும். ஏற்றுமதி,பெருக்கமும் எனக்கே கிடைக்கப்போகிறதாக கனவு கண்டேன்

இடையிடையே பவானி வந்து மண்ணை எப்படிப்போடுவது. மணல் எப்படிக் கலப்பது, விதையை எப்படி ஊன்றுவது. நாற்றுகளின் பாத்திக் குத் தண்ணீர் விலைகுவதில் ரகஸியம் என்ன. எப்படி உத்சாகம் தந்தாள் அவள் இருக்கும் வரை நீ இரங்கா யெனில் வரமாட்டான் என்று பட்டது. பவானி ஊருக்குப் போய்விட்டாள் என்று பொய் சொல்லி அழைத்து வந்தேன்.

பின் வாசலில் நடைபெற்றுக்கிடந்த பூகம்ப நிகழ்ச்சி யைப்பார்த்து ''என்னடா இது யானைகள்பிடிக்கிறகேடாக் கள்மாதிரி எங்கே பார்த்தாலும் குழிகள், இதெல்லாம் என்ன?'' என்ருன் காந்திமதி ஒவ்வொரு குழியிலும் வைக்கப்போகும் மரயினங்களைச் சொன்ஞள். கிண்டல் செய்துகொண்டிருந்தான் நீயிரங்காயெனில்.

இந்த வேளையில், 'காந்திமதியம்மா, சப்போட்டாச் செடியை மறந்துவிட்டோமே' என்று சொல்லிக்கொண்டு வரவும் அந்தக் குரலுக்குடையவள் பவானி என்ற பயத் தில் நீ யிரங்காயெனில் நழுவப் பார்க்கவே முடியாமல் போய் ஒரு தென்னம்பிள்ளைக்கு வெட்டிய குழியில்விழுந்து விட்டான். விழுந்ததை நாங்கள் பார்க்கவில்லை

'இங்கே உங்க நண்பர் நீ இரங்காயெனில் இருந்தாரே அவர் எங்கே?' என்ருன்

எங்கே? எங்கே?' யென்ற கேள்விகள் எழுந்தன. ஒவ் வொரு குழியாகத் தேட ஆரம்பித்தோம் பின்புறத்து வாசலெங்கும் நூற்றுக்கு அதிகமாக இருந்தபடியால் மூன்று பேரும் தேடினேும் ஆசாமி மூச்சுப் பேச்சுக்கூட விடாமல் விம்மிக்கொண்டான். தோட்டக்காரன் இந்த விஷயம் தெரிய கல் மண்ணையும் உரத்தையும் மணலையும் லாகவமாக கலந்து நிரப்பிக்கொண்டிருந்தான். அதற்குள் ளாகப் பதுங்கிய நீ இரங்காயெனில் சத்தம்போட முடி யாமல் கஷ்டப்பட்டிருக்கிருன். பவானி தட்டுத் தடுமாறி எங்கோ ஒரு குழிக்குள் விழுந்துவிட்டாள் நான் மட்டும் விழவேண்டியது பாக்கி. பவானி கத்துங் குரல் கேட்டு, காந்திமதியும் நானும் போய் அவளை மேலே இழுத்தோம். அவன் மேலே வந்தவுடன் அடுத்த குழியிலே போய் நீ இரங்காயெனில் இருக்கிருனு யெனப் பார்த்தாள். அங்கே யும் விழுந்து வைத்தாள்,

இப்படி அவனைத் தூக்கி காப்பாற்றுவதேபெரிய பாடா கப் போய்விட்டது ஒரு மட்டும் தோட்டக்காரன் செவ் விளநீர் கன்றை நடப் போகுமிடத்தில் செக்குலக்கை போல நீ இரங்காயெனில் நிற்பதைக் கண்டு கூச்சல் போட்டான் எல்லோரும போய் ஆசாமியை வெளியே இழுத்தால் வருகிருனு? குழியைத் தோண்டி ஆளை எடுப்ப தற்குள் பெரிய பாடாகப் போய்விட்டது

காந்திமதிக்கு ரொம்ப கோபம் பவானி பேச்சைக் கேட்டு வீட்டுப் பின் வாசலை யுத்தகளமாகச் செய்துவிட் டேன் என்று எரிச்சல். ஒரு மட்டும் பின் வாசலை வாசலா அது குழிகள் நிறைந்த பிராந்தியத்தை விட்டு வந்தோம்



அண்ணன்:—என்டி ஸரோ அழரே ?

ஸரோ:—வந்து...வந்து மாமா முத்தம் குடுத் தாட்டா அண்ணு......

'உங்களுக்கு ஒட்டு மாம்பழங்கள் நினைப்பிருக்கிறதா?' என்று கேட்டாள் பவானி

ஒன்றும் தெரியாதவனைப்போல 'எந்த ஒட்டுமாம்பழம்?' என்ருன் பவானி திடுக்கிட்டாள் தனக்கு நன்ருக நினைப்பிருக்கிறது இதே நபர் இரண்டு வருஷங்களுக்கு முன் திருடினது நினைவில் இருக்கிறது இப்போது இல்லையென்கிருரே

'எனக்கு நன்ருக நினைப்பிருக்கிறது. நீங்கள் திருடவில்லை?''

இல்லை'

''பொய் அன்று நான் கத்தியிருந்தால், உங்களை ஜெயிலில் வைத்திருப்பார்கள். ஞாபக சக்தியில் நான் யானையாக்கும்.

'ஆமாம் அதனுல் தான் குழிக்குள் விழுந்தீர்கள் பெரிய யானை . என்னிடம் பேசவேண்டாம்.''

'நீங்கள் மட்டும் விழவில்லையோ ?' என்று சிரித்தாள் பவானி

'இனிமேல் என்னைத் திருடன் அது இது என்று சொன்ஞல் நான் பொல்லாதவனுக இருப்பேன் என்னை யார் என்று நினைத்துக்கொண்டாய்: போனுல் போகட்டுமென்று ஒதுங்கிப் பிழைத்தால். ரொம்பவும் விரட்டுகிருயே சொல்லிவிடட்டுமா ? உன் குட்டை உடைத்துவிடட்டுமா?' என்ருன் எங்களுக்கு இந்த எதிர்பாராத சந்திப்பிலும் இவர்கள் தர்க்கத்திலும் சந்தோஷம், ஒரு பக்கம், சங்கடம் ஒரு பக்கம்.

இவ்வளவு நேரம் வெற்றி வீரர்களைப்போல் வீறிட்டு நின்ற பவானி பெட்டிப் பாம்பாய் அடங்கிப் போனுள். ஏன் பயந்தாள் ? என்ன நடந்தது ?

'தயவு செய்து மன்னித்துவிடுங்கள் உங்கள் வம்புக்கு வந்ததே தப்பு என் சிற்றப்பாவிடம் சொல்லிவிடாதீர்கள்?' என்று கெஞ்சினுள் கண்ணீர் வந்து இமை நிறைய தேங்கி நின்றது.

'ஐயோ பாவம் சரி வாருங்கள் போகலாம்' என்று பின் வாசலிலிருந்து வீட்டுக்குள் வந்தோம். கலங்கிய கண்ணும். சோபை கலந்த முகமும் பவானிமீது இரக்கம் பிறப்பித்தன. அவள் போனவள் அப்புறம் எங்கள் வீட்டுப்பக்கமே வரவில்லை. நாலைந்து நாட்கள் வரை நீ இரங்காயெனிலே தாஜா செய்து விஷயத்தைக் கேட்டால். பவானி இவனுக்கு காதற் கடிதம் எழுதியிருந்தாள் என்று தெரிந்தது. அந்தக் கடிதத்தை வைத்து அவளைப் பயமுறுத்தும் வாய்ப்புக்கிடைத்திருப்பதை பெருமையாகச் சொன்னுன்.

நானும் காந்திமதியும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இருவரையும் முடிச்சுப் போட நினைத்தோம். இருவரும் சம்மதிக்கவில்லை அதன்பின் பவானி வரவும் இல்லை.

பின் வாசல் சில வாரங்களில் சம தரையாக்கியதோடு சில பச்சை பசேலென தளிர்க்க ஆரம்பித்தன முன் வாசல் மேற் பார்வை எனக்கென்றும், பின் வாசல் கண் காணிப்பு காந்திமதிக்கென்றும் பங்கிடு செய்து கொண்டோம்,

பின் வாசலில் தோட்டக்காரன் எலுமிச்சையும் பலாவும் நிற்கவேண்டிய இடத்திலே சிறிதாக ஒரு குடிசை வேய ஆரம்பித்ததோடு, தனக்கு குடும்பம் இருப்பதாகவும் சொன்னுன் இனி என்ன செய்ய? அங்கே ஒரு புதிய குடும்பம் வளர ஆரம்பித்தது

மகளுக்குத் துணை வந்துவிட்டதால் மாமியாரும் புறப்பட்டுப் போய்விட்டாள் வீட்டு வேலை காந்திமதி தலையில் விழவே பின் பக்கம் முன்பக்கம் மேல்பார்வை என் தலையில் விழுந்தது எனக்கு ஏண்டாப்பா, வீட்டைக் கட்டி, தோட்டத்தை வளர்த்தோமென்று சிரமமாய் போய்விட்டது ஆனுலும் தன் குஞ்சு பொன் குஞ்சு என்ற சந்தோஷம் இருக்கத்தானே செய்யும்?

எனக்கும் அப்படி இருந்தது

(தொடரும்)



போலீஸ் வான் கான்ஸ்டேபிள்:—சே, சே, சே... நீங்களே இப்படி பண்ணிஞ......

சமீபத்தில் அஸ்ஸாமில் பூகம்பத்தினுல் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு இந்திய சேனுதிபதி ஜெனரல் கரியப்பா விஜயம் செய்தபோது எடுத்த படம்



நாஸிக்கில் உள்ள பான்ஸலே ராணுவப் பள்ளிக்கூடத்துக்கு பண்டித நேரு விஜயம் செய்தார். மாணவர்கள் குறிபார்த்துச் சுடப் பழகிக் கொள்ளுவதை அவர் பார்வையிடுகையில் எடுத்த படம்.



நாஸிக் காந்தி நகரில் காங்கிரஸ் மகாசபை பகிரங்கக் கூட்டத்தில் ராஷ்டிரபதி டண்டன் பேசினர். வலதுபுறமுள்ள படத்தில் சர்தார் படேலும், புருஷோத்தமதாஸ் டண்டனும் சந்தோஷமாக சம்பாஷிக்கின்றனர்.



சமீபத்தில் நேரு, சுவாமி ராமானந்த தீர்த்தருடன் ஹைதராபாத் பிரச்னைகள்பற்றி விவாதித்தபோது எடுத்த படமிது.

விளம்பரம் தேவை!

'வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் செய்தல்' என்ற புதுமொழிக்கு இணங்க இந்தக் காலத்தில், அப்பளத்திலிருந்து ஆஸ்த்துமா மருந்து வரை, கடுகிலிருந்து கப்பல் போக்குவரத்து வரையில், எந்த வியாபாரத்திற்கும் விளம்பரம் இன்றியமையாததாகவிருக்கிறது! தினசரி, வார, மாதாந்திரப் பத்திரிகைகளைப் புரட்டினல், நம் கண்களில், செய்திகள், கட்டுரை, கதைகளைக் காட்டிலும் விளம்பரங்கள்தான் அதிகமாகத் தென்படுகின்றன!

எல்லோரும், அவரவர் விற்பனை செய்யும் வஸ்துதான் உலகத்திலேயே மிகச் சிறந்தது என்று கூறுவதைக் காண்கிறோம்!

"எங்கள் சோப்பில் கொழுப்பே கலப்புக் கிடையாது!" "எங்கள் சோப்பின் மணம் உங்கள் மனத்தை மயக்கவல்லது" "எங்கள் சோப்பை விடச் சிறந்த சோப்பு இவ்வுலகில் கிடையாது"—இந்த ரீதியில் ஒவ்வொரு சோப்புக் கம்பெனியும் தம்பட்டம் அடித்துக்கொள்கிறது.

"எங்கள் மோட்டாரில் ஏறிச் சவாரி செய்தால், புஷ்பக விமானத்தில் பறந்து போவது போன்றிருக்கும்!... சற்றேனும் ஆட்டம், அசைவின்றி, அமைதியாகவும் சுகமாகவும் வெகு தூரம் வேண்டுமானலும் சவாரி செய்வதற்கு எங்கள் கார்தான் மிகவும் உகந்தது என்பதில் சந்தேகமில்லை!... பார்ப்பதற்கும் எங்கள் கார்தான் மிகவும் அழகியது என்பதை நீங்களும் ஒப்புக்கொள்வீர்கள்!" என்கிறார் ஒரு மோட்டார் கம்பெனி முதலாளி.

இதேபோல் ஊசியிலிருந்து ராசி பலன் சொல்லும் ஜோசியர் வரையில் எல்லோரும் சற்றும் வெட்கமோ, சங்கோஜமோ இன்றி தங்கள் தங்கள் பெருமையைப்பற்றிப் பிரபல்யப் படுத்திக்கொண்டு தங்களுடைய வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்கிறார்கள்! விளம்பரமில்லாவிட்டால் தங்களுடைய வியாபாரம் படுத்துவிடும் என்பது இவர்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. உதவாக்கரை சாமானாக இருந்தாலும் தொடர்ச்சியாக ஒரு பத்திரிகையில் விளம்பரப்படுத்தினல், பத்துப்பேர் அதைப்பார்த்து வாங்கத் தொடங்குவார்கள் என்பது வியாபாரிகளுக்குத் தெரியும். எவ்வளவு உயர்ந்த சரக்காயிருந்தாலும் போதிய விளம்பரமில்லாவிட்டால் அது வெளியேறாது என்பதும் அவர்கள் நன்கறிந்த ரகசியந்தான். நிற்க,

இப்படியெல்லாம் மற்ற வியாபாரிகள் தங்கள் சரக்குகளை விற்பனை செய்ய விளம்பரம் செய்யும்பொழுது, எழுத்தாளர்கள் (ஆம், இந்த கட்டுரை எழுத்தாளர்களுக்கென எழுதப்பட்டதுதான். ஆனல் பரவாயில்லை, நீங்களும் வாசிக்கலாம்!) ஏன் கதை, கட்டுரைகளை விளம்பரப் படுத்திக்கொள்ளக்கூடாது என்று கேட்கிறேன். போதிய விளம்பரம் இல்லாமல்தான் கதை கட்டுரைகள் சில பத்திரிகாசிரியர்களிடம் விற்பனையாவதில்லை என்பது திண்ணம்! நாம் எழுதியனுப்பும் கதை கட்டுரைகளுடன் தகுந்த விளம்பரக் குறிப்புகள் எழுதி வைத்தால், நிச்சயமாகப் பத்திரிகாசிரியர்கள் அந்த விளம்பரங்களைப் பார்த்துவிட்டு, நமது கதை, கட்டுரைகளின் உண்மை மதிப்பு இன்னது என்பதை அறிந்துகொள்ள முடியும் அல்லவா?

"என்னடா, பழி; கல்யாணமாச்சா? கங்ராஜு"லேஷன்ஸ்... கிரஹப் பிரவேசம் ஆயுடுத்தாடா ?

"டேய்...ஒரு வீடு இருந்தா பார்த்துச் சொல்லுடா......"

இனி, நான் எழுதியனுப்பும் ஒவ்வொரு கட்டுரை, கதையும் தகுந்த விளம்பரத்துடன் தான் ஆசிரியருக்குப் போகப்போகிறது. இனி, எனது, கதை கட்டுரைகளுக்கு நல்ல வரவேற்புக் கிடைக்கும் என்பதில் சந்தேகமில்லை. என் சிருஷ்டிகளின் அருமை, பெருமைகளைப்பற்றி, பத்திரிகாசிரியர்கள் நன்கு உணர்ந்து போற்றி அவைகளை ஆவலுடன் வரவேற்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. எப்படிப்பட்ட விளம்பரம் செய்யப்போகிறேன் என்று அறிய, சகோதர எழுத்தாளர்களாகிய நீங்களும் ஆவலுள்ளவர்களாக இருக்கலாம். இதோ, கீழே கொடுத்திருக்கும் குறிப்புக்களைப் பார்த்து, இதே பாணியில் நீங்களும் உங்கள் கட்டுரைகளுடன் விளம்பரக் குறிப்புகள் சேர்த்து, ஆசிரியர்களுக்கு அனுப்பி வையுங்கள் வெற்றி உங்களுக்குக் கட்டாயம் கிட்டும் என்பது நிச்சயம்.

* * * *

'இத்துடன் நான் அனுப்பியிருக்கும் கட்டுரை ஹாஸ்ய ரஸத்தில் தோய்த்து எழுதப்பட்டது அதைப் படிக்கும்பொழுது, நீங்கள் சிரித்துச் சிரித்து உங்கள் வயிறு புண்ணாக நேரிடலாம்!......நான் இதுவரை எழுதியுள்ள ஹாஸ்யக் கட்டுரைகளிலேயே இதுதான் மிகச் சிறந்தது என்பது என் அபிப்பிராயம். மிக உயர்தரமான அமெரிக்க ஹாஸ்ய ரஸமும் இதில் கொஞ்சம் கலக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்! உங்கள் பத்திரிகையின் அடுத்த இதழில் பிராதான்ய ஸ்தானத்தை வகிக்க இந்த ஹாஸ்யக் கட்டுரை மிகப் பொருத்தமானது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்!......



"இத்துடன் அனுப்பப்படும் கட்டுரை விசேஷ சிரத்தையுடனும், பிரத்தியேக சிரமத்துடனும் எழுதப்பட்டது. இதை எழுதி முடிக்க இரண்டரை மாதங்களாகின என்பதிலிருந்தே இதன் மதிப்பு எத்தகையது என்பதை நீங்கள் ஒருவாறு உணர்ந்து கொள்ள முடியும் பகலிலும் இரவிலும், அலுப்பு, சலிப்பின்றி, கணக்கற்ற காப்பி, டீ குடித்து, எழுதி முடித்துள்ள இந்தக் கட்டுரையை உங்கள் பத்திரிகைக்கு அனுப்புகிறேன். மற்றப் பத்திரிகைகளில் ஒன்றுவது இதைப் பிரசுரிக்க யோக்கியதை பொருந்தியது அல்ல என்பது எனது திடமான அபிப்பிராயம்......"

"உயர்ந்த, வழவழப்பான, வெள்ளைக் காகிதத்தில், விலையுயர்ந்த அமெரிக்கன் பௌண்டன் பேனாவைக் கொண்டு, எழுதப்பட்டுள்ள இந்தக் கதையை உங்களுக்கு அனுப்பிவைத்திருக்கிறேன் எனக்குத் தெரிந்த சில பத்திரிகாசிரியர்கள் இந்தக் கதையைத் தங்கள் பத்திரிகையில் வெளியிட வேண்டி என்னைக் கேட்டனர். ஆனால் நான் மறுத்துவிட்டேன். உங்கள் பத்திரிகைதான் என் கதைக்கு ஏற்றது அதற்குத் தகுந்த சித்திரங்களை வரையச்செய்து, முக்கியத்துவம் கொடுப்பீர்கள் என்று நம்புகிறேன். கடந்த பதினேழு வருஷங்களில் நான் எழுதியுள்ள சிறு கதைகளில் இதுவே மிகச் சிறந்தது என்பது என் எண்ணம். இதை வாசகர்கள் மிகவும் விரும்பிப் படித்து ரசிப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை..."

இத்தியாதி......

கடைகளில் சரக்கு ரொம்பவும் மிஞ்சிப்போனால், விலைகளை மிகவும் குறைத்து, 'Grand reduction sale" (குறைந்த விலையில் விற்பனை) என்று விளம்பரப்படுத்தி, ஜனங்களை மயக்குகிறார்கள் அல்லவா? அதே போல், நாமும் செய்யலாம். நாம் அனுப்பிய கதை கட்டுரைகள் திரும்பி வந்து, நிறையச் சேர்ந்துவிட்டால் நாமும், ஒரு 'Reduction sale செய்யலாம். அதாவது, கீழ்க்கண்டது போல் ஒரு விளம்பரம் செய்யலாம்.

'மிக அருமையான, உயர்தரமான, கட்டுரைகளும் கதைகளும் தயாராயிருக்கின்றன! சாதாரணமாக இருபது ரூபாய், இருபத்தைந்து ரூபாய்களுக்குக் குறையாமல் சன்மானம் பெறக்கூடிய கதைகள் பத்து ரூபாய்களுக்குக் கிடைக்கும். கட்டுரைகள் ஒவ்வொன்று ஐந்து ரூபாய்களுக்குக் கிடைக்கும். மூன்று பக்கக் கட்டுரைகள், நான்கு பக்கக் கட்டுரைகள், ஐந்து, ஆறு, எட்டு பக்கக் கட்டுரைகள் எல்லாம் கிடைக்கும், தேவைக்குத் தகுந்தாற்போல் வாங்கிக் கொள்ளலாம் நான்கு கதைகள் வாங்கிக் கொள்பவர்களுக்கு ஒரு கட்டுரை இனாமாகக் கொடுக்கப்படும்! இந்தக் 'குறைந்த விலை விற்பனை' இன்னும் சில நாட்களுக்குத்தான்! பத்திரிகாசிரியர்கள் இவ்வரிய சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொள்வார்கள் என்று நம்புகிறோம்!

எப்படி யோசனை?

ஆபீஸ் ஸ்தாபிதம் : 1924.

பிரபல ஜோதிஷர்

★

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு வருஷ பலன் மாத வாரி எழுத ரூ 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ 2 ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை

★

பண்டித காழியூர்
ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
'தபோ நிதி,
தியாகராய நகர், மதராஸ் 17.
தபால் பெட்டி 1417

சேலம்
மூன்று தாமரை
பிடிகளை உபயோகித்து
சந்தோஷமடையுங்கள்

S.A.H
Estd 1920

Rgd. No. 2221.

Prop: S அஹமத் உசேன்,
கோட்டை சேலம் S. I R.

இதுவும் மாயைதானே!

-ரா-

என் குடும்பத்தில் மூன்றே பேர் தான்—ஒரு பெண் குழந்தை, அவளுடைய தாயாரும், தகப்பனும். என் மாதாந்தர வருமானம் ரூபாய் 250 ஆகவே, மனைவியே சுயம்பாகம். தகப்பனே, குழந்தையோ ஜுரமாகவிழுந்தால். தாய் என்பவள் சமையலும் செய்துகொண்டு, மருந்து வகையறாக்களைக் கவனிக்கிறாள் ஆனால், அவளே படுக்கையைப் பிடித்துவிட்டால் வீட்டைக் கவனிப்பது யார்? தகப்பன்தானே, நல்ல வேளையாக, தாயோ, தகப்பனோ அநேகமாக உடம்பு அசௌகரியமென்று படுப்பதில்லை, இவ்வித சந்தர்ப்பங்களை முன்னிட்டுத்தான், பழைய நாட்களில் எல்லோரும் ஏக குடும்பமாக ஒருவித கஷ்டமுமின்றி வாழ்ந்து வந்தார்கள். ஆனால், நாத்தனார் என்ற பரதேவதை இங்குமங்கும் சில குடும்பங்களில் அவதரித்து நர்த்தனமாடுகிறாளே யென்று சிலர் சொல்வதை நான் மறுக்கவில்லை. இருக்கட்டும்: எதை எடுத்தாலும், நல்லது, பொல்லாதது இருக்கத்தான் செய்யும்

அந்த மாதிரி ஏக குடும்பமாக வாழ்ந்து வந்த காலத்தில், புருஷர்களுக்குச் சுயம்பாகமென்பதே தெரியாது என் வயதான நண்பரொருவர் துவரையை மண் கட்டி ஒரு மூலையில் வைத்திருப்பதைப் பார்த்து, 'இது என்ன?' என்று கேட்டார்

இதிலிருந்துதான், ஸார், துவரம் பருப்பு! முருங்கக்காய் ஸாம்பாரோ, வெங்காய ஸாம்பாரோ, நன்றாயிருக்கு என்று சாப்பிடுகிறீரே! அதில் போடும் பருப்பு இதிலிருந்துதான்!" என்றேன்

"அப்படியா!" என்று சொல்லி, ஒரு அதிர்ச்சியடைந்தார்!

குடும்பஸ்தர்களில் அநேகர், சுயம்பாகமென்கிற கலையைக் கற்று அதை கைவசமாகவைத்திருப்பது மிகவும் நல்லது; பிரம்மச்சாரிகளுக்கும் நல்லது பிறர் கையை எதிர்பார்க்க வேண்டாமல்லவா? ஹோட்டலில், வெந்ததும் வேகாததுமான சாப்பாட்டை உட்கொண்டு, வைதியரிடம் போவானேன்? சுயம்பாகமென்ற பதத்திற்கு என்ன அர்த்தம்?

இந்த கொள்கையின் பேரில்தான் இருபது வருஷமாக என் குடும்பம் நடக்கிறது ஒருகாலத்தில், ஐந்து அறைப் பெட்டியிலிருக்கும் கடுகு, மிளகு இவைகளின் வித்யாசமே தெரியாதவன் இப்போது என் சுயம்பாகம் நளபாகமென்றே சொல்லவேண்டும்.

"மதிப்புப் பத்திரம் நீங்களே கொடுத்துக்கொண்டு விட்டீர்களா?" என்று கேட்கலாம். இல்லை; என் ஸகதர்மிணி சாப்பிடும்மாதிரியிலிருந்துதான் சொல்லுகிறேன், 'இன்னும் கொஞ்சம் ரஸம், குழம்பு வேணும்!" என்று புன் சிரிப்புடனே கேட்டாள்

இதிலிருந்து என் நண்பர்களுக்கு ஒரு சந்தேகம் வரக்கூடும், ஸஹதர்மிணியானவள், சுயம்பாகத்தைக் கணவனுக்குச் சொல்லிக் கொடுத்துவிட்டு தான் நாற்காலியில் சாய்ந்துகொண்டு தினசரிப் பத்திரிகையோ, வாரப் பதிப்போ படிக்கிறாள் போலிருக்கு என்று எண்ணுதீர்கள்! தினமும் அவளேதான், பம்பரம் சுற்றுவது போல், சுற்றிச் சுற்றி வீட்டு வேலைகளைக் கவனிக்கிறாள் ஆனாலும், நடுநடுவில் ஒருதரமாவது அந்தபொறுப்பு என்மேல் விழும்.

இதில் ஒரு பெரிய கஷ்டமும், தொந்தரவுமுண்டு சமையலை முடித்து குழந்தைக்குச் சாப்பாட்டை செய்வித்துப் பள்ளிக்கு அனுப்பி, நானும் ஆகாரம் செய்து, மனைவிக்கும் பரிமாறிவிட்டு. ஆபீஸுக்கும் சரியாக பத்து அடிக்கிறபோது ஆஜராக வேண்டுமே இதுதான் மகா சங்கடம் நேரமே இருக்கிறதில்லை. மணி ஒன்பதாகி, சமையலாகாவிட்டால் கோபம் தலைக்கு ஏறும்! சமையல் பாத்திரங்கள், அலுமினியக் கரண்டிகள், இவைகளின் உயிருக்கு ஆபத்துதான்! ஈயப் பாத்திரங்களின் சுயரூபமே மறைந்து போகும்! என் ருத்ராவேசத்தில், கரண்டிகள் நொண்டியோ, இல்லை, முண்டமோ ஆகிவிடும். சமையலறை யுத்தகளமாக மாறிவிடும்! ஸஹதர்மிணி கண்ணீர் விடுவாள்; ஆனால் பேசமாட்டாள் மனைவிக்கு அலுமினியக் கரண்டிமேல் ஆசை! அது, இப்போது, முண்டமாக சாக்கடையில் கிடப்பதை எப்படி சகிப்பாள்? இவ்வளவு ஆவேசத்தையும் ஒரு வாராக இறக்கிக்கொண்டு, ஆபீஸில் கால் வைத்தால் மணி பத்து அடிக்கும், என் நல்ல வேளைக்கு, பஸ்ஸுக்காகக் காத்திருக்க வேண்டுமென்கிற தொல்லையில்லை; கால் நடை தான்.

கட்டின பொண்டாண்டிக்கே நான் பயப்படறதில்லே........ உனக்கா பயந்துடப்போறேன் ...போடா...!!!

"ஏன், ஸார்! நடராஜா ஸர்விஸ் போலிருக்கு!" (நட, ராஜா!) என் பார்கள் நண்பர்கள் வார்த்தைகளைப் பதச்சேதம் செய்து, ஒரு வார்த்தைக்கு நான்கு அர்த்தத்தைக் கொடுக்க, நம் நாட்டினர் பேர் போனவர்கள் அல்லவா?

இந்த ரீதியில், ஒருநாள் சுயம் பாகம் நடந்தது அன்றைக்கு ருத்ராவேசம் அதிகம் ஏன்? இருக்கிற உத்யோகத் தொல்லை போதாதென்று, ஸெஷன்ஸ் கோர்ட்டில்! 'அஸெஸர்' உத்யோகம் வேறே! சம்பளமில்லா சேவகம்; உள்ளூரிலிருப்பவர்களுக்கு 'படி' முதலியவை இல்லை: ஆனால் சொந்தமாக செலவு உண்டு!

சமையலோ. சீக்கிரம் ஆகவில்லை; அடுப்பு சரியாக எரியவில்லை; விறகு ஈரம் சமையலறையெல்லாம் ஒரே புகை கண்களில் எரிச்சலும், நீரும் கிளம்பின

மணியும் ஒன்பதேமுக்கால், கோர்ட்டாரோ. 11—மணிக்கு மேலே தான் வருவார்கள்; ஆனால், அஸெஸர்கள் மாத்திரம், பத்துமணி அடிக்கிறபோது ஆஜராகவேண்டும்! இதென்ன நியாயமோ தெரியவில்லை. சாப்பாடும் ஆகிவிட்டது; ஸஹதர்மிணிக்குங்கூட

உடுப்பு மாட்டிக்கொள்ளும் நேரம், இதுவரையிலும் பேசாதிருந்தவள்.

'இன்னொரு தரம் முகத்தை ஸோப்போட்டுக் கழுவிக்கொள்ளுங்கள்; தலையையும் சரியாக வாரிக்கணும்"

மணி பார்த்தேன், பத்தேகால். இந்த சம்பளமில்லா சேவகத்திற்கு

அநேகதரம் ஆஜராகி இருந்ததுண்டு; ஆகையால் அவசரப்படவில்லை. மனைவி சொன்ன வார்த்தையைத் தட்டாமல், வண்ணான் கொண்டுவந்திருந்த நிஜார், கோட்டு இவைகளை மாட்டிக் கொண்டு, நிலைக்கண்ணுடியின் முன் நின்றேன்.

மஹான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் ஒரு சந்தர்ப்பத்தில் சொன்னுர் 'வெள்ளைக்காரனுடைய உடுப்பை மாட்டிக்கொண்டால் அவனைப் போலவே நடிக்கச் செய்யும் அது! நான் கண்ணுடியெதிரில்நின்றபோது என் உணர்ச்சியே மாறிவிட்டது! "நான்தான் ஜில்லா கோர்ட்டு ஜட்ஜ்! இன்றைக்குக் கொலை கேஸ் விசாரணை செய்யப்போகிறேன்" என்ற அஹம் பாவமும், ரஜோகுணமும் எங்கிருந்தோ மனதில் திருட்டுத்தனமாக புகுந்து பரவியது!

ஒரு குதிரை வண்டியைக் கூப்பிட்டு அதிலேறிக்கொண்டேன் (தினமும் நடராஜா ஸர்விஸில் போகிறவன்) மனதில் என்ன ஆசை தெரியுமா? நான் போகிற வழியில், சிநேகிதர்களை சந்திக்கவேண்டும்; அவர்கள் என்னை, 'என்ன ஸார், இன்றைக்கு வண்டியில் போகிறீர்களே? உடம்பு அசௌக்கியமா?" என்று கேட்க வேண்டும். அதற்குப் பதில் "இல்லை, இல்லை இன்றைக்கு 'அஸெஸர்' உத்யோகம்" என்று பெருமையுடன் பதில் சொல்லவேண்டுமென்ற ஆசை; ஆவல்!

நான் நினைத்தபடியே நடந்தது. வண்டியில் போகும்போது அப்படியே பதிலளித்தேன். மூன்று நான்கு நண்பர்களுக்கு மனதிற்கு ஒரு தனி சந்தோஷம்; திருப்தி; பெருமை! ஆனுல், வக்கீல் நண்பர்கள் கோர்ட்டில், 'என்ன அஸெஸரா?" என்று கேட்டால், என் பதிலில் கொஞ்சம் வித்யாசம்; "என்னைப் போட்டு ஏன் வாதிக்கிருர்கள், ஸார்?" (என் வார்த்தைகளிலிருந்து, இந்த உத்யோகம் எனக்கு இஷ்டமேயில்லை என்ற மாதிரியில் அவர்களுக்குத் தோன்ற வேண்டும்!)

கோர்ட்டு மத்யானம் பன்னிரண்டு மணிக்குத்தான் கூடியது. ஜட்ஜ் வலது கைபக்கத்தில், பள்ளிக்கூடத்து பையன்களுக்குப் போடுவதுபோல், ஒரு நீளமான பெஞ்ச், அதற்கு முன்னுல் மற்ரொரு பலகை- டெஸ்க்' மாதிரியில் இருந்தது இதின் மேல் தூசியும் நன்ருய்ப் படிந்திருந்தது.

அஸெஸர்களென்ற கனவான்களுக்கு எவ்வளவு மரியாதை கோர்ட் சேவகன் கொடுத்திருந்தானென்றதை இதிலிருந்து தெரிந்துக்கொள்ளலாம்! அதன் பேலேயே உட்கார்ந்து கேஸை கேட்டோம். மனதில், நான்தான் ஜட்ஜ் என்னும் மமதை; அந்தப் பிரபு கூட அவ்வளவு ஊக்கமாக கேஸைக் கேட்டிருக்கமாட்டார்! 'நானென்ன? என் உத்யோகமென்ன? இந்த நிலத்தில் இந்த ஒரு நாளைக்குத் தவிர, எனக்கு என்ன வேலை? ஜட்ஜின் மாத வருமானமென்ன? அடே. வைத்யக்காரா, இரண்டு மணி நேரத்திற்கு முன் அடுப்பங்கரையில் உட்கார்ந்து, ஸாம்பாருக்கும், ரஸத்துக்கும் புளியைக் கரைத்துக்கொண்டு இருந்தாயே! அதை மறந்தாயா? சாயந்திரம் ஆறு மணியாகி வீட்டிற்கு திரும்பினுல், மறுபடியும் ராத்திரி சாப்பாட்டை தயார் செய்யப் போகிருயே! நடுவில், இந்த நான்கு மணி நேரத்தில் இந்திர பதவியா வந்து விட்டது உனக்கு? இந்த சம்பளமில்லாத பதவிக்கு ஒரு பெருமையை நீயாகவே ஏற்படுத்திக்கொண்டு, மயிலைப்போல எண்ணிக்கொண்டு வான்கோழி நடித்த மாதிரி நடிக்கிருயே?" என்று மனதாவது புத்தியாவது கண்டித்ததா? இல்லை. இதுவும் ஒரு மாயைதானே! இந்த மாதிரியான மாயவலையில் நம்மை கடவுள் சிக்க வைத்திருப்பதினுல்தானே, நாம் உயிர் வாழ முடிகிறது இல்லாவிட்டால், எவ்வளவு பேர் தற்கொலை செய்து கொள்ளமாட்டார்கள்?

ஆசாபங்கம்

...டி.எஸ்.சுப்பாராவ்...

அன்று எங்கள் கிரிக்கட் கோஷ்டி சிதம்பரத்தில் ஒரு 'மாட்சு' விளையாடுவதற்காக ரெயிலில் பிரயாணம் செய்துகொண்டிருந்தது கோஷ்டியில் பெரும்பாலோர் மிகுந்த உற்சாகங்கொண்ட வாலிபர்களாதலால் பிரயாணமுழுவதும் ஒரே பரிகாசப் பேச்சும், சிரிப்பும், இரைச்சலும் கொம்மாளமுமாக இருந்தது.

அவர்கள் எப்படியோ ஒரு சிரிய தனி வண்டியில் இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்டார்கள். வழி நெடுக ஒருவரையும் அந்த வண்டிக்குள் ஏற விடாமல் பார்த்துக்கொண்டு வந்தார்கள் ரெயில் பெரிய ஸ்டேஷன்களை அணுகும்பொழுதெல்லாம்இக்கோஷ்டியில் உள்ள சிலர் முன் ஏற்பாட்டின்படி ஜன்னல்கள் வழியாகவும் கதவண்டையும் தலைகளை நீட்டிக்கொண்டு கூட்டமாக மொய்த்து நிற்பார்கள். பிளாட் பாரத்திலுள்ளவர்களும் அவ்வண்டியில் அதிக கூட்டமென்று நினைத்துவிட்டுப் போய்விடுவார்கள்! அப்படியும் சிலர் ஏற முயற்சித்தால் 'இது ரிசர்வ்ட்' என்று பொய்சொல்லி அவர்களை அனுப்பிவிடுவார்கள்!

ரெயில் கும்பகோணத்தை நெருங்கிக்கொண்டிருந்தது வெங்கட்ராமன் உஷாராக டேய் சோம்பேறிகளா, கும்பகோணம் வருகிறது ஜாக்கிரதை. ஒரே கூட்டம் ஏறும்! என்று முன் அறிவிப்பு கொடுத்தான். அந்த வண்டியில் உடனே ஒரு பரபரப்பு உண்டாயிற்று. நன்ருகப் பேசிக்கொண்டிருந்த சிலர் திடீரென்று படுக்கையை விரித்து போர்வையை போர்த்திக்கொண்டு ஒரு நிமிஷத்தில் குறட்டைவிட ஆரம்பித்துவிட்டார்கள்! மற்ரொரு கூட்டம் ஜன்னலண்டை தாவிற்று!

ரயில் பேரிரைச்சலிற்கிடையே கும்பகோணம் பிளாட்பாரத்தில் ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டு நின்றது. அவர்கள் எதிர்பார்த்தது போல்பெரிய கூட்டம்தான் ஆனுல் அந்த கோஷ்டியினர் அவர்களின் வண்டியில் ஏற முயற்சித்த அநேகருடைய தாக்குதல்களை வெற்றிகரமாக சமாளித்துவிட்டார்கள்!

ரயில் புறப்படும் நேரம் வந்தும் கிளம்பவில்லை. மாயவரத்திலிருந்து வரும் ரெயில் அங்கே தான் 'கிராசிங்' சந்திப்பு. அதற்காக காத்துக்கொண்டிருந்தது. பிளாட்பாரத்திலிருந்த பிரயாணிகளும் எப்படியோ ரெயிலில் ஏறிக்கொண்டு விட்டார்கள் கிரிக்கட் கோஷ்டியினரும் 'அப்பாடா, இனி மேல் பயமில்லை' என்று சற்று ஓய்வு எடுத்துக்கொண்டார்கள் வெங்கட்ராமன் மட்டும் 'வண்டி புறப்படும் வரை ஜாக்கிரதை இல்லாவிட்டால் கோட்டை விட்டுவிடுவீர்கள்' என்று எச்சரித்தான்!

அவர்கள் வண்டியில் மறுபடியும் கேலிப்பேச்சும் சிரிப்பும் ஆரம்பித்து விட்டன. வெளியுலகை மறக்க ஆரம்பித்த சமயம், கொஞ்சம் கதவைத் திறக்கறேளா? ரொம்பப் புண்ணியமுண்டு' என்ற ஒரு குரல் வெளியே கேட்டது உடனே ஜன்னல் பக்கம் ஹனுமார் போல் தாவினுர்கள் சிலர்!

வெளியே ஒரு பாட்டி நின்றுகொண்டிருந்தாள் அவள் பக்கத்தில் போர்ட்டர் நிறைய சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தான். கிழவியும் டிக்கட் விற்குமிடத்தை அடிக்கடி கவலையோடு பார்த்துக்கொண்டிருந்தாள் ஜன்னலண்டை இக் கோஷ்டியினரைப் பார்த்ததும் 'கொஞ்சம் இடம் கொடுங்கோ, குழந்தைகளா சாமான் எல்லாம் ஏத்தணும் என்று முறையிட்டாள்.

'பாட்டி, இங்கே எங்களுக்கே இடமில்லையே! அடுத்த வண்டியிலே பாருங்கோ' என்ருன் வெங்கட் ராமன் 'ஏன் பெண்கள் வண்டியில் ஏறிக்கிறது தானே என்ருன் பாச்சா (என்ற பார்த்தசாரதி) எல்லாவண்டியிலேயும் இப்படித்தான் சொல்ரு! நீங்கதான் இடம் கொடுக்கணும் என்ருள் பாட்டி அழாக் குறையாக.

'அதெல்லாம் முடியாது பாட்டி வேறே வண்டி பாருங்கோ —இது சம்பத் உத்தரவு,

'டேய், பாட்டிக்கு இடம் கொடுத்தால்கூட இவள் மூட்டை முடிச்சுக்கே ஒரு தனி வண்டிவேண்டும்போலிருக்கிறதே! பெரிய தாசில்தார் ஜமாபந்தி மாதிரியல்லவா கிளம்பியிருக்கிருள் இது பாச்சாவின் பரிகாசம்!

'டேய், இடமில்லை என்று சொல்லாமல் என்னடா வளவளவென்று பேச்சு? நான்சென்ஸ்; இது குறட்டை விட்ட(?) ஜெயராமனிடமிருந்து!

பாட்டிக்கு இவர்கள் சொன்னது ஒன்றும் காதில் விழவில்லை டிக்கட் விற்குமிடத்தையே பார்த்துக் காண்டிருந்த அவள் முகத்தில் திடீரென்று பிரகாசம் உண்டாயிற்று. நல்லவேளை வந்துவிட்டாள் ஆனுலும் எவ்வளவு நேரம்? என்று சொல்லிக் கொண்டாள். கோஷ்டியினரும் அவள் பார்த்த திக்கிலேயே பார்த்தார்கள்.

அவ்வளவுதான்! பார்த்தவர்கள் பார்த்துக் கொண்டே நின்று விட்டார்கள், ராமனைப் பார்த்த மிதிலைப் பெண்களைப் போல!

ஒரு பெண் அவர்களை நோக்கி வந்து கொண்டிருந்தாள்! நாகரிகமாக உடையுடுத்திக்கொண்டிருந்தாள். நல்ல களை சொட்டும் முகம் கையில் அழகான ஒரு சிறு பை. வரவில்லையே என்று பயந்து விட்டாயா, பாட்டி' என்று புன்சிரிப்போடு கேட்டுக்கொண்டே அவளிடம் வந்தாள். அவளுடைய அழகிய கூந்தலில் வைக்கப்பட்டிருந்த ரோஜாப்பூ கதம்பத்தின் இன்ப வாசனை கிரிக்கட் கோஷ்டியினரை மெய்மறக்கச் செய்தது!

'ஏன் இன்னும் ஏறவில்லையா, பாட்டி' என்று கேட்டாள் அவள். பாட்டி, நான் என்ன பண்றது? எங்கேயும் இடமில்லை இதோ இந்த வண்டியிலே கூட இடமில்லைன்னு இவா சொல்ரு' என்று கோஷ்டியினரைச் சுட்டிக் காண்பித்தாள்; அந்தப் பெண் 'யார் அப்படிச் சொல்வது? நான் பார்க்கிறேன்' என்று கதவண்டை நெருங்கினுள்.

அந்தப் பெண்ணின் அழகையே பருகிக்கொண்டிருந்த அக் கோஷ்டியினர் இப்பொழுது விழித்துக் கொண்டு விட்டார்கள் அவர்கள் ஒருவருக்கொருவர் மௌனமான நயன பாஷையில் ஏதோ பேசிக் கொண்டார்கள். இவ்வளவு நாகரிகமான ஒரு யுவதியோடு பிரயாணம் செய்யும் சந்தர்ப்பத்தை இழக்கலாகாது" என்ற தீர்மானத்திற்கு அவர்கள் வந்துவிட்டார்கள்

அவ்வளவுதான், ஒரு விநாடியில் போர்முனையில் நிலைமை மாறிவிட்டது ஆம் வெற்றிகரமான வாபஸ் தான்! வைகுண்ட ஏகாதசியன்று பெருமாள் கோவிலில் கதவு திறக்கப்படுவதுபோல் அவர்கள் வண்டியின் கதவு திறந்தது! 'ஏன், உள்ளே வாருங்கள்" என்ருர்கள் அனைவரும் அப்பெண்ணைப் பார்த்து!

அந்தப் பெண் முகத்திலே ஒரு விஷமப் புன்னகை தோன்றிற்று இதை அவர்களும் கவனித்தார்கள் 'நம்முடைய எண்ணங்களை இவள் அறிந்து

கொண்டு விட்டாளோ' என்ற பயம் கூட அவர்களுக்கு ஏற்பட்டது.

அவள் 'முதலிலே இந்த மூட்டை முடிச்சுகளை ஏற்ற வேண்டுமே' என்றாள் அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் 'வெங்கட்ராமன் கீழே இறங்கி ஒரு பெரிய பெட்டியைத் தலைமேல் தூக்கிக்கொண்டு வண்டியில் வைத்தான்? அவனைப் பின் தொடர்ந்தார்கள் அவன் சிநேகிதர்கள்.

இந்த சப்தத்தில் குறட்டை விட்டுக் கொண்டிருந்த (?) ஜெயராமனுக்கு கோபம் கோபமாக வந்தது 'கடைசியில் ஏமாந்து போய்விட்டீர்களாடா, நான்சன்ஸ்' என்று எழுந்து கதவருகே வந்தவன் அந்தப் பெண்ணைப் பார்த்ததும், நிலைமையைப் புரிந்துகொண்டான் உடனே அவனும் கீழே இறங்கி, இன்னும் ஏதாவது உள்ளே வைக்க வேண்டுமா. என்று கேட்டான் பெண்ணை நோக்கி, 'அதோ இருக்கே, அந்த மூட்டை தான் பாக்கி' என்றாள் பாட்டி. ஜெயராமன் அந்த மூட்டையைப் பார்த்தான் அழுக்கேறிய ஒரு கந்தல் துணியால் கட்டப்பட்டிருந்தது அந்த மூட்டை. அதன் ஒரு மூலையிலே ஐந்தாறு தென்னை விளக்குமாறுகள் நீட்டிக்கொண்டு நின்றன!

நல்ல நாளிலே ஜெயராமன் அதைக் காலால்கூட மிதித்திருக்கமாட்டான்! இன்றோ 'ம்..........' என்று பல்லைக் கடித்துக்கொண்டு அந்த மூட்டையை தூக்கினான் அது பாறாங்கல்போல் கனமாயிருக்கவே, அவனுக்கு மேல் மூச்சு வாங்கிற்று! 'அதிலே கோலப் பொடி இருக்குடாப்பா. அதுதான் கொஞ்சம் கனம்' என்றாள் பாட்டி! 'கொஞ்சம் கனமா......ம்......ஈச்வரா' என்று முணுமுணுத்துக்கொண்டே அதை வண்டிக்குள் தள்ளிவிட்டான்.

பாட்டியும் அந்தப் பெண்ணும் வண்டியில் ஏறிக்கொண்டார்கள். பாட்டிக்கு தன் மூட்டை முடிச்சுக்கள் எல்லாம் மேல் பலகையில் பத்திரமாக வைக்கப்பட்டிருந்ததைக் கண்டதும் திருப்தியுண்டாயிற்று. பெண்ணைப் பார்த்து 'அடி வசந்தா, முதல்லே இடமில்லேன்னு சொன்ன பசங்கள் எவ்வளவு உபகாரம் பண்ணியிருக்கா பார்த்தியா? நல்ல ஆயுசா இருக்கட்டும்' என்றாள்

அந்த கோஷ்டியினர் ஒருவரையொருவர் பார்த்து முழித்தார்கள்! அவர்களுக்கு அந்தப் பெண் 'நம்முடைய உபகார சிந்தனையின் காரணத்தை அறிந்துகொண்டு விட்டாளோ' என்ற பயம் மீண்டும் ஏற்படவே அவளைப் பார்த்தார்கள்.

அவள், வசந்தா ஒன்றும் அறியாதவள்போல்தோற்றமளித்தாள். மிகவும் சாவதானமாக 'நீங்கள் இவ்வளவு உதவி செய்ததற்கு வந்தனம் நாங்கள் கொடுத்த சிரமத்திற்கு மன்னிக்கவும்' என்றாள்.

தன்னைப்பார்த்துத் தான் பேசினாளென்று அங்குள்ள ஒவ்வொருவரும் நினைத்துக்கொண்டார்கள்! ஜெயராமனுக்கோ, பொங்கி வரும் ஆனந்தத்திலும் பெருமையிலும் தலைகால்புரியவில்லை அவளுக்கு ஏதாவது பதில் சொல்ல வேண்டுமென்று யோசித்தான் ஒன்றும் தோன்றவில்லை. தொண்டையை கனைத்துக்கொண்டான்.

'ஹி......ஹி......இதெல்லாம்என்ன சிரமம். பெண்களுக்கு மரியாதை செய்வதுதான் முதற் கடமை என்னும் கொள்கையுடையவன் நான் என்றான்.

பாட்டிக்கு இவர்கள் பேசுவது ஒன்றும் புரியவில்லை. அவளுக்கு தூக்கம் வந்தது கொட்டாவிவிட்டாள் 'தூக்கம் வந்தால் படுத்துக்கொள்ளேன், பாட்டி' என்றாள் வசந்தா.

உடனே ஜெயராமன் விரித்துப் போட்டிருந்த தன் 'ஹோல்டாலை' அப்படியே சுருட்டி ஒரு மூலையில் எறிந்து 'தாராளமாக படுத்துக் கொள்ளுங்கள், பாட்டி' என்றான் பாட்டியும் ஒரே நிமிஷத்தில் நிஜமாகவே படுத்துத் தூங்கிவிட்டாள்!

வசந்தா கைக் கடிகாரத்தைப் பார்த்தாள் 'ஏன் இன்னும் வண்டி புறப்படவில்லை?' என்று கேட்டாள்.

வெங்கட்ராமன் பதில் சொல்ல வாயெடுக்குமுன் ஜயராமன் அவனுக்கு முன்னால் வந்து நின்று 'இங்கே ஒரு 'கிராசிங்' இதோ ஆச்சு. முதல் மணி கூட அடித்துவிட்டது சிறிதுநேரத்தில் புறப்பட்டுவிடும் என்றான்

எங்கே போகிறீர்கள், நீங்களெல்லோரும் என்று கேட்டாள் வசந்தா.

'நாங்கள் ஒரு கிரிக்கட் கோஷ்டியார். மேட்டூரிலிருந்து சிதம்பரம் போகிறோம். ஒரு மாட்ச் விளையாட என்றான் ஜெயராமன் பெருமையாக

'அப்படியா, சந்தோஷம். எனக்குக் கூட கிரிக்கட் என்றால் ரொம்ப பிடிக்கும் என் அப்பா சிறிய வயதில் நன்றாக ஆடுவார் சரி, உங்கள் காப்டன் யார்?' என்றாள் வசந்தா.

ஜெயராமனுக்கு சற்று அலுப்பு தட்டியது. இருந்தாலும் அதை மறைத்துக்கொண்டு 'இதோ அவரைக் கூட்டிக்கொண்டு வருகிறேன் என்று பின் பக்கம்போனான்.

காப்டன் வெங்கண்ணா அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார அவர் சற்று வயதானவர். யாரோ தன்னைத் தட்டி எழுப்புவதை உணர்ந்த அவர் விழித்துக்கொண்டே 'சிதம்பரம் வந்துவிட்டதா?'' என்று கேட்டார்.

ஜெயராமன் 'ஓய்' உம்மைப்போல் ஒரு தூங்குமூஞ்சியைப் பார்த்ததில்லை சிதம்பரம் இன்னும் வரவில்லை ஆனால் நீர் இங்கே வாரும் என்று அவர் கையைப்பிடித்து வசந்தாவின் முன் கொண்டுவந்து 'இவர்தான்' என்று சொல்லி நிறுத்தினான். வெங்கண்ணாவிற்கு ஒன்றும் புரியவில்லை. என்னடா இது விளையாட்டு, ஜெயராமா' என்றார் சற்று கோபத்துடன்

அதற்குள் அந்தப்பெண் எல்லாம் என் பிசகுதான். நான்தான் அவரை (ஜெயராமனைக் காண்பித்து) 'உங்கள் காப்டன் யார்?' என்று கேட்டேன். உடனே உங்களை தொந்தரவு படுத்தி விட்டார்போலிருக்கிறது' என்றாள்.

வெங்கண்ணா. சங்கோசமின்றி தைரியமாகப் பேசும் வசந்தாவை சற்று உற்றுப் பார்த்தார் எங்கேயோ பார்த்த முகம் போல் அவருக்குத் தோன்றிற்று நீ யார் பெண், அம்மா 'என்று கேட்டார்.

'நான் இன்கம்டாக்ஸ் கமிஷனர் நடராஜய்யர் பெண், பெயர் வசந்தா. நான் சென்னையில் காலேஜில் படிக்கிறேன் இங்கே லீவிற்கு வந்தேன். இவள் என் பாட்டி' என்றாள் வசந்தா.

வெங்கண்ணா இப்பொழுது அவளை நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டார். ஓ' நடராஜன் பெண் வசந்தாவா, நீ? நானும் நடராஜனும் பழைய நாட்களிலிருந்து சிநேகிதர்கள் சென்னையில் நாங்கள் இருவரும் ஒரே கோஷ்டியில் கிரிக்கட் விளையாடுவோம் பெரிய மாட்சுகளுக்கு அப்பொழுது சிறிய பெண்ணாயிருந்த உன்னைக் கூட அழைத்து வருவான், இப்பொழுது பார்த்து பல வருடங்கள் ஆகி விட்டன. சென்னையில் தானே இருக்கிறான்? சௌக்கியம் தானே? என்றார்

'சென்னையில் தான் வேலை இப்பொழுது ரஜா எடுத்துக் கொண்டு சொந்த ஊரான இங்கே வந்திருக்கிறார். எல்லோரும் சௌக்கியம்தான். என்றாள் வசந்தா

'உனக்குக் கலியாணம் ஆய்விட்டதா?' என்று விசாரித்தார் வெங்கண்ணா

'சம்பந்தமுள்ள கேள்வியை இப்பொழுதுதான் கேட்டார்' என்று ஜெயராமன் நினைத்தான்! அவனும் அவனுடைய சகாக்களும் அவளுடைய பதிலை ஆவலுடன் எதிர் பார்த்தனர்!

வசந்தா தலையைக் குனிந்து 'இன்னும் இல்லை' என்றாள் 'பையன்களுக்கு சற்று ஆறுதலாயிருந்தது இந்தச் செய்தி! ஜெயராமன் கலைந்த தன் கிராப்பை அவசரமாக வாரிக் கொண்டான்!

'அதற்கென்னம்மா. வேளை வந்தால் ஆகிறது. உன் குணத்திற்கும் அழகிற்கும் தங்கமான புருஷன் கிடைப்பான். ஆனால் என்னோடு இருக்கிறார்களே. இந்தப் பையன்கள் இவர்களைப்போல் ஒரு பையனும் வேண்டாம் அதிகப் பிரசங்கிகள் என்னாலேயே கட்டி ஆள முடியவில்லை சரி, நீ அப்பாவிடம் சொல் நான் விசாரித்ததாக' என்று சொல்லி விட்டு தன்னிடத்திற்குச் சென்றுவிட்டார்.

ஜெயராமனுக்கு ஒரே கோபம், காப்டன் வெங்கண்ணாவின் பேரில்! வசந்தா அவளைப் பார்த்து 'நீங்கள் உங்கள் காப்டன் சொன்னதை கவனித்தீர்களா? பாவம், அவருக்கு நீங்கள் சிரமம் கொடுக்கக்கூடாது' என்றாள்,

ஜெயராமன் 'அவர் சும்மா சொல்கிறார், ஆட்டத்தில் இறங்கினவுடன் நாங்கள் ஒவ்வொருவரும் அவருக்காக உயிரைக் கொடுத்து ஆடுவோம்' என்றான். வசந்தா அதுதான் சரி' என்றாள். ஜெயராமனுக்கு மிகவும் சந்தோஷம், ஒரு பெண்ணுடைய பாராட்டுதலைப் பெற்றுவிட்டதற்காக!

ஜெயராமன் வசந்தாவைப்பார்த்து 'நீங்கள் எங்கள் கோஷ்டியிலுள்ள மற்றவர்களை தெரிந்துகொள்ளவேண்டாமா? என்று கேட்டான். அவளும் 'சரி என்றாள். ஜெயராமன் தன் வீரப் பிரதாபங்களைசொல்ல ஆரம்பித்தான்.

மணி அடித்தது. மாயவரத்திலிருந்து வரும் ரெயில் வந்துவிட்டது. இவர்கள் ஏறியிருந்த ரெயில் புறப்படுவதற்கான அறிகுறிகள் காணப்பட்டன. வசந்தா கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டாள் கார்டின் 'விசில்' சத்தம் கேட்டது

இதைத் தொடர்ந்துவந்த நிகழ்ச்சிகளெல்லாம் ஒரே விநாடியில் நடந்து விட்டன. வசந்தா பரபரப்புடன் பாட்டியை எழுப்பி, 'பத்திரமாகப் போய்வா' என்று சொல்லிவிட்டு, திடீரென்று கீழே இறங்கிவிட்டாள்! ரெயிலும் புறப்பட்டது. 'போய் வருகிறேன். மாட்சில் வெற்றியை அடைவீர்களாக' என்றாள் ஜெயராமனைப்பார்த்து. அவளுடைய முகத்தில் தோன்றிய குறும்புப் புன்னகை கோஷ்டியினரை 'ஏமாற்றிவிட்டேன்' என்று சொல்வதுபோலிருந்தது அவர்கள் அவளைக் கண்தெரியுமட்டும் பார்த்துக்கொண்டிருந்து உள்ளே திரும்பினார்கள்,

ஒருவர் முகத்திலும் ஈயாடவில்லை. அசடுதான் வழிந்துகொண்டிருந்தது. ஜெயராமன் கிராப்பை கலைத்துக் கொண்டு ஒரே கோபத்தில் பேசினான்.

டேய் முட்டாள்களா, ஏமாந்து போய் இடத்தை விடாதீர்கள் என்று எத்தனை தடவை சொன்னாலும் உங்களுக்குத் தெரிவதில்லை அந்தப்பெண் வந்ததும் எல்லோரும் வாயைப் பிளந்துகொண்டு நின்றுவிட்டீர்கள். நான் போய் படுத்துக்கொள்கிறேன். நான்-சன்ஸ்' என்றான்

தன் படுக்கையிருந்த இடத்தில் பாட்டி குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தாள்! அவன் அந்தப் பாட்டிக்காக தன் ஹோல்டாலை மூலையில் எறிந்தது அப்பொழுதுதான் அவனுக்கு ஞாபகம் வந்தது!

கோபமும் ஏமாற்றமும் மாறி மாறி அவன் முகத்தில் பிரதிபலித்தது. ஏதோ முணுமுணுத்துக்கொண்டே ஒரு மூலையில்போய் தலைமேல் இரண்டு கையையும் வைத்து உட்கார்ந்துவிட்டான். அவனுடைய சகாக்களும் 'அந்தப் பெண்ணுடன் உல்லாசப் பிரயாணம் செய்யலாம்' என்று மனோ உலகிலிருந்து வெறும் தரைக்கு தள்ளப்பட்டவர்களாக தோற்றமளித்தார்கள்,

வண்டியிலிருந்த பேச்சும் பரிகாசமும் நின்றுவிட்டன. நடு நிசியில் சுடுகாடு போன்ற அமைதி. ரெயில் மட்டும் 'தடக், தடக்' என்று ஓடிக் கொண்டிருந்தது.

வெற்றி காண்போம்

☆

(ஸ்ரீமதி ஸரஸ்வதி)

1

கனிவுடன் கருத்து வேணும்
களிப்புடன் காணவேணும்
இனிப்புடன் பேச வேணும்
இசைப்புடன் பாடவேணும்

2

வாழ்வினில் வழிகளுண்டு
வழிகளில் முள்ளுமுண்டு
முள்ளொடு மலருமுண்டு
மலர்களில் மதுவுமுண்டு

3

அறிவினுல் ஆற்றல்கண்டு
அறத்தினுல் ஆட்சி கண்டு
அன்பினுல் இன்பம் கண்டு
அருளினுல் மாட்சி காண்போம்.

4

பாசத்தை பக்தியாக்கி
பக்தியை சக்தியாக்கி
சக்தியை சித்தமாக்கி
நித்தமும் வெற்றி காண்போம்.

ஸ்ரீ சக்தி ஜோஸியம்

ஆரூடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2

குழந்தை ஜாதகம் சுருக்க பலனுடன் கணிக்க ரூ 2

ஒரு வருஷ பலன் மாதவாரியாக எழுத ரூ 6

விவாகப் பொருத்தங்கள் பார்க்க 2 ஜாதகங்களுக்கு ரூ 2

1 தசாவிற்குபுக்திவாரி-பலன்கள் எழுத ரூ 12

ஜாதகம் அல்லது எழுதும் நேரம், பெயர்,தொழில் அனுப்புக. V.P.P தனி.

N. B. வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ். முன் பணமாய் அனுப்புக.

S., ராமச்சந்திரய்யர்,

ஸ்ரீ சக்தி ஜோஸியம், எரவாஞ்சேரி.

திருவிளையாட்டம் P-O.

South India.

नमस्ते !

★

பரீக்ஷை 2-க்கு விடை யளித்த ஏராளமான வாசகர்களிடமிருந்து கடிதங்கள் இன்னும் வந்து குவிந்துகொண்டிருக்கின்றன. எல்லாவற்றையும் பரிசீலனை செய்து அடுத்த இதழில் பொதுவாக ஒரு குறிப்பு எழுதுகிறேன் சிலர் ஸந்தேஹங்களையும் கேட்டிருக்கிருர்கள். அவர்களுக்கு விடையளிக்கும் முறையில் அடுத்த இதழில் संदेह-निवारण என்ற பிரிவும் வெளியாகும்.

"पंडितजी"

★

பயிற்சி 29-अभ्यास 29

விடைகள்-उत्तर

மொழி பெயர்ப்பு-अनुवाद

தேசீய காங்கிரஸ்

நம்முடைய பாரத தேசத்தில் பல அரசியல் ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அகில இந்திய தேசிய காங்கிரஸ், அகில இந்திய ஹிந்து மஹாஸபா, அகில இந்திய முஸ்லிம் லீக், அகில இந்திய ஸோஷியலிஸ்ட் கக்ஷி, அகில இந்திய கம்யூனிஸ்ட் கக்ஷி முதலியவை அவற்றுள் சில முக்யமான ஸ்தாபனங்கள்.

இந்தியாவின் அரசியல் கக்ஷிகளுள் அனைத்திலும் முக்யமான, அனைத்திலும் பெரியதான, அனைத்திலும் ப்ரஸித்தமான, அனைத்திலும் பழைய தான ஸ்தாபனம் அகில இந்திய தேசிய காங்கிரஸ்தான். தேசிய காங்ரேஸ் இன்றைய அல்லது நேற்றைய (இன்றைக்கோ அல்லது நேற்றைக்கோ தோன்றிய) ஏதோ ஒரு ஸ்தாபனம் அல்ல; ஆனால் கிட்டத்தட்ட 65 வருஷமுள்ள (வயதான) பழைய ஸ்தாபனம்.

தேசிய காங்கிரஸின் பழைய தலைவர்களின் ஜாப்தாவில் ஸ்ரீ ஸுரேந்த்ர நாத் பானர்ஜீ, ஸ்ரீ பிபின் சந்த்ர பால், ஸ்ரீ தாதா பாயீ நௌரோஜீ, லாலா லாஜபத் ராய் ஸ்ரீ கோபால் க்ருஷ்ண கோக்லே, லோக்மான்ய ஸ்ரீ பால் கங்காதர் திலக், ஸ்ரீ சித்த ரஞ்ஜன் தாஸ், டாக்டர் ஸ்ரீ விஜயராகவாச்சார்யார், மஹாத்மா காந்தீ, ஸ்ரீமதி ஸரோஜினீ நாயுடு, ஸ்ரீ எஸ் ஸ்ரீநிவாஸ அய்யங்கார், பண்டித் மோதிலால் நேஹ்ரூ, பண்டித் ஜவாஹர்லால் நேஹ்ரூ ஸர்தார் வல்லபபாயீ படேல், பாபூ ராஜேந்த்ர ப்ரஸாத், மௌலானா அபுல்கலாம் ஆஜாத், பாபூ ஸுபாஷ் சந்த்ர போஸ், டாக்டர் பட்டாபி ஸீதாராமய்யா முதலிய பெரிய-பெரிய தலைவர்களின் பெயர்களைக்கூட நாம் கண்டுகொள்கிறோம்.

ஒவ்வொரு வருஷமும் தேசிய காங்கிரஸின் ஒரு வருஷாந்தரப் பெருங்கூட்டம் (Session) நடக்கிறது. பெரிய—பெரிய காங்கிரஸ்காரர்கள் ப்ரதிநிதிகளின் தோரணையில் அந்தப் பெருங் கூட்டத்துக்கு வந்துவிடுகிறார்கள், (மேலும்) அதில் பங்கு எடுத்துக் கொள்கிறார்கள். தேசத்தின் முக்யமுக்யமான ப்ரச்னைகளின் (Problems) மீது அங்கே சர்ச்சைகள் நடக்கின்றன. (மேலும்) சில ப்ரேரணைகள் நிறைவேறிவிடுகின்றன பிறகு அந்த ப்ரேரணைகளுக்கேற்ப காங்கிரஸ்காரர்கள் தேசம் முழுவதிலும் இயக்கம் ஆரம்பித்துவிடுகின்றனர். காங்கிரஸ்காரர்களின் அத்தகைய இயக்கங்கள் காரணமாகத்தான் இன்று நம் பாரதம் ஸ்வதந்த்ரமாக இருக்கிறது.

இந்த வருஷத்து நாஸிக்-காங்கிரஸ்—பெருங்கூட்டத்தின் தலைவர் பாபூ புருஷோத்தம்தாஸ் டண்டன் டண்டன்ஜீ மிகப் பெரிய த்யாகீ (துறவி); ஹிந்தியின் மிக நல்ல அறிஞர் (ஹிந்தீயில் மிக நல்ல அறிஞர்). அவருடைய தலைமையில் இந்தியாவின் எல்லாக் கஷ்டங்களும் நீங்கி விடட்டும், எல்லா ப்ரச்னைகளும் தீர்ந்து விடட்டும் (மேலும்) காங்கிரஸின் பெயர் இன்னும் ப்ரகாசித்து ஓங்கட்டும்!

தந்தை-காந்தீ!

என் தந்தை! உன் தந்தை! அவனே தேசத்தின் அருமைத் தந்தை (அதே) தந்தை நவபாரதத்தின் ஆக்கியோன் (நவபாரதத்தை நிர்மாணித்தவன்.) (அதே) தந்தை ஸ்வதந்த்ரத்தின் சில்பீ.

தம்பீ சொல்; வெற்றி (என்று) சொல் [வாழ்க(வென்று) சொல்]; நீ தந்தை(பாபூ)வாழ்க(வென்று)சொல்

அவனுடைய பெயர்தான் மோஹன் காந்தீ அந்த காந்தீ பாரதத்தின் தந்தை. காந்தீ உலகம் முழுவதிலும் புகழ் பெற்றவன். (நாம்) அவனை மஹாத்மா காந்தீ (என்று) சொல்கிறோம்.

தம்பீ, சொல்; வாழ்க(வென்று) சொல்; நீ காந்தீ வாழ்க(வென்று) சொல்.

[குறிப்பு:—கடவுளை ஒருமையில் குறிப்பிடுவதுபோல் சரித்ரகால மகா புருஷர்களையும் காவ்யரீதியில் ஒருமையில் குறிப்பிடுவதுண்டு இதனால் அவர்களை அவமதிப்பதாகாது]

பாடம் 30-पाठ 30

அவச்யம், நிர்ப்பந்தம்

இவற்றைக் குறிக்கும் துணைவினைகள்

होना, पड़ना

"அவன் மதராஸ் போகவேண்டியிருக்கும்" என்று சொன்னால் அதற்கு என்ன அர்த்தம் என்பதை யோசித்துப் பாருங்கள் தான்போய்ச் செய்யவேண்டிய ஒரு முக்யமான கார்யத்தை உத்தேசித்து 'அவன் மதராஸ் போகவேண்டிய அவச்யம் ஏற்படும்' என்பது ஒரு அர்த்தம். அவனுக்கு இஷ்டமில்லையென்றாலும் பிறருடைய வற்புறுத்தலை முன்னிட்டு 'அவன் மதராஸ் போக வேண்டிய

நிர்ப்பந்தம் ஏற்படும்' என்பது வேறொரு அர்த்தம். இப்படி 'போ' என்ற முக்ய வினையுடன் 'வேண்டியிருக்கும்' என்ற துணை வினையைச் சேர்த்தவுடன் அந்தப் பயனிலைக்கு அவச்யம் நிர்ப்பந்தம் முதலியவற்றைக் குறிக்கும் திறமை ஏற்பட்டுவிடுகிறது. இதே மாதிரி அர்த்தத்தில், 'வேண்டியிருக்கும்' என்ற எதிர்காலத் துணைவினை மற்ற காலங்களிலும் உபயோகப்படலாம்.

'அவன் மதராஸ் போகவேண்டியிருக்கும்' என்ற வாக்யத்தைத் தமிழில் 'அவனுக்கு மதராஸ் போகவேண்டியிருக்கும்' என்றும் எழுதுவதுண்டு. இந்த இருவித ப்ரயோகங்களும் தமிழில் வழங்குகின்றன.

இதேமாதிரி அவச்யம் அல்லது நிர்ப்பந்தத்தைக் குறிக்க ஹிந்தீயிலும் துணை வினைகள் உண்டு, ஆனால் ஒரு சிறிய வித்தியாசம். முன் சொன்ன அவச்யத்தைக் குறிக்க हो என்ற துணை வினையும், பின் சொன்ன நிர்ப்பந்தத்தைக் குறிக்க पड़ என்ற துணை வினையும் ஹிந்தீயில் வெவ்வேறாக உபயோகப்படுகின்றன; ஹிந்தீ வாக்ய அமைப்பிலும் ஒரு சிறிய வித்தியாசம் உண்டு, தமிழில் எழுதுவதுபோல் 'அவன் மதராஸ் போகவேண்டியிருக்கும்', 'அவனுக்கு மதராஸ் போகவேண்டியிருக்கும்' என்று இருவிதமாகவும் ஹிந்தீயில் எழுதுவதில்லை, பின் சொன்ன 'அவனுக்கு மதராஸ் போகவேண்டியிருக்கும்' என்ற ப்ரயோகம்தான் ஹிந்தீயில் சரியானது அந்த ஹிந்தீ வாக்யத்தைத் தமிழில் மொழிபெயர்க்கும்போது தமிழ் நடையையொட்டி 'அவன் மதராஸ் போகவேண்டியிருக்கும்' என்றும் சொல்லலாம், அது தவறில்லை இதோ பாருங்கள் :

அவன் மதராஸ் போக வேண்டியிருக்கும்
அவனுக்கு மதராஸ் போகவேண்டியிருக்கும் } (அவச்யம்)

उसको मदरास जाना होगा।

அவன் மதராஸ் போக வேண்டியிருக்கும்
அவனுக்கு மதராஸ் போகவேண்டியிருக்கும் } (நிர்ப்பந்தம்)

उसको मदरास जाना पड़ेगा।

இந்த ஹிந்தீ வாக்யங்களில் எழுவாய்களுடன் को சேர்த்து அவற்றை நான்காம் வேற்றுமையில் வைத்திருப்பதைக் கவனிக்கவும். இதுதான் ஹிந்தீ இலக்கணப்படி சரி. பயனிலைகளில் முக்ய வினைகள் தத்தம் தொழிற்பெயர்களின் வடிவங்களில் இருப்பதையும் கவனிக்கவும்.

எதை அல்லது யாரை என்று பயனிலையுடன் சேர்த்துக் கேள்வி கேட்டால் பதிலாக வரக்கூடிய சொல் 'செயப்படுபொருள்' (Object) எனப்படும். செயப்படு பொருள் உள்ள வினையைச் 'செயப்படுபொருள் குன்றா வினை (Transitive verb) என்றும், செயப்படுபொருள் இல்லாத வினையைச் செயப்படுபொருள் குன்றிய வினை' (Intransitive verb) என்றும் சொல்கிறோம். இந்த வகையில் 'பார்', 'படி', 'வாங்கு', 'எழுது' முதலிய வினைகள் செயப்படுபொருள் குன்றா வினைகள்; 'வா', 'போ 'உட்கார்', 'எழுந்திரு' முதலிய வினைகள் 'செயப்படுபொருள் குன்றிய வினைகள்.

பயனிலையில் हो அல்லது पड़ என்ற துணை வினை சேர்ந்து வரும்போது, முக்ய வினை செயப்படுபொருள் குன்றிய வினையாக இருந்தால்' அதனுடன் ना தான் சேரும்.

(உ—ம்)

उसको यहाँ आना पड़ेगा।

—அவன் இங்கே வரவேண்டியிருக்கும்

हमको वहाँ जाना पड़ेगा।

—நாங்கள் அங்கே போகவேண்டியிருக்கும்.

रामको यहाँ सोना होगा।

—ராமன் இங்கே தூங்கவேண்டியிருக்கும்.

सीताको वहाँ रहना होगा।

—ஸீதை அங்கே வஸிக்கவேண்டியிருக்கும்.

எழுவாய்களுடன் को சேர்ந்திருக்கும் இந்த ப்ரயோகங்களில், அந்தந்த எழுவாய்களின் எண், பால். இடம் இவற்றை யொட்டி பயனிலைகள் மாறாமல் எப்போதும் ஒரே மாதிரியாக இருப்பதையும் கவனிக்கவும்.

இப்படிக்கின்றி வாக்யத்தின் பயனிலையில், முக்ய வினை செய்யப்படுபொருள் குன்றா வினையாக இருக்குமே

Zam-Buk ஜாம்பக், சருமநோய் மண்டைச் சிறங்கைச் சமனமூட்டி குணப்படுத்தும்

எரிச்சலை நிறுத்தி தொத்துக் கிருமிகளைக் கொல்லும்

மூலிகை சத்து நிரம்பிய ஜாம்பக் சருமத்தினூடே புகுந்து கிருமிகளை நொடியில் கொல்லுகிறது எரிச்சலையும் சீழ் வருவதையும் நிறுத்தி சருமத்தைப் பரிசுத்தமாக்கும். எல்லா சரும நோய்கள், காயங்கள் தீப்புண்கள், வயனல் கால் நோய்கள் பூச்சி கடிகள், மூலம் இவற்றை ஜாம்பக் அற்புதமாய் குணப்படுத்தும் மிருகக் கொழுப்பு சேராததற்கு உத்தரவாதம். ஏஜண்டுகள் தாதா & கம்பெனி, பி டி மதராஸ்.

ஜாம்பக் — உலகின் மகோன்னத சருமக் களிம்பு

யானல், செயப்படு பொருளின் எண், பால், இடம், இவற்றை யொட்டிப் பயனிலையும் மாறும். அப்போதும் எழுவாயுடன் **को** வரும். தவிர, எழுவாய்க்கும் பயனிலைக்கும் எண், பால், இடம். ஸம்பந்தமான தொடர்பு இல்லாமலிருப்பதும் கவனிக்கத் தக்கது.

(உ—ம்)

मुझको घोड़ा ख़रीदना होगा।

—நான் குதிரை வாங்க வேண்டியிருக்கும்.

हमको घोड़ा ख़रीदना होगा।

—நாங்கள் குதிரை வாங்க வேண்டியிருக்கும்.

तुझको घोड़ा ख़रीदना होगा।

—நீ குதிரை வாங்க வேண்டியிருக்கும்.

तुमको घोड़ा ख़रीदना होगा।

—நீர் குதிரை வாங்க வேண்டியிருக்கும்.

आपको घोड़ा ख़रीदना होगा।

நீங்கள் குதிரை வாங்க வேண்டியிருக்கும்.

उसको घोड़ा ख़रीदना होगा।

—அவன் (அவள்) குதிரை வாங்க வேண்டியிருக்கும்

उनको घोड़ा ख़रीदना होगा।

—அவர்கள் குதிரை வாங்க வேண்டியிருக்கும்

इसको घोड़ा ख़रीदना होगा।

—இவன் (இவள்) குதிரை வாங்க வேண்டியிருக்கும்

इनको घोड़ा ख़रीदना होगा।

—இவர்கள் குதிரை வாங்க வேண்டியிருக்கும்

பயனிலை செயப்படு பொருள் குன்றுவினையாக இருக்கும்போது, மேற்சொன்ன எண், பால், இடம், ஸம்பந்தமான தொடர்புகள் அந்தப் பயனிலைக்கும் அதன் செயப்படு பொருளுக்கும்தான் இருக்கும்.

(உ—ம்)

எதிர் காலம்

राम को एक केला ख़रीदना होगा।

(செ. பொ.—ஆ பா. ஒருமை)

—ராமன் ஒரு வாழைப்பழம் வாங்க வேண்டியிருக்கும்.

राम को दस केले ख़रीदने होंगे।

(செ. பொ:—ஆ பா: பன்மை)

—ராமன் பத்து வாழைப்பழங்கள் வாங்கவேண்டியிருக்கும்

राम को एक कुरसी ख़रीदनी होगी।

(செ பொ—பெ. பா. ஒருமை)

—ராமன் ஒரு நாற்காலி வாங்க வேண்டியிருக்கும்.

राम को दस कुरसियाँ ख़रीदनी होंगी।

(செ பொ.—பெ பா பன்மை)

—ராமன் பத்து நாற்காலிகள் வாங்கவேண்டியிருக்கும்.

நிகழ்காலம்

राम को एक रुपया देना पड़ता है।

—ராமன் ஒரு ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கிறது

राम को दस रुपये देने पड़ते हैं।

—ராமன் பத்து ரூபாய்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது

राम को एक मिठाई देनी पड़ती है।

—ராமன் ஒரு மிட்டாய் கொடுக்க வேண்டியிருக்கிறது.

राम को दस मिठाइयाँ देनी पड़ती हैं।

—ராமன் பத்து மிட்டாய்கள் கொடுக்க வேண்டியிருக்கிறது

இந்த உதாஹரண வாக்யங்களிலெல்லாம் பயனிலைகள் தத்தம் எழுவாய்களையொட்டி மாருமல், செயப்படு பொருள்களின் எண், பால், இடம், முதலியவற்றையொட்டி மாறுவதைக் கவனிக்கவும்,

ஆனல் ஒரு விஷயம். செயப்படு பொருளையடுத்து **को** வரும்போது மட்டும், அந்தச் செயப்படுபொருளின் எண், பால், இடம் முதலியன எப்படியிருந்தாலும், பயனிலை எப்போதும் ஆண் பால், ஒருமை, படர்க்கையிலேயே மாருமல் இருக்கும்; காலத்துக்கான மாறுதல் மட்டும்தான் பயனிலைக்கு ஏற்படும்

(உ—ம்)

நிகழ்காலம்

मुझे लड़के को बुलाना पड़ता है।

मुझे लड़कों को बुलाना पड़ता है।

मुझे लड़की को बुलाना पड़ता है।

मुझे लड़कियों को बुलाना पड़ता है।

எதிர்காலம்

मुझे लड़के को बुलाना पड़ेगा।

मुझे लड़कों को बुलाना पड़ेगा।

मुझे लड़की को बुलाना पड़ेगा।

मुझे लड़कियों को बुलाना पड़ेगा।

பயனிலை செயப்படுபொருள் குன்றுவினையாக இருந்தும் வாக்யத்தில் செயப்படு பொருள் குறிப்பிடப்படாமலோ அல்லது தெளிவற்றதாகவோ இருந்தால் அப்போதும் பயனிலை ஆண்பால், ஒருமை படர்க்கையிலேயே மாருமல் இருக்கும்; காலத்துக்கான மாறுதல் மட்டும்தான் அதற்கு ஏற்படும்,

(உ—ம்)

செ. பொ. குறிப்பிடப்படவில்லை.

मुझको खाना है।

उसको पीना है।

हम को पढ़ना है।

செ. பொ. தெளிவாக இல்லை

मुझको कुछ खाना पड़ेगा।

उसको क्या पीना पड़ेगा?

हमको सब पढ़ना पड़ेगा।

'நான் ராமனுக்கு ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும்' என்பதுபோன்ற வாக்யங்களை ஹிந்தியில் மொழி பெயர்க்கும்போது ஒரே வாக்யத்தினிடையில் இரண்டு தடவை **को** வரும். அதைக் கேட்பதற்கு நன்ருயிராது அப்போது இலக்கணத்துக்குட்பட்டு ஒரு **को** வைத்தவிர்க்க முயற்சி செய்ய வேண்டும்.

(உ—ம்)

நான் ராமனுக்கு ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும்.

मुझको रामको रुपया देना पड़ेगा।

मुझे रामको रुपया देना पड़ेगा।

मुझको रामको என்று அடுத்தடுத்து இருமுறை **को** வை உபயோகிப்பது நன்ருயில்லை. ஆதலால் **मुझको** என்பதை **मुझे** என்று மாற்றிக் கொள்ளலாம். **मुझे** என்ருலும் **मुझको** என்றுதான் அர்த்தம் இரண்டும் நான்காம் வேற்றுமையில் வழங்குகின்றன. எனவே இதில் இலக்கணப் பிழையொன்றுமில்லை இதேமாதிரி

तुझे, तुझको; उसे, उसको; इसे, इसको; हमें, हमको; तुम्हें, तुमको; उन्हें, उनको; इन्हें, इनको; किसे, किसको; जिसे, जिसको; किन्हें, किनको; जिन्हें, जिनको —முதலிய சொற்களையும் மாற்றிக் கொள்ளலாம்

ப்ரதிப் பெயர்ச் சொற்களில்தான் இத்தகைய 'மாற்றம் ஸாத்யம். பெயர்ச் சொற்களில் இத்தகைய மாறுதலுக்கு இடமில்லை அப்போது வேறு வழியின்றி இருமுறை **को** வை உபயோகித்துத்தான் ஆகவேண்டும்.

(உ—ம்)

ராமன் கோபலனுக்கு ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும்.

राम को गोपाल को रुपया देना पड़ेगा।

இதில் இன்னொரு குழப்பத்துக்கும் இடமுண்டு. 'ராமன் கோபாலனுக்கு ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும்' என்பதற்கும் 'ராமனுக்கு கோபாலன் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும்' என்பதற்கும் ஹிந்தீ மொழிபெயர்ப்பு ஒரே மாதிரியாகத்தான் இருக்கும்.

(உ—ம்)

ராமனுக்கு கோபாலன் ரூபாய் கொடுக்க வேண்டியிருக்கும்,

राम को गोपाल को रुपया देना पड़ेगा

ஸந்தர்ப்பத்தை யொட்டியும், ஓசையழுத்தத்தைக் கொண்டும் தான் இந்தக் குழப்பத்தைத் தவிர்த்துக்கொள்ள முடியும்.

(ஆ) ஸாராம்சம்-सारांश

टंडनजी का भाषण

कांग्रेस के अध्यक्ष बाबू पुरुषोत्तम दास टंडनजी के मासिक-भाषण की कुछ मुख्य बातें इस प्रकार हैं:—

भारत का नया संविधान

"भारत में कई धर्मों के लोग हैं। उन सभी लोगों का इस देश पर अधिकार है। हिन्दू, मुसलमान, सिक्ख, ईसाई, पारसी, जैन, बौद्ध, सब लोग इसी देश की संतान हैं। यद्यपि उनके धर्म अलग-अलग हैं, तो भी वे सब लोग एक ही भारतीय राष्ट्र के अंग हैं। इसलिए उन सबों के अधिकार यहाँ बराबर होंगे। भारत के नए संविधान की यह नीति मुझे बहुत पसंद है। यही होशियार नीति है। भारत में लौकिक राज ही चलाना होगा। सब को यही नीति माननी पड़ेगी। किसी एक धर्म-ग्रंथ के आधार पर हमारा राज नहीं चल सकेगा। पाकिस्तान से धार्मिक राज की नीति हमें नहीं सीखनी है।"

राष्ट्रभाषा हिन्दी

"हिन्दी हमारी राष्ट्रभाषा है। इसे हमें दिलसे अपनाना होगा। संविधान के अनुसार, पंद्रह वर्षों के बाद हिन्दी ही भारत की सरकारी भाषा होगी। मेरी राय में, हमको पंद्रह वर्ष तक भी नहीं ठहरना है। देश भर में हिन्दी का खूब प्रचार करना होगा। पंद्रह सालों के अंदर ही उसे सरकारी भाषा बनानी होगी। भारत की एकता के लिए यह काम बहुत आवश्यक है। अंगरेज़ी विदेशी भाषा है। हिन्दी स्वदेशी भाषा है। इसलिए राज-भाषा होने का गौरव हिन्दी को शीघ्र मिलना होगा। सभी भारत-वासियों को मिलकर इसकी कोशिश करनी होगी।"



ग्राम-उद्योग और खादी

"महात्मा गांधी के कार्यक्रम में ग्राम-उद्योगों और खादी का बहुत प्रमुख स्थान है। सभी कांग्रेसजन

उस कार्यक्रम को मानते हैं। हमारे राज्यों की कांग्रेस-सरकारें भी उसे मानती हैं। लेकिन अब देश में ग्राम-उद्योगों और खादी के प्रचार के लिए बहुत कम प्रयत्न ही हो रहे हैं। यह अच्छा नहीं है। जब तक ग्राम-उद्योगों और खादीकआ प्रचार खूब नहीं होता, तब तक ग्रामों की उन्नति नहीं हो सकती। जब तक ग्रामों की उन्नति नहीं होती, तब तक देश की उन्नति भी नहीं हो सकती। इसलिए सभी कांग्रेसजनों और कांग्रेस-सरकारों को ग्राम-उद्योगों और खादी का अधिक प्रचार और उपयोग करना होगा। महात्मा गांधी की आत्मा तभी खुश होगी और देश की भी उन्नति होगी। ”

(இ) குறிப்புக்கள்-नोट

1. ஹிந்தியில் அவச்யத்தைக் குறிக்க हो என்ற துணைவினையும், நிர்ப்பந்தத்தைக் குறிக்க पड़ என்ற துணைவினையும் உபயோகப்படுகின்றன,

2. हो, पड़ இவை துணை வினைகளாக வரும் வாக்யங்களின் எழுவாய்களுடன் को சேர்ந்து, எழுவாய்கள் நான்காம் வேற்றுமையில் இருக்க வேண்டும் அப்போது எழுவாயின் எண், பால், இடத்தை யொட்டிப் பயனிலை மாருது.

3. பயனிலையில் हो அல்லது पड़ என்ற துணைவினை சேர்ந்து வரும்போது, முக்யவினை செயப்படுபொருள் குன்றிய வினையாக இருந்தாலோ, அல்லது செயப்படுபொருள் குன்ருவினையாளுலும் அந்தச்செயப்படுபொருளையடுத்து को வந்தாலுமோ, முக்யவினை ना சேர்ந்த தொழிற்பெயர் வடிவத்திலேயே இருக்கும்; பயனிலை எப்போதும் படர்க்கை, ஆண்பால் ஒருமையாக இருக்கும்.

4. பயனிலையில், முக்யவினை செயப்படுபொருள் குன்ருவினையாகவுமிருந்து, செயப்படு பொருளையொட்டி को வராமலும் இருந்தால், அப்போது செய்யப்படு பொருளின் எண், பால், இடம் இவற்றையொட்டிப் பயனிலையும் மாறும்.

5, ஸாத்யமான இடங்களிலெல்லாம் को பல முறை அடுத் தடுத்து வருவதைத் தவிர்க்க முயலவேண்டும்

6. நிகழ்காலத்தில் हो துணைவினையாக வரும்போது देखना होता है, पढ़ना होता है, लिखना होता है முதலியவற்றிற்குப் பதிலாக देखना है पढ़ना है, लिखना है என்றும் சொல்லலாம்.

(ஈ) சொற்களஞ்சியம்

शब्द-भंडार

सारांश—(ஆ. பா.) ஸாராம்சம்.

विधान—(ஆ. பா,) சட்டம் (Law)

संविधान-(ஆ. பா.) அரசியலமைப்புச் சட்டம் (Constitution)

धर्म—(ஆ. பா,) தர்மம், மதம்.

धार्मिक—மத ஸம்பந்தமான

अधिकार—(ஆ பா.) அதிகாரம் உரிமை.

सिक्ख—(ஆ. பா.) சீக்கியன் (Sikh)

ईसा—(ஆ. பா.) ஏசு; ईसाई—ஏசு மதத்தைப் பின்பற்றும், கிறிஸ்தவன்.

पारसी—(ஆ. பா.) பார்ஸீ (ஒரு வகுப்பு)

संतान—(பெ. பா.) குழந்தை, மக்கள்.

लौकिक-லௌகிகமான, (Secular)

राज-(ஆ பா) ஆட்சி.

ग्रंथ—(ஆ. பா.) க்ரந்தம், நூல்.

आधार—(ஆ பா) ஆதாரம், அடிப்படை.

दिल—(ஆ. பா,) மனம், உள்ளம்.

राय-(பெ. பா.) அபிப்ராயம். கருத்து.

शीघ्र—சீக்ரமாக.

कोशिश—(பெ. பா.)—प्रयत्न(ஆ பா) —முயற்சி

उद्योग—(ஆ பா) தொழில் (Industry)

उन्नति—(பெ. பா.) முன்னேற்றம்.

பயிற்சி 30-अभ्यास-30

“ टंडनजी का भाषण ”

என்ற அம்சத்தைத் தமிழில் மொழி பெயர்க்கவும்.

“टंडनजी का भाषण”—इसका तमिल में अनुवाद कीजिए।

(விடைகள் அடுத்த இதழில்)

(उत्तर अगले अंक में)

जय हिंद! जय हिंदी!

அட்டைப்படம்

★

திருப்பதி திவ்யக்ஷேத்திரத்துக்குச் செல்லும் மார்க்கத்தில் இயற்கை வளத்தோடு சிந்தையைக் கவரக்கூடிய இக்காட்சியைக் கண்ணுறலாம். நேரில் போய் பார்க்கு முன்னதாக இவ்விதழின் அட்டையில் முன்னதாகவே நேயர்கள் அக்காட்சியைக் காணலாம்.

குஸ்திச்சண்டை

ப.ரா

வஸ்தாத் முனுசாமி கோதாவிலிறங்கித் தொடையில் படா’ரென்று ஒரு தட்டுத் தட்டியதுமே கரகோஷம் வானைப் பிளந்தது. திரண்டு உருண்டு இரும்பையொத்திருந்த அவன் உறுப்புகளும், முறுக்கு மீசையும், எமனையும் அஞ்சாது நோக்கும் கம்பீரப் பார்வையும் சுற்றி நின்ற ஜனங்களின் உள்ளத்தில் ஒரு படபடப்பையுண்டாக்குவனவாயிருந்தன அவனை மல் யுத்தத்தில் எதிர்த்து நிற்கத் துணிந்து வந்திருந்த இளைஞன்மீது பார்வை சென்றபோது, ‘ஐயோ பாவம்! வகை தெரியாமல் மாட்டிக்கொண்டு விட்டான் பையன், இவன் கை கால் முறியாமல் பிழைத்தாலே பெரிய காரியம்’ என்று அவர்கள் எண்ணியதும் இயற்கைதான்.

கும்பகோணம் வட்டாரத்திலேயே முனுசாமி பிரபல பயில்வான் அவன் பெயர் சொன்னால் அழுதபிள்ளை வாய் மூடும், குஸ்திச் சண்டையில் அவனுக்கு ஈடு கொடுத்தவர்கள் அங்கு யாருமில்லை முனுசாமி கோதாவில் நுழைந்தானானால், போட்டி வெற்றி—தோல்வியோடு முடிவடைந்துவிடாது. தோற்ற எதிரியின் நரம்பு ஸ்தானங்களில் கை வைத்து, கையோ காலோ இடுப்போ அவனது மிகுதி வாழ் நாளுக்குப் பிரயோஜனப்படாமல் செய்துவிடுவான் அதில் அவனுக்கு ஒரு திருப்தி. அந்த விஷயத்தில்மட்டும் அவனிடம் தயாதாட்சண்யம் எதிர்பார்க்க வேண்டியதில்லை. இந்த உண்மையை நன்கு அறிந்த போதிலும் அந்த வாலிபன் என்ன தைரியத்துடன் பந்தயத்துக்கு நிற்கிறானென்பதுதான் ஜனங்களது பெரு வியப்பு, ‘ஜயிப்பவனுக்கு நூறு ரூபாய் பரிசு’ என்ற நாட்டாண்மைக்காரரின் அறிவிப்பு ஒருகால் அவன் மூளையைக் கலக்கி விட்டதோ என்னவோ! இருந்தாலும் இந்த அற்பத் தொகைக்காக வாழ்க்கையையே பாழடித்துக் கொள்ளத் துணிந்த பைத்தியக்காரர்களும் இருப்பார்களா?

‘என்ன ஐயா, பையன் முகத்தில் சொட்டுகிற களையைப் பார்த்தால், பைத்தியம்போலவா தோன்றுகிறது? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ! இவனிடமும் ஏதோ சரக்கிருக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால், இந்த ஜோலிக்கு வந்திருக்க மாட்டான் பார்ப்போமே அவன் கைவேலையையும்,’ என்று அபிப்பிராயம் சொன்னவர்கள் இருந்தனர், ஆனால், உள்ளூர அவர்களிற் பலருக்கு தங்கள் வார்த்தையிலேயே நம்பிக்கை கிடையாது.

‘நான் என்ன ஐயா செய்வது?’ ‘வேண்டாமடா, வேண்டாம்’ என்று என்னாலானவரை சொல்லிப் பார்த்து விட்டேன். பையன் கேட்கவில்லை, ‘நான் அனாதை ஸ்வாமி; எனக்கு ஏதாவது நேர்ந்துவிட்டால், ஒரு துளி கண்ணீர் விடுவதற்கு ஆள் கிடையாது, நீங்கள் கவலைப்படாதீர்கள்.’ என்கிறான் முனுசாமியின் காதிலும் ஒரு வார்த்தை போட்டு வைத்தேன்—‘பையன் பாவம். வீணுக்கி விடாதேயப்பா’ என்று இதற்கு மேல் என்னால் என்ன செய்ய முடியும்?’ என்று நாட்டாண்மைக்காரர் நண்பர்களிடம் விஸ்தரித்துக் கொண்டிருந்தார். அவர்தான் பந்தயத்தைக் கண்காணித்துத் தீர்ப்புச் சொல்பவர்.

‘பையன் யார்? எந்த ஊர்க்காரன்?’ என்று விசாரித்தார் மிராசு மீனுக்ஷி சுந்தரம்.

‘எங்கேயோ மதுரைப் பக்கமிருந்து வருகிறானாம், வந்து இரண்டு மாதங்கூட ஆகவில்லை போன மாதம் நம்ப சாம்பான் நிலத்தை ஏலம் போட்டார்களல்லவா? அதை முன்னூறு ரூபாய்க்கு இவன்தான் எடுத்தான். ‘கையிலிருந்த பணமெல்லாம் அதற்குக் கொடுத்துவிட்டேன் இப்போது அந்த நிலத்தைத் திருத்தக்கூடக் காலணா இல்லை; பந்தயத்திலாவது எனக்கு அதிர்ஷ்டமிருக்குமா என்று பார்க்கிறேன்’ என்கிறான். ‘இளங்கன்று பயமறியாது என்பது சரியாய்த்தானிருக்கிறது, என்றார் நாட்டாண்மைக்காரர். என் கடமையை நான் செய்து விட்டேன். பையன்தான் பிடிவாதமாயிருக்கிறான்.’ என்று அவர் தம்மைத்தாமே திருப்தி செய்துகொள்ள முயன்றார்.

உள்ளூர் பெரிய மனிதர்களெல்லோரும் வந்து கோதாவின் ஓரத்தில் போடப்பட்டிருந்த பெஞ்சை நிரப்பி விட்டனர், இனி பந்தயம் ஆரம்பமாக வேண்டியதுதான். வெட்டியான் சுப்பன் தம்பட்டத்தை அடித்து முழக்கினான். ‘ஏனய்யா, இவன்கள் சலாம் வரிசை எடுக்கும்போது நம் மேலே வந்து விழுந்துவிட்டால் என்ன செய்கிறது? பெஞ்சை இன்னும் கொஞ்சம் தள்ளிப் போட்டுக்கொள்வோமா?’ என்று மீனுக்ஷிசுந்தரம் பிரேரேபித்தார் அங்ஙனமே பெஞ்சு இரண்டடி பின்னுக்கு நகர்ந்தது. முனுசாமி சலாம் வரிசையைத் தொடங்கினான்.

‘சின்னத்தம்பீ, என்னப்பா சும்மா நிற்கிறே? இன்னும் சட்டையைக் கூடக் கழட்டலையே. நீ குஸ்திபோட வந்தயா, வேடிக்கை பார்க்கத்தான் வந்தயா?’ என்று தூண்டினான் தலையாரி பக்கிரி.

‘அட கழட்டப்பா சட்டையெ. ஓரல்லே தலையெக் குடுத்தப்புறம் ஓலக்கைக்குப் பயந்தா முடியுமா?’ என்று சில ரஸிகர்கள் ஆர்ப்பரித்தனர். சின்னத்தம்பியின் அமைதியை அவர்கள் நடுக்கமென்று தவறாய் எண்ணிவிட்டனர்.

சின்னத்தம்பி புன்சிரிப்புடன் சட்டையைக் கழற்றியெறிந்தான் மறு கணம் லங்கோட்டா’வுடன் நின்ற அவன் உடலின் வனப்பு எல்லோரையும் ஆக்ரஷித்தது

அந்த ஆகிருதியில் மனதிற்கு அச்சந்தரத்தக்க அம்சம் எதுவுமில்லை பரந்து விரிந்த மார்பு, அதற்கேற்ற முறுக்கேறிய புஜங்கள் உறுதிக்கும் லாகவத்திற்கும் பொருத்தமான கால்கள். எல்லாம் தகுந்த பிரமாணத்தில் அமைந்திருந்தன, கிரீஸ் தேசத்துச் சிற்பங்களைப்போல் ஒரு முறை கோதாவை வலம் வந்தபின், சின்னத்தம்பி சலாம் வரிசை எடுத்த ஜோரிலேயே ‘இவன் சாதாரண ஆளல்ல’

என்று எண்ணத் தொடங்கினர் பலர். முதன்முறை அவன் கை நீட்டி முனுசாமிக்குப் 'பஞ்சா' கொடுத்து உதறிய போது பல உள்ளங்கள் 'திக் திக்' கென்று அடித்துக்கொண்டன 'அடேடே! வெகு 'ஸ்டைலாய்ப் போடுகிறுனே, என்று நாட்டாண்மைக்காரரே வாய்விட்டுப் பாராட்டினுர்.

சின்னத்தம்பியும் முனுசாமியும் புலிகள் மாதிரி பாய்ந்து பதி போட்டனர் ஒருவருக்கொருவர் சளைக்கவில்லை அவர்கள் தொடை தட்டும் சப்தம் கோதாவை அதிரச் செய்தது 'தம்' கட்டும்போது எழுந்த பெரு மூச்சுகள் உஷ்ணக் காற்றைப் பரப்பின ஆரம்பித்ததுமே சின்னத்தம்பி மண்ணைக் கௌவி விடுவானென்று எதிர்பார்த்திருந்த பலர், உற்சாகத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தனர். மீன்போல் பிடிக்கு அகப்படாமல் நழுவிக்கொள்ளும்இந்த எதிரியை வீழ்த்துவது அவ்வளவு சுலபமல்லவென்று முனுசாமியே கண்டுகொண்டான். நேரம் செல்லச் செல்ல அவனது உக்ரம் அதிகரித்தது அத்துடன் நிதானமும் அவனைக் கைவிட்டது எதிரி அவன் களைத்துப் போகட்டுமென்றே வேலை செய்வதாய்த் தோன்றியது.

'பூ! இவ்வளவுதானு முனுசாமி? சிங்கம் கிழடு தட்டிப்போய்விட்டது போலிருக்கிறதே?' என்று யாரோ சொல்வது கேட்டது. அவனது பதினைந்து வருஷ கோதா அனுபவத்தில் இத்தகைய ஒரு வார்த்தை காதில் விழுந்ததில்லை, சண்டை தொடங்கி அரைமணி நேரம் ஆகியும் வெற்றி தோல்வி காணக்கூட வில்லையென்ருல்...? இம்முறை விடுவதில்லையென்று சின்னத்தம்பியின்மீது பாய்ந்தான்.

மற்போர் ஒரு கலை வேகம், ஜாக்கிரதை, சகிப்புத்தன்மை எல்லாவற்றிற்கும் மேலாக புத்தி நிதானம் இவை இல்லாவிடில் அதற்கும் வெறும் மூர்க்கத்தனமான சண்டைக்கும் யாதொரு பேதமுங்கிடையாது இப்போது முனுசாமி நிதானமிழந்ததும் எதிரி அதைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டான் 'கேவலம் உடல் வலிவும் முரட்டுத் தைரியமுமிருந்தால் போதாது; லாகவமும திறமையும் படைத்த எதிரியை அவை ஒன்றும் செய்ய முடியாது' என்று நிரூபிப்பதாயிருந்தது மேலே நடந்த சம்பவம்

முனுசாமி தன் பிரசித்திபெற்ற கத்திரிப் பிடியைச் சின்னத்தம்பியின்மீது பிரயோகிக்க முற்பட்டான். அவன்மட்டும் அதில் சிக்கிவிட்டானுனுல், பின் கழுத்து உடையாமல் தப்புவது துர்லபம். பிடி அரைகுறையாய் ஏறியது. சின்னத்தம்பி ஒரு கணம் திணறினுன். ஆனுல், கழுத்தின் பின்னிருந்து மேலே பட்ட முனுசாமியின் உஷ்ணமான மூச்சு, அவன் தலை அருகிலேயே இருப்பதை அவனுக்கு உணர்த்தியது. மறுகணம் அந்தப் பிடரியில் இரு கைகளையும் பின்னுக்குத் தள்ளிக் கோர்வை போட்டுவிட்டான் பாய்ந்த வேகத்தில் தற்காப்பை மறந்துவிட்ட முனுசாமி தன் பிடிக்கு மறுப்புப் பிடியிலேயே வகையாய் மாட்டிக்கொண்டான்.

பிடிக்குப்பிடி; கழுத்துக்குக் கழுத்து இருவரும் சில விஞடிகள் அதே நிலையில் போராடினர். ஜனங்கள் மூச்சைப் பிடித்துக்கொண்டு பார்த்தனர் இரண்டு நிமிஷ நேரமாய் சேர்ந்தாற்போல் 'தம்' கட்டியிருந்த முனுசாமி, வாயைத் திறந்து மூச்சை வெளிவிட்டான். அவ்வளவுதான் அவனுக்குத் தெரியும். மறுபடி கண் விழித்தபோது மண்ணில் கிடந்தான். அவன் கோதாவில் இறங்கியபோது ஆரவாரம் செய்து வரவேற்ற அதே ஜனங்கள் இப்போது மறுபடியும் ஆர்ப்பரித்துச் சின்னத் தம்பியின் வெற்றிக்குக் குதூகலம் தெரிவித்துக்கொண்டிருந்தனர் முனுசாமியின் முதுகில் ஒட்டியிருந்த மண்ணைத் தட்டிவிடக்கூட யாரும் முன்வரவில்லை 'இதென்ன? தான் காண்பது கனவா? அந்தப் பூஞ்சைப் பயலிடம் தோற்றிருப்போமா? இருக்காது—ஒருக்காலும் இருக்காது.'

முனுசாமி எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டான் அவ்வளவு பெரிய சரீரம் கீழே விழுந்த அதிர்ச்சியில் உடலெங்கும் ஒரே வலி. எலும்புகள் ஒன்ருேடொன்று உராய்ந்துகொள்வதுபோலிருந்தன. அதோ அந்த ஓரத்தில் நாட்டாண்மைக்காரர் சின்னத்தம்பியின் கழுத்தில் ஒரு மாலையைப் போட்டுவிட்டு, அதைத் தொடர்ந்து ஒரு பிரசங்கமும் செய்ய முயற்சித்துகொண்டிருந்தார்.

"சகோதர சகோதரிகளே. இன்று... நாம்... இப்போது... இன்று..." என்று அவர் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு மேலே பேச வார்த்தை வராமல் விழித்தபோதிலும் கூட்டத்தில். கைதட்டலுக்கு ஒன்றும் குறைவில்லை தங்களைப் பார்த்துச் சிலர் கேலியாகச் சிரிப்பதும் அவன் கண்களுக்குத் தப்பவில்லை அவன் உடல் வலித்ததுபோல் நெஞ்சும் எரிந்தது எத்தகைய அவமானம்! நேற்று அவன் அந்தப் பிராந்தியத்துக்கே பெரிய மனிதன்! இன்ருே......?

கூட்டத்தை ஒரு முறை கண்காணித்தான், அங்கு அவனுக்குத் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள். வேண்டியவர், வேண்டாதவர் எல்லோருமிருந்தனர். ஆனுல், அவனை யாரும் கவனிப்பதாகவே தோன்றவில்லை, அகஸ்மாத்தாய் அவன் பக்கம் திரும்பிய சிலரும் ஏளனச் சிரிப்புத் தோன்ற அலக்ஷியமாகப் பார்த்தனர் நாட்டாண்மைக்காரர் கையிலெடுத்த பண முடிப்பை நாலைந்து முறை குலுக்கிவிட்டு, வெற்றி வீரன் சின்னத்தம்பியிடம் நீட்டினுர், அவன் அதை வாங்கிக் கொண்டு ஒரு முறை தொடையைத் தட்டி ஸலாம் எடுத்ததும், கரகோஷம் மீண்டும் வானைப் பிளந்தது. இதையெல்லாம் பார்த்துக்கொண்டு முனுசாமி கற்சிலைபோல் நின்ருன், அவன் நெஞ்சில் துவேஷம் பிறந்தது, தனது இந்த மானபங்கத்துக்கு சின்னத்தம்பியே காரணமென்று எண்ணத் தொடங்கினுன். ஆத்திரம் மூண்ட உள்ளத்துடன் அவன் மெல்ல கோதாவினின்று நழுவித் தன் வீட்டை நோக்கி நடப்பதை யாரும் கவனிக்கவில்லை.



சிறிது தூரம் செல்லு முன் 'அப்பா' என்று அழைக்கும் குரல் கேட்டது. அவன் மகள், 'திரௌபதி' பின் தொடர்ந்து வந்துகொண்டிருந்தாள், தந்தையின் உணர்ச்சிகளின் வேகம் அவளுக்குத் தெரியாமலில்லை. அவன் தோல்வியை அவளும் கண்ணுல் கண்டிருந்தாள். முனுசாமியின் கரத்தைப் பற்றிக்கொண்டு மௌனமாய் நடப்பதைத்தவிர, அவனுக்கு வேறு எவ்விதமாய் ஆறுதல் சொல்லுவாள்?

நறநறவென்று கடித்த பற்களுக்கிடையே அவன் ஏதோ உறுமிக்கொள்வது திரௌபதியின் காதில் விழுந்தது, 'அடே சின்னத்தம்பீ! என் மானத்தைப் போக்கிய உன்னைப் பழிக்குப் பழி வாங்காவிட்டால் என் பெயர் முனுசாமியல்ல.' என்றுதான் அவன் கறுவினுன், மகளின் வதனம் ஏனே சுருங்கிக் கவலையைக் காட்டியது; அவளுடலும் நடுங்கியது தகப்பனது மூர்க்க ஸ்வபாவத்தை நன்குணர்ந்தவள் அவள்

* * * *

மனிதர்களுக்கு விசித்திரமான ஆசைகளேற்படுவது சகஜம் உதாரணமாக, நம் மருதநாயகத்துக்கு 'பெரிய கில்லாடி' என்ற பட்டம் வாங்கவேண்டுமென்னும் பேராவல் எப்போதும் உண்டு அதற்கான முயற்சிகளில் அவன் தீவிரமாய் ஈடுபட்டு வந்தான். தலைமயிரைக் காடு போல் வளர்த்து, பழைய டிராமா ராஜபார்ட் 'பேஷனி'ல் பம்மென்று வைத்துக்கொண்டான்வழியில்போகிற பெண்பிள்ளைகளைக் கண்டு கண்ணடிக்கவும், அப்பாவிகள் யாராவது எதிர்ப்பட்டால் வலுச்சண்டைக் கிழுக்கவும், வெகு ஸ்டைலாக பீடி குடிக்கவும் கற்றுக்கொண்டான், இவனுக்கு வஸ்தாத் முனுசாமியின் சிநேகமும் ஏற்பட்டது. எத்தனையோ விஷயங்களில் பாதுகாப்பாயமைந்தது உள்ளதைச் சொல்லப்போனுல் திரௌபதியின் மீது மருதநாயகத்துக்கு ஒரு கண் அவள் தன்னை அடியோடு வெறுப்பது அவனுக்குத் தெரியாமலில்லை, என்ருலும் ஆசை யாரை விட்டது?

அன்றிரவு முனுசாமி வீட்டினுள் உட்கார்ந்து தன் தோல்வியை எண்ணிப் பொங்கிப் பொருமிக்கொண்டிருந்தபோது, துக்கம் விசாரிப்பதற்கு வந்து சேர்ந்தான் மருதை, எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது அவனுக்கு மிகவும் பிடித்த விஷயமாயிற்றே!

'அண்ணே! அந்தச் சின்னத்தம்பிப் பயலெ கையெ ஒடிச்சுக் கழுவிலே ஏத்துனு என்ன தோசம் எங்கிறேன்? ஒன்னெ அப்பிடியே அலாக்காத் தூக்கியெறிய எம்மாந் தைரியம் அவனுக்கு?' என்று அவன் ஆரம்பித்தான்,

முனுசாமி முதலில் வள்ளென்று விழுந்தான், 'அட, சும்மாயிருடா கழுதை மவனே; வவுத்தெரிச்சலைக் கிளப்பிக்கிட்டு......'

மருதநாயகத்துக்கும் மானத்துக்கும் வெகு தூரம் திட்டு வசவுகள் தன்னை விடப் பலசாலிகளிடமிருந்து வந்தால், பொருட்படுத்தவே மாட்டான், எனவே பேச்சை விட்டுவிடாமல் தொடர்ந்தான்.

'கோதாவிலே அந்த அநியாயத்தைக் கண்டப்போ எனக்கு ஆவேசம் என்னமா வந்திடுச்சு தெரியுமா? அப்பிடியே உள்ளற புகுந்து 'அந்தப் பயலெ ஒரு கடுதாசியைக் கிளிக்கிற கணக்குலே கிளிச்செறிஞ்சுடலாமான்னு பாத்தேன், ஆனு......' அந்த அபார சாகஸச் செயலை ஏன் செய்யாமல் விட்டானென்ற ரகசியத்தை மருதநாயகம் தெரிவிக்கவில்லை. வாஸ்தவத்தில், சின்னத்தம்பியின் வெற்றிக்குக் கரகோஷம் செய்தவர்களுள் அவனே பிரதமஸ்தானம் வகித்தானென்பது முனுசாமிக்கு எப்படித் தெரியும்?

எரிந்துகொண்டிருந்த பீடியை அவன் முகத்தில் விட்டெறிந்தான் முனுசாமி,

'டேய் மருதை, இப்பிடிப் பேசிப்பிட்டா என் உச்சி குளிர்ந்துடும்னு நினைச்சுக்கிடாதேடா. நீ ஒரு போமானிப் பய, அந்தச் சின்னத்தம்பி மேலே கையை வெக்கிற தைரியம் ஒனக்கு ஏது? சும்மா அளக்காதே' என்று வெகு அலக்ஷியமாகச் சொன்னுன்,

மருதநாயகத்துக்கு ரோஸம் பிறந்தது: அதாவது ரோஸம் வந்துவிட்ட மாதிரி அவன் நடித்தான் ஏனென்ருல் வீட்டினுள்ளிருந்து வந்துகொண்டிருந்த சட்டிப்பானைகளின் ஓசை திரௌபதி அங்கிருப்பதை அவனுக்கு அறிவித்தது இந்த சம்பாஷணை அவள் காதில் விழுந்தால், அவள் தன்னைப் பற்றி எவ்வளவு கேவலமாய் எண்ணிக்கொள்வாள்? எனவே தானும் சிறிது விறைப்பாய்ப் பேசவேண்டிய தவசியம்.

'அண்ணே! இத்தினி நாளாய் பளகியும் நீ இந்த மருதையே நல்லாத் தெரிஞ்சுக்கிடலே. அதான் இப்படிப் பேசறே, இப்ப நீமட்டும் ஒருவார்த்தை சொல்லு, ராவைக்கி ராவே அவன் கழுத்தைச் சீவிக்கிட்டு வந்துடறேன். என்ன சொல்றே?' என்று அவன் எழுந்து நின்ருன்.

மருதநாயகத்தைக் கேலியாக ஒரு முறை ஏற இறங்கப்பார்த்தவண்ணம் முனுசாமி இன்னொரு பீடியை யெடுத்துப் பற்றவைத்தான். அவனது வீராவேசம் இவனுக்கு இன்னும் வேடிக்கையாகவே யிருந்தது அப்பா மருதை கோவிச்சுக்கிடாதே. உன் தயிரியமெல்லாம் எனக்குத் தெரியாதா? என் உத்தரவென்ன வேண்டிக்கிடக்குது? அந்தப் பயலை வேலை தீர்த்திட்டு வா; ஒனக்கு என்ன வேணுமோ நான் செய்யறேன், மொதல்லே என் பவிசியைத் தீக்கிற வளியைப் பாரு' என்ருன்.

"நெசமாவோய நான் என்ன கேட்டாலும் தருவீங்களா?"

"ஆஹா!"

அப்பிடியானு—திரௌபதியெ எனக்குக் கட்டிக்கொடு...மருதநாயகம் சொல்லி வாய்மூடுமுன். ஒரு பெரிய பானை சமையலுள்ளிலிருந்து புறப்பட்டுக் ககனமார்க்கமாய்ப் பிரயாணம் செய்து வந்து, அவன் தலையிலேயே மோதி உடைந்தது. அதைத் தொடர்ந்து தானும் வெளி வந்தாள் திரௌபதி அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது, தன் மகளின் என்றுமில்லாத ஸ்வரூபத்தைக்கண்டு முனுசாமியே அசந்து போய்விட்டான்

"ஏனையா ஒனக்கு வெக்கமில்லே? ஆசையைப் பாரு ஆசையெ; அப்பிடி ஒரு நல்ல மனிதனைக் கொலை பண்ணியாச்சும் என்னெக் கட்டிக்கிடலாம்னு பாக்கிறியா? ஒன் தலையிலே இடிவிள!" என்று அவள் இரைந்தாள், பானை விழுந்ததிலேயே பேரதிர்ச்சியடைந்துவிட்ட மருதநாயகம், இன்னும் தலைமேல் இடியும் விழுந்தால் எப்படியிருக்குமென்று எண்ணிப்பார்க்கவே நடுங்கினுன். முனுசாமியாவது பக்கபலமாய் வரமாட்டானு என்று அவன் பக்கம் பரிதாபகரமாய்ப் பார்த்தான்.

சாதாரண சமயமாயிருந்தால், முனுசாமி பேசாமல் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்து விடுவான் ஆனுல், தன் பரமவைரியான சின்னத்தம்பியை திரௌபதி இங்கே 'நல்ல மனுசன்' என்று குறிப்பிட்டது அவனுக்குப் பிடிக்காதபடியால் குறுக்கிட்டான்

"இந்தா திரௌபதி உன்னை யார் வரச்சொன்னது இங்கே? போ உள்ளே" என்ருன்.

'மாட்டேன் அப்பா. நீங்கள் சின்னத்தம்பியைக் கொல்ல நினைப்பது பாபம். மிகக் கேவலமும்கூட, அந்த எண்

ணத்தை விட்டுவிடுங்கள். முதலில் இந்தத் தடியனை இங்கிருந்து விரட்டுங்கள்' என்றாள் திரௌபதி.

"இதோ பார். இது பூராவும் ஆண்பிள்ளைகள் விவகாரம். உனக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. நீ நான் சொன்னபடி கேட்கப்போகிறாயா இல்லையா?" என்று முனுசாமி கண்டிப்பாய்க் கேட்டான். திரௌபதி நகராமல் நின்றாள். அவன் சினம் மூண்டது. எழுந்து அவளை மூர்க்கத்தனமாய்த் தள்ளிச் சென்று உள்ளே தள்ளிக் கதவை வெளியே தாளிட்டான். அவளது விம்மல்கள் அவன் மனதை இளகச் செய்யவில்லை. அதற்குப் பதிலாய் முகத்தில் ஓர் உறுதியும் பயங்கரமும் காணப்பட்டன. நேரே மருதநாயகத்தின் எதிரில் வந்து நின்றான்.

"ஏய் மருதை, இப்போது நான் விளையாடவில்லை. நீ காரியத்தை முடித்தாயானால், திரௌபதி உனக்குத்தான்; சம்மதமா?"

"நீ...ச...மா...க...வா?" என்று அவன் திணறினான்.

"ஆமாம்; கருப்பண்ணசாமி மேல் ஆணையாகச் சொல்றேன். ஆனால் அவனைக் கொன்றுவிடாதே. கையை மாத்திரம் வெட்டியெடுத்து விட்டால் போதும். இன்னும் ஒரு வாரம் தவணை தருகிறேன். அதற்குள் ஆகவேண்டும்...என்ன?"

மருதநாயகம் தலையைப் பலமாய் ஆட்டினான். திரௌபதி மனைவியாகக் கிடைப்பதானால் இதுமட்டுமென்ன? மலையைப் புரட்டுவதுகூட ஒரு பெரிய காரியமல்ல ஆனால்......?

சின்னத்தம்பியின் முறுக்கேறிய நரம்புகளும் லாகவமாய்ப் பாயும் உடலும் அவன் மனக்கண் முன் நின்றபோது. தான் செய்யவேண்டியது ஒரு கால் மலையைப் புரட்டுவதைவிடக் கடின காரியம்போல் தோன்றியது அவனுக்கு தான் தனியாகச் செய்ய முயல்வது உசிதமாவென யோசித்தான். கூட ஒரு ஜமா அத்யா வசியம். அதுவும் சின்னத்தம்பி உஷாராயிருக்கும்போது தாக்குவது அறிவீனம், அவன் உறங்கும்போதோ அல்லது சற்று அயர்ந்திருக்கும் போதோ திடீரென்று பாயவேண்டும், காரியத்தை நிறைவேற்றி வைத்தால், திரௌபதியின் கணவனாக இன்ப வாழ்வு வாழலாம். மருதநாயகம் நாக்கைச் சப்புக் கொட்டிக்கொண்டு கிளம்பினான். வாசலைத் தாண்டுமுன் மீண்டும் தைரியம் அவனைக் கை விடவே, திரும்பி உள்ளேவந்து கையைப் பிசைந்துகொண்டு நின்றான்,

முனுசாமிக்குக் கோபம் வந்தது, "ஏண்டா" என்று உறுமினான்.

'ஒண்ணுமில்லே அண்ணே...அவன் கையெ வெட்டணுமின்னியே எங்கிட்டே நல்லதா அருவா கிடையாது அதான்......'

'இந்தா கொலே...' பளபளவென்று மின்னும் பெரிய வெட்டரிவாள் ஒன்றையெடுத்து. அவன் முன் எறிந்தான் முனுசாமி, நடுங்கும் விரல்களால் அதைப் பற்றிக்கொண்டு மருதநாயகம் வெளியே நடந்தான். அவன் இருளில் மறையும்வரை கதவருகில் நின்று பார்த்துவிட்டு உள்ளே திரும்பினான் முனுசாமி 'பேடிப்பயல், இவன் இந்த வேலையை ஒரு வாரத்துக்குள் செய்து முடிக்காவிட்டால் நானே செய்யவேண்டியதுதான்.' என்று அவன் உதடுகள் முணுமுணுத்தன.

* * * *

இரவு மணி பத்திருக்கும்,... எங்கும் காரிருள் சூழ்ந்திருந்தது உள்ளூர் வாசிகளது வியப்பு இன்னும் அடங்கியிருக்கவில்லை. ஆங்காங்கே கும்பல்கூடி அன்றைய குஸ்திச் சண்டையைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தனர். 'நன்றாய் வேண்டும் இந்த முனுசாமிப் பயலுக்கு! பந்தயத்தின் பெயரால் எத்தனை ஆசாமிகளின் கையைக் காலை முறித்து, உருப்படாமல் செய்திருப்பான்?' என்ற வார்த்தைகள் எங்கும் ஒலித்தன.

அந்த வேளையில் யாரோ வந்து முனுசாமி வீட்டுக் கதவைத் தட்டினார்கள் கஞ்சாவின் போதையில் மயங்கிக் கிடந்த அவன் காதில் அச்சத்தம் விழவில்லை. படுக்கத் தயார் செய்துகொண்டிருந்த திரௌபதி கையில் மண்ணெண்ணெய் விளக்குடன் வந்து கதவைத் திறந்ததும் திடுக்கிட்டுப்போனாள். வாசலில் சின்னத் தம்பி நின்றான்.

'நீங்களா? எதற்கு வந்தீர்கள்?' என்று திரௌபதி பரபரப்புடன் வினவினாள்.

'முனுசாமியைப் பார்த்து நாலு வார்த்தை பேசிவிட்டுப் போகலாமென்றுதான் வந்தேன். ஒருகால் அவருக்கு என்மேல் வருத்தமிருக்குமோ என்னவோ என்று மனசு அடித்துக்கொண்டது. என்ன செய்யலாம்? பந்தயமென்றால் வெற்றி தோல்வி சகஜந்தானே?' என்றான் சின்னத்தம்பி.

திரௌபதி அவனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்தாள். வெற்றியின் இறுமாப்பு அவன் முகத்தில் கிஞ்சித்தும் காணப்படவில்லை தோற்றவனின் மனோ நிலையை நன்குணர்ந்து ஆறுதல் சொல்ல வந்த அருங்குணம் அவளை வசீகரித்தது. ஒரு நிமிஷம் மௌனம். பின் திரௌபதி சொன்னாள்:—'ஐயா. என்னைத் தவறாக எண்ணிக் கொள்ளாதீர்கள். அப்பாவை நீங்கள் இப்போது பார்ப்பதென்பது உங்கள் இருவருக்குமே நல்லதல்ல.'

'ஏனம்மா அப்படி?"

'உண்மையைச் சொல்கிறேன். அவர் உள்ளத்தில் துவேஷம் நிரம்பிக் கிடக்கிறது. உங்களைக் கொலை செய்யுமளவுக்கு ஆத்திரம் கொண்டிருக்கிறார். நீங்கள் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். மருதநாயகம் என்னும் ஒரு ஆள் உங்கள் கையைவெட்டி. அவருக்குக் காணிக்கை கொடுப்பதாகச் சொல்லிப் போயிருக்கிறான். அவன் பெரிய

கில்லாடி. என்னைக் கேட்டால், நீங்கள் கொஞ்ச நாளைக்கு இந்த ஊரை விட்டே போய்த் தலைமறைவாயிருந்தால்கூட நல்லது என்பேன்'

'ஆ! அப்படியா?' என்றான் சின்னத்தம்பி. அவன் குரலில் பீதியில்லாவிடினும் வியப்புத் தொனித்தது. தன் நன்மையை நாடி உண்மையையறிவித்த அம் மங்கைபால் நன்றி சுரந்தது. கண்ணிமைக்காது அவளையே நோக்கி நின்றான். இருவரது நயனங்களும் சந்தித்தன.

'ஊரைவிட்டே ஓடும்படி நான் அவ்வளவு கோழையல்ல. ஆனாலும் உன் எச்சரிக்கையை மறக்கமாட்டேனம்மா......உன் பெயரென்னவோ?' என்றான் அவன்.

'திரௌபதி.'

'முனுசாமியின் மகளா நீ?'

'ஆமாம்'

'நல்லது நான் வருகிறேன். 'சின்னத்தம்பி கிளம்பினான். அவன் மனதில் பலவித உணர்ச்சிகள் நிறைந்திருந்தன. அவனுருவம் இருளில் கலக்குமட்டும் கவனித்துவிட்டு வீட்டினுள் சென்றாள் திரௌபதி. 'அம்மா தாயே மாரியாத்தா! இவருக்கு ஒன்றும்ஆபத்து நேராமல் காப்பாற்று என்று அவள் பிரார்த்தித்தவாறு படுத்தாள் இரவெல்லாம் நித்திரை வராமல் புரண்டவாறிருந்தாள். அவள் சிந்தனையெல்லாம் ஏனோ மீண்டும் மீண்டும் சின்னத்தம்பியிடமே சென்று லயித்தது.

சின்னத்தம்பியின் மனோ நிலையும் அப்படியேதானிருந்தது. தன்னைச் சூழ்ந்துள்ள அபாயத்தைப்பற்றி அவன் அஞ்சவில்லை. அந்தத் திரௌபதியின் அழகும் அன்பும் வெள்ளையுள்ளமும் அவனை அடிமைகொண்டு விட்டன 'பாவம்! நம்மையே ஒழித்து விட எண்ணும் அளவுக்கு முனுசாமி தோல்வியால் மனம் வெதும்பிக் கிடக்கிறான்! நடந்தாயிற்று; இனி என்ன செய்யலாம்? சிலநாள் பொறுத்திருந்து பார்ப்போம். அவன் குரோதம் மறைந்தாலும் மறையக்கூடுமல்லவா?' என்று எண்ணிக்கொண்டான் அவன்,

* * *

ஒரு வாரம் கடந்தது · மருதநாயகம் முனுசாமியின் வீட்டுப் பக்கம் தலையைக்கூடக் காட்டவில்லை. அக்கொலைத் தொழிலில் ஈடுபட அவனது உள்ளூர் சகாக்களில் எவரும் முன்வராதபடியால், அவன் தயங்கிக் கொண்டிருந்தான்போலும்! முனுசாமி வைத்த ஒரு வாரத் தவணையின் முடிவு நெருங்க நெருங்க மருதநாயகத்தின் மனம் தத்தளித்ததேயன்றி, அதில் ஆவேசம்பிறக்கவில்லை. 'திரௌபதியையும் அடையவேண்டும். வம்பிலும் சிக்கிக் கொள்ளக் கூடாது'என்றிருந்தால் தீவிரம் எப்படி ஏற்படும்?

பார்த்தான் முனுசாமி, தானே வேலை தீர்ப்பதைத்தவிர, வேறு வழியில்லையென்று துணிவு பூண்டுவிட்டான்.

அன்று மாலை. இருள் வேகமாகச் சூழ்ந்துகொண்டிருந்தது. பகல் முழுவதும் கழனியில் செய்தகடும் உழைப்பினால் களைத்திருந்த சின்னத்தம்பி அலுப்புடன் தன் குடிசைக்குத்திரும்பி வந்துகொண்டிருந்தான், ஆனால், தன் ஆபத்தான நிலைமையை நன்குணர்ந்தவனாகையால், எச்சரிக்கையை இழந்துவிடவில்லை, அவன் கண்கள் நாற்புறமும் வளையமிட்டவாறிருந்தன.

அவன் குடிசையருகே சந்தேகாஸ்பதமான முறையில் பதுங்கிப் பதுங்கிச் செல்லும் ஓர் உருவம் சின்னத்தம்பியின் கவனத்தைக் கவர்ந்தது. சற்றுக் கூர்ந்து நோக்கியதில் வஸ்தாத் முனுசாமியை அடையாளங் கண்டு கொண்டான் அவன். ஆனால். பின்னாலிருந்து தன்னை நெருங்கும் சின்னத்தம்பியை மட்டும் முனுசாமி கவனிக்கவில்லை

ஆனால் முனுசாமியைப் பார்த்தும் பாராததுபோல் தன் வீட்டினுள் நுழைந்துவிட்டான் அவன். அவன் நெஞ்சில் கலக்கமில்லை; அதனால் வாயிற் கதவும் திறந்தேயிருந்தது சின்னத்தம்பி எதிர்பார்த்ததுபோலவே பத்து நிமிஷங்களுக்கெல்லாம் வெகு வேகமாக உள்ளே பாய்ந்து வந்தான் முனுசாமி 'பளபள' வென்று அவன் கையில் மின்னியது ஓர் வெட்டரிவாள் கைகளை மார்பில் கம்பீரமாகக் கட்டிக் கொண்டு, இதழ்களில் புன்னகை தவழத் தன்னை எதிர்நோக்கி நின்றவ திரியின் தோற்றம் முனுசாமிக்கு ஒரு கணம் தயக்கமளித்தது.

"வா அண்ணே வா. உனக்காகத்தான் காத்திருந்தேன் என் கை தானே உனக்கு வேண்டியது? இந்தா. தாராளமாய்வெட்டிக் கொண்டு போ சின்னத் தம்பி கையை நீட்டினான்.

முனுசாமி பிரமித்துவிட்டான். தன் நோக்கத்தை இவன் தெரிந்துகொண்டு முன்னெச்சரிக்கையாக இருப்பானென்று அவன் கனவிலும் நினைத்ததில்லை.

'நிஜமாகச் சொல்றேன். நீயும் இத்தனை வருஷமாகத் தொழில் செய்கிறாய். உன் கையால் எத்தனையோ பயில்வான்கள் மண்ணைக் கௌவியிருக்கிறார்கள்; அதுமட்டுமா? வாழ்க்கைக்கே பிரயோசனமில்லாதபடி ஊனமடைந்துமிருக்கிறார்கள். அவர்களெல்லாரும் உன்னைப் பழி வாங்குவதென்று கிளம்பியிருந்தால் உன் கதை எப்போதோ முடிந்துபோயிருக்கும். ஏன்? நான் அன்று ஏமாந்திருந்தால், என்னையே உருப்படாமல் செய்திருப்பாய் சண்டையில் வெற்றி தோல்வி சகஜம். அதை எண்ணிப் பாராமல் நீ தோல்வியால் மனமுடைந்து, அக்கிரமச் செயலில் இறங்கிவிட்டாய். பரவாயில்லை. உன் ஆத்திரத்துக்கு என்னை நான் பலி கொடுத்துக் கொள்கிறேன் இந்தா என் கையை வெட்டிக்கொள் அதனாலாவது உன் பிரக்யாதி திரும்பி வருமா பார்ப்போம்? உம்......ஏன் தாமதம்?' என்றான் சின்னத்தம்பி. அவனது ஒவ்வொரு வார்த்தையும் உள்ளத்தை ஈட்டி போல் உருவ, கற்சிலைபோல் அசையாது நின்றான் முனுசாமி எதிராளியின் பார்வையின் தீக்ஷண்யத்தைப் பொறுக்கமாட்டாமல், தானாகவே அவன் தலை குனிந்தது

'அந்த வாளை இப்படிக் கொடு. நானே வெட்டித் தருகிறேன்.'

முனிசாமி வாளை பலங்கொண்ட மட்டும் குடிசைக்கு வெளியே விட்டெறிந்தான். மனம் மாறிவிட்ட அவனுக்கு இனி அச் சனியன் எதற்கு?

அவன் நாத் தழுதழுத்தது! நீர் நிறைந்த கண்களுடன் சின்னத் தம்பியை நெருங்கி, அவன் கரங்களைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டான். 'சின்னத்தம்பி, நீயே உத்தமன், என்னை மன்னித்து விடப்பா.' என்று சொல்லுமளவில், அவன் கண்களில் தேங்கியிருந்த கண்ணீர் வடிந்து சின்னத் தம்பியின் கரங்களில் விழுந்தது.

முனுசாமியின் உணர்ச்சிப் பெருக்கு அவனை அங்கே அதிகம் தாமதிக்கவிடவில்லை. 'கொஞ்சம் இருந்துவிட்டுப் போங்கள் அண்ணே!' என்று சின்னத் தம்பி வேண்டினுன். 'தம்பீ உன் முன்னுல் நிற்கக்கூட எனக்கு யோக்யதை கிடையாது நான் போகிறேன்' என்று அவன் கிளம்பிவிட்டான் வாயிற் கதவண்டை நின்றவாறு சின்னத்தம்பி அவன் போவதைக் கவனித்தான் அடுத்த நிமிஷமே முனுசாமியின் உருவம் இருளுடன் ஐக்யமாகிவிட்டது.

அவன் எத்தனை நேரந்தான் அப்படி வாயிலருகே நின்ருனே தெரியாது சற்றுத் தொலைவிலிருந்து 'ஐயோ அம்மா!' என்ற அபயக்குரல் கேட்டது. இருளையும் லட்சியம் செய்யாது சத்தம் வந்த திசையைநோக்கி ஓடினுன் சின்னத்தம்பி ஆனுல். அவன் போய்ச்சேருமுன் நிலைமை மிஞ்சிவிட்டது உடம்பெல்லாம் ஒரே வெட்டுக் காயங்களுடன் முனுசாமி ரத்த வெள்ளத்தில் கிடந்தான். அவனைத் தாக்கியவர்கள் ஓட்டம் பிடித்துக்கொண்டிருந்தனர்.

அவர்கள் வேறு யாருமில்லை சின்னத்தம்பியைத் தீர்த்துக்கட்ட வென்று மருதநாயகம் ஏற்பாடு செய்திருந்த வெளியூர் குண்டர்கள், அவன் வீட்டிலிருந்து வெளிப்பட்ட உருவத்தைச் சின்னத்தம்பிதானென்று தவருக எண்ணிப் பின்தொடர்ந்து சென்று, தங்கள் கைவரிசையைக் காட்டி விட்டனர். 'தன் வினை தன்னைச் சுடும்' முனுசாமியால் ஆரம்பிக்கப்பட்ட தீவினையின் பலன் அத்தனை விரைவில் அவன் தலையிலேயே வந்து விடிந்தது.

பிரக்ஞையற்றுக் கிடந்தான் முனுசாமி ஆனுல், தாக்கியவர்கள் கடனுக்காகவே தாக்கியிருந்தபடியால் அபாயகரமான காயமொன்றுமில்லை அவனை அப்படியே தூக்கியெடுத்து ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ருன் சின்னத்தம்பி

* * * *

முனுசாமியின் காயங்கள் விரைவில் ஆறிக்கொண்டு வந்தன. ஆஸ்பத்திரியில் கிடந்த அவனுக்கு, ஒரு புறம் மகள் திரௌபதியும் மறுபக்கம் சின்னத்தம்பியும் அல்லும் பகலும் ஆதரவோடு சிசுருஷை செய்தனர். இவர்களிருவரையும் சேர்ந்து காணும் போது அவனுள்ளத்தில் ஏற்பட்ட பெருமிதமே முனுசாமி அத்தனை சீக்கிரம் குணமடையக் காரணமாயிற்றெனலாம்

அதிகம் வளர்த்துவானேன்? ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்ததும் முதல் காரியமாகக் கலியாணத்துக்கு நாள் பார்த்தான். திரௌபதி சின்னத்தம்பி விவாகம் விமரிசையாக நடைபெற்றது. எப்போதோ ஊரை விட்டே ஓடியிருந்த மருதநாயகம், கலியாணச் சாப்பாட்டுக்குக்கூட வரவில்லை

குஸ்தியில் ஆரம்பித்தது கலியாணத்தில் முடிந்தது.

அதேபோல் கலியாணத்தில் ஆரம்பித்தது குஸ்தியில் முடியாதென்பது என்ன நிச்சயம்? திரௌபதியும் சின்னத்தம்பியும் சில்லரைக் கலகங்களுக்கு இடம் வைக்காமல், மனமொத்த தம்பதிகளாய் வாழ்வதைக் கண்டால் அந்த சந்தேகத்திற்கு அடிப்படை யெதுவுமிருப்பதாகத் தோன்றவில்லை

சக்தி ஜோதிஷர்
OF
"சக்தி ஆரூடம்!"
உங்கள் எதிர்காலத்தைப்பற்றி கூறுவார்
1 to 3 ஆரூடகேள்விகளுக்கு ரூ. 1.
3-க்குமேல் கேள்வி 1க்கு அணு 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7-8-0
வி. பி. பி. தனி. ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
N B:-வெளிநாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணம் தேவை.
டாக்டர் P. மாணிக்கம், M.B.M H,E A (London) எழுதுகிருர் :—"நான் பார்த்த சில அயல்நாடு பல நம் நாடு ஜோதிடர்களில் தங்களை சிறந்தவருக் கருதுகிறேன். பலன்களில் திருப்தி."
"சக்தி ஹோம்,"
விருத்தாசலம். P. O (S. I.)

அன்புள்ள விமலாவுக்கு!

சென்ற வாரம் சென்னைக்குப் போய் வந்த என் அகத்துக்காரர், வந்ததும் வராததுமாக என்னைக் கூப்பிட்டார் 'நீயும் இத்தனை வருஷம் சென்னையில் குடித்தனம் செய்தாய். நான் ஒரு சமயமாவது உன்னை வேறு யாரோவென்று ஏமாந்ததில்லை. நான் என்பதென்ன! உன் தாயார், தகப்பனுர், உன் பந்துக்கள், சிநேகிதர்கள், யாருமே ஏமாந்ததாகத் தெரியவில்லை எல்லோர் கண்ணிலும் நீ சாந்தாவாகவேதான் தெரிந்திருக்கிருய்' என்ருர்.

'வந்ததும் வராததுமாக என்ன புதிர் போடுகிறீர்கள்? 'விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று முளைக்குமா? என்கிற கதையாக நான் சாந்தாவாக இராமல் வேறு யாராக இருப்பேனும்? எனக்கொன்றும் புரியவில்லை நீங்கள் சொல்வது' என்றேன்.

'யார் சொன்னது? விதை ஒன்று போட்டால், சுரை ஒன்று முளைக்கிறதே! அதுதான் பட்டணத்து அதிசயம்!' என்று சொல்லிவிட்டுச் சிரித்தார்.

'என்ன ஸமாசாரம்? சுற்றிவளைக்காமல் விஷயத்தைச் சொல்லுங்கள்' என்றேன்

'உன் சிநேகிதி விமலா இருக்கிருளல்லவா? அவளைத் திடீரென்று வெளியில் எங்காவது பார்க்கும்போது அடையாளங் கண்டுகொண்டு விடு பார்க்கலாம். பத்து ரூபாய் பந்தயம்' என்ருர்.

ஏன்? என்ன ஸமாசாரம்? என்றேன்

'நேற்று பீச்சுக்குப் போய்க்கொண்டிருந்தேன் எனக்கு முன்னுல் இரண்டு மூன்று பெண்கள் போய்க்கொண்டிருந்தார்கள், அவர்கள் சிரிப்பும் கும்மாளமுமாக நிதானமாக நடந்துகொண்டிருந்தார்கள். நான் சிறிது வேகமாகக் காலை இழுத்து வைத்தபடியால், அவர்களைக் கடந்து சென்றேன். அப்பொழுது 'என்ன மாமா சௌக்யமா?'' என்ற வார்த்தைகள் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். எனக்குத் தெரிந்துகொள்ள முடியவில்லை. ''என்ன மாமா'' என்னைத் தெரியவில்லையா? நான்தான் விமலா,' என்ருள், 'இதைக் கேட்டவுடனே உண்மையில் சொல்லுகிறேன், என்னை ஆகாயத்துக்கும் பூமிக்கும் தூக்கிப் போட்டுவிட்டது போயேன்' என்ருர்,

'ஏன், வழியில் உங்களை விமலா க்ஷேம ஸமாசாரம் விசாரித்தால் எதற்காக உங்களை அப்படித் தூக்கி வாரிப் போட வேண்டும்? அந்நியரா அயலாரா? நமக்குத் தெரிந்த பெண் தானே?' என்றேன்,

'நீ ஒருத்தி! அவள் பழைய விமலாவாகவா இருக்கிருள்? என்ருர்

'பழைய விமலாவாக இராமல். திடீரென்று ஆகாயத்திலிருந்து குதித்து வந்து விட்டவள்போலிருக்கிருளாக்கும் உங்களுக்கு எல்லாம் விசித்திரம் தான் என்றேன்

'உனக்கென்ன தெரியும்? ஒரு நாளைக்கு நேரில்போய்த்தான் பாரேன். அடேயப்பா, காலில் ஸ்லிப்பரும் கையில் ரிஸ்டு வாச்சும். கழுத்தில் நெக்லேஸும். முகத்தில் மூக்குக் கண்ணுடியும். தலையில் பாதி பின்னலும் பாதி லூஸ்மயிரும். அதன் நுனியில் கத்தரிப்பு வேலையும் பச்சையில் காலேஜ் பாடர்போட்ட கொசவம் வைத்த பட்டுப் புடவையும் உடம்போடு உடம்பாகத் தெரியும் ஸாடின் ஸில்க் ஜாக்கெட்டும், கையில் கைக்குட்டையுமாக அவள் தன் சிநேகிதிகளுடன் பீச்சுக்குப் போகிற ஜோரைப் பார்த்தால், அவளை யாராவது விமலாவென்று சொல்வார்களா என்ன? திடீரென்று ஆகாயத்திலிருந்து குதித்தவள் என்றுதான் சொல்வார்கள்! அடேயப்பா! என்ன பாஷன்! என்ன பாஷன்! சொல்ல முடியாத பாஷன்'' என்ருர்.

'அப்புறமாவது விமலா என்று தெரிந்துகொண்டீர்களா இல்லையா?' என்றேன் 'அப்புறம் நிதானித்துப் பார்த்த பிறகு குரலையும், முக ஜாடையையும் கண்டு தெரிந்துகொண்டேன். உண்மையாகச் சொல்கிறேன். அவளை விமலா என்று தெரிந்துகொள்ள எனக்கு ஐந்து நிமிஷம் பிடித்தது போயேன்'' என்ருர்.

நீ ஒரு சமயம் கிராமத்திலிருந்து பட்டணத்துக்கு வந்திருந்தபோது, 'பட்டணத்துக்கு வந்தாலே எல்லாரும் அழகாகப் போய்விடுவார்களா என்ன? எங்கள் சிறிய தகப்பனுர் பெண் ஒன்று மகா குரூபி, தொட்டால் கையில் கறுப்பு ஒட்டிக் கொள்ளும் அப்படிப்பட்ட பெண், பட்டணத்துக்கு வந்த பிறகு அதைப்பார்த்தால், அடையாளமே தெரிந்து கொள்ள முடியவில்லை; கறுப்பெல்லாம் உதிர்ந்து பார்ப்பதற்கு லக்ஷணமாக இருக்கிறது ஒரு வேளை பூமிவாசியோ என்னமோ?' என்று சொல்லியிருக்கிருய்: ஞாபகத்துக்குவருகிறதா?

பூமி வாசியுமில்லை, ஒன்றுமில்லை. இலுப்பைக் கட்டி அரும்பையும் மஞ்சளையும் பூசிக் குளித்து அகப்பட்ட புடவையை உடுத்திக்கொண்டு பழையது சாப்பிட்டு வளையவந்தவர்கள் தினமொருதரம் சோப்பு போட்டு ரத்தம் வரும்படியாக முகத்தைத் தேய்த்து

அலம்பி. அரை அங்குல கனத்துக்கு ஸ்னேவும் பவுடருமாகப் பூச்சு வேலை செய்து, கண்ணைப் பறிக்கும் விதம் விதமான புடவைகளை உடுத்திக் கொண்டு நினைத்தபொழுதெல்லாம் காப்பித் தண்ணியைக் குடித்துவிட்டு உடம்பு அசையாமலும், வெயில் படாமலும் சோபாக்களில் படுத்துக் கொண்டு, கதைகளும் நாவல்களும் வாசித்துக்கொண்டிருந்தால், எப்படிப் பட்ட கறுப்பு உடம்பும் நாலே நாளில் வெளுத்துப் போகிறது அந்த வெளுப்பை நம்புவதற்கில்லை. சில சமயங்களில் அது பித்தத்தில்கூடக் கொண்டுபோய் வைத்துவிடும் நல்ல செங்கட்டு மண்ணில் களைந்தெடுத்த முள்ளங்கி பத்தை மாதிரி கிராமத்துப் பெண்களின் உடம்பு எங்கே? சூரிய வெளிச்சமே படாமல் மண் தொட்டிகளில் உயிருக்கு மன்றாடி வளரும் கொடிகள் மாதிரி 'ஜீவனே இல்லாத பட்டணத்துப் பெண்கள் எங்கே? எல்லாம் வெளிப் பகட்டோடு சரிதான் மாடிக்குச் செல்ல நான்கு படிகள் ஏறிற்றுகளானால், நான்கு நிமிஷம் ஓய்வு எடுத்துக்கொண்டுதான் பிறகு மேற்கொண்டு ஏறவேண்டும். குழாயடியிலிருந்து ஒரு குடம் ஜலத்தை எடுத்து வந்து வைப்பதற்குள் 'உன்னைப்பிடி என்னைப்பிடி' என்றாகி விடும் எல்லாம் வெறும் 'மேக் அப்' இதுதான் பட்டணத்து அழகு. ஆனால், இதைக் கண்டுதான் ஜனங்கள் மயங்குகிறதுகள். காலம் அப்படி மாறிவிட்டது, காலச்சுழலில் எல்லோரும் சிக்கித்தான் ஆகவேண்டும். வேறு வழியில்லை ஆனால், எதற்கும் ஒரு வரம்பு இருந்தால்தான் நன்றாக இருக்கும். பாஷன் என்றவுடனே நான் உனக்கு சில வார்த்தைகள் சொல்லியாகவேண்டியதாக இருக்கிறது.

பெண்கள் பாஷனுக்கு அடிமையாகும்போது ஆடம்பரம், டாம்பீகம் என்ற பேய்கள் எங்கே என்று காத்துக் கொண்டிருக்கும் அவர்களை விழுங்கிவிட. கூடியவரையில் அந்தப் பேய்களின் வலையில் சிக்காமலிருந்தால்தான் பிழைத்தோம். இல்லையேல், சீக்கிரத்தில் குடும்பம் திண்டாடித் தெருவில் நிற்கவேண்டி வந்துவிடும். மனுஷ்ய ஜன்மந்தானே! அதிலும் பெண்கள்! நாலு பேரைப் பார்த்தவுடன் நாமும் அந்தமாதிரி இருக்க வேண்டும் என்ற எண்ணம் உடனே ஒவ்வொருவர் மனதிலும் தோன்றுவது இயற்கைதான், இருந்தாலும் நம்முடைய வருமானம், குடும்ப கௌரவம். அந்தஸ்து ஆகிய சூழ்நிலையையும் உடனே கவனித்துக்கொண்டு, அதற்கேற்ற மாதிரி நடந்துகொள்கிறவர்கள்தான் புத்திசாலிகள் அது தெரியாமல், தீபாவளிக்கு இஞ்ஜினீயர் ராஜகோபாலனின் அகமுடையாள் ராஜலக்ஷ்மி இருநூற்று ஐம்பது ரூபாயில் புடவை வாங்கினாளென்றால், அதைப் பார்த்து வாத்தியார் வாஞ்சிநாதனின் அகமுடையாள் கோமதி அதே ரூபாயில் புடவை வாங்கினால் கட்டுபடியாகுமா? வக்கீல் வேதராம அய்யரின் மனைவி வைஜயந்தி வைர நெக்லேஸ் வாங்கினால், அதை பார்த்து பாடசாலை டெபுடி இன்ஸ்பெக்டர் குமாஸ்தா தர்மராஜனின் மனைவி தனகோடி வாங்கிவிடலாம் பின்னிட்டு சமாளிக்கும்போதுதான் அதன் கஷ்டம் இன்னதென்று தெரியும்

உடைகள் உடுத்தும் விஷயத்திலும் அப்படித்தான், சினிமா நட்சத்திரம் சித்ரலேகா சர்வாங்கமும் தெரியும் படியான மஸ்லின் சேலையை உடுத்துக்கொண்டு சேலைத் தலைப்பை 'யக்ஞோபவீதம்' (பூணூல்) மாதிரி போட்டுக்கொண்டிருந்தாளானால், எல்லோருமே அந்த மாதிரி செய்ய ஆரம்பித்துவிட்டால், நன்றாக இருக்குமா? இன்னும் இதுமாதிரி எத்தனையோ விஷயங்களை அன்றாடும் நீ நேரில் பார்த்துக்கொண்டிருப்பாயே.

அதாவது பாஷன் வேண்டியதுதான். ஆனால், அத்து மீறிவிட்டால், நாட்டின் கலாசாரம். குடும்ப கௌரவம் குலப்பெருமை எல்லாம் இருந்த இடம் தெரியாமல் நகைப்புக்கு இடமாவதுடன், சில கெட்ட நடவடிக்கைகளும் ஏற்பட ஆரம்பித்துவிடும் இது விஷயத்தில் நீ ஸர்வ ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். இதற்கு மனத்தை அடக்கும் சக்தி இருந்தால்தான் முடியும் இதுவிஷயத்தில்மனம்போனபடி விட்டு விட்டு எத்தனையோ குடும்பங்கள் அநியாயமாய் கெட்டழிந்துவிட்டதைநான் நேரில் பார்த்திருக்கிறேன், அதனால்தான் இந்த எச்சரிக்கை அவசியம் என்று கருதி உனக்குச் சொல்லுகிறேன். உன்னுடைய அந்தஸ்துஎன்னவென்பது உன் மனதில் இருந்து கொண்டே இருக்கட்டும்'

நாளுக்குநாள் விசித்திரம் விசித்திரமான பாஷன்கள் புதைவாணம் மாதிரி கிளம்பிக்கொண்டிருக்கின்றன. விளக்குப் பூச்சிகள்மாதிரி ஜனங்கள் அதில் போய் விழுந்துகொண்டிருக்கிறதுகள் ஜாக்கிரதை!

இப்படிக்கு உன் அன்புள்ள

சாந்தா.

தோர்த்தட்டு வார்த்தை

வாரன்

98

சாத்துவிகரும் உபாசனையும்

★

'தாமத குணம் மிகுந்த அசுரர் இராக்கதர் முதலியோர் பகவானின் பரமதத்துவத்தை அறிந்து கொள்வதில்லை பகவான் தன்னிச்சையால் கருணைகொண்டு எடுத்த அவதாரங்களைத் தங்களுக்கு நேர்ந்த பிறப்புபோலவே கருதுகிறார்கள், பிறர் காணமுடியாத தன் சொரூபத்தைச் சம்சாரிகள் கண்ணால் காணும்பொருட்டாக பகவான் ராம கிருஷ்ணாதி அவதாரங்களில் மேற்கொண்டிருந்த தேகத்தைக் கரும பந்தத்தின் விளைவாக நினைத்து அவமதிக்கிறார்கள், அதனால் வீணான ஆசையும் மோகமும் கொண்டவர்களாய் விபரீத ஞானத்தால் தூண்டப்பட்டு வீணான கருமங்களைச் செய்து அழிகிறார்கள் !' என்று கண்ணன் முன்னே கூறினாரல்லவா ?

அத்தகைய தாமதகுணம் வாய்ந்த அசுரப்பிரகிருதிகள் உலகில் எல்லா காலங்களிலும் மிக்கிருந்து வருவதால் 'பலர் புறக்கணிக்கும்படியாகப் பகவானிடத்தில் ஏன் உண்மையாகவே குறை இருத்தல் கூடாது' என்று தோன்றலாமாகையால் அதைப் போக்குவதற்காக கண்ணபிரான் சாத்துவிக குணம் வாய்ந்த மகான்களின் நிலையை அடுத்து வரும் மூன்று சுலோகங்களால் விளக்குகிறார்

மிக்க மனத் தாருலகில்
வீயா முதலாகி
ஒக்க மனத் துன்னிவே
ரொன்றறியாத்—தக்கமனத்
தான்றவரென் னைப்பணிவ
ராங்கவர்க டிவ்வியமா
யென்ற வியல் பெற்றியல்வார்
இங்கு

(இ-ள்) தக்க மனத்து ஆன்றவர்—சிறந்த மனம் படைத்த மகாத்மாக்கள் மிக்க மனத்தார்-பரந்த நோக்குடையவர்களாய், வேறு ஒன்று அறியா—பிறிதொன்றை நினைக்காமல் உலகில்-பிரபஞ்சத்தில் வீயா-அழியாமல் முதல் ஆகி-(எல்லாவற்றிற்கும்) ஆதி காரணமாகிய என்னை-என்னையே, ஒக்க மனத்து-ஒரே மனமுடையவர்களாய், உன்னி-தியானித்து, பணிவர்—பஜிப்பார்கள். அவர்கள்—அத்தகைய மகாத்மாக்கள், இங்கு-இவ்வுலகில், திவ்வியமாய் என்ற இயல்-தெய்வத்தன்மை பொருந்திய பிரகிருதியை (சாத்துவிக குணத்தை), பெற்று இயல்வார்-அடைந்தவர் ஆவார்கள்,

2
மஹாத்மாநஸ்து மாம் பார்த்
3
தைவீம் ப்ரக்ருதிமாச்ரிதா:
4
பஜந்த்யநந்ய மநஸோ
4 3
ஜ்ஞாத்வா பூதாதி மவ்யயம்,

(இ-ள்) பார்த்த—அர்ஜுனா !, மஹாத்மாநஸ்து மகாத்மாக்களோ, தைவீம்-தெய்வம் சம்பந்தம் பொருந்திய, ப்ரக்ருதிம்—பிரகிருதியை ஆச்ரிதா:—அடைந்தவர்களாய், பூதாதிம்—பூதங்களுக்கு (பிராணிகளுக்கு) ஆதியாய் அவ்யயம்—அழிவில்லாத மாம்—என்னை, ஜ்ஞாத்வா—அறிந்து, அநந்ய மனஸ:-வேறு விஷயங்களில்மனதைச் செலுத்தாதவர்களாய், பஜந்தி—வணங்குகின்றார்கள் (தியானிக்கின்றனர்)

தாமசம், ராஜசம், சாத்துவிகம் ஆகிய முக்குணங்களுக்கிடமாயிருப்பது பிரகிருதி. முக் குணங்களில் தாமச குணம் மிக்கவர்கள் பரமாத்மாவின் உண்மை சொரூபத்தை உணரமாட்டாதவர் ஆகையால் அவதார ரகசியம் உண்மை மகிமை முதலியவற்றை உணர்ந்துகொள்ள முடியாதவர்களாய் பகவானைத் தங்களைப்போலவே நினைத்து அவமதிக்கின்றனர்.

சாத்துவிக குணம் மிகுந்த பெரியோர்களும் உலகில் பலர் இருப்பதால் அவர்கள் மோஹவலைப்படாமல் பகவானின் உண்மைச் சொரூபத்தை உள்ளபடி உணர்வார்கள் அவ்வாறு உணர்ந்தவர்களாலேயே பகவானின் அவதார மேன்மையை உள்ளபடி கிரகிக்க முடியும். பாராட்டவும் முடியும் அவதாரத்தால் பிரகாசமடைந்த குணங்களை நினைந்து உருக முடியும்.

நம் நாட்டில் மஹாத்மா காந்தியடிகள் பல ஏழைகளின் துயரத்தைக் காணப் பெறாமல் மனமிரங்கி அவர்களைப்போலவேஉடையணிந்துகொண்டார். அவர்களைப் போலவே இந்தியின் சராசரி வருமானத்திற்கு மேற்போகாத குறைந்த செலவில் உண்ணவும் செய்தார் பெரிய பதவிகளைப் பெறுவதற்குத் தகுதியும், திறமையும், வசதியும் அவருக்கு இருந்தன. அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு உயர்ந்த பதவியில் அவர் இருக்க விரும்பவில்லை என்பதை அறியாத சிலர் மகாத்மாவை காட்டுமிராண்டி என்றும் ஆண்டி என்றும் அவமதிக்கத்தான் செய்தனர், 'பாதி நிர்வாண ஆண்டி' என அயல் நாட்டுப் பிரமுகர் இகழ்ந்து உரையாடியது உலகப் பிரசித்தம்

ஆனால் மஹாத்மா ஏழைகளின் துயரங்கண்டு மனமிரங்கி, விரும்பியே ஏற்றுக்கொண்ட எளிமையின் மேன்மையையும் தியாகத்தையும் பலர் அறிந்து பாராட்டினர் சொல்லிச் சொல்லி நினைந்து நினைந்து மனம் உருகவும் செய்தனர் அவ்வாறேதாமத குணம் மிக்க அசுரப்பிரகிருதிகள் பகவானின் அவதாரத்தை அவமதித்துப் பேசிய போதிலும் சாத்துவிகம் நிறைந்த பக்தர்களும் ஞானிகளும்

தொடர்ந்து ஆர்ணமுழங்கப்
பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத
நாவென்ன நாவே
நாராயணா என்னா
நாவென்ன நாவே
—சிலப்பதிகாரம்

ளன்று உருகிப் பாராட்டவே செய்கிறார்கள்

சாத்துவிகர்கள் பகவானைப் பஜிக்கும் முறை பின்னும் விளக்கமாகச் சொல்லப்படுகிறது.

எந்நாளும் என்னைத்
துதித்தே யியற்றியுடன்
மெய்ந்நா மனத்தால்
மிகப்பணிந்து—தன்னூர்ந்த
பத்தியுடன் என்னைப்
பயிலுறுவார் தாமென்றும்
சித்தியினைச் சேர்ந்தார் செறிந்து.

(இ-ள்) தாம் என்றும் சித்தியினை செறிந்து சேர்ந்தார்—எப்பொழுதும் யோகத்தில் மிக்குப் பொருந்திய மஹாத்மாக்கள், எந்நாளும்-எப்பொழுதும், என்னை துதித்து-என்னைப் புகழ்ந்துகொண்டு, இயற்றி உடன்—(உழைப்பும்) உறுதியும் கொண்டு, மெய்நா மனத்தால்—உடல் நாக்கு மனம் ஆகிய மூன்று காரணங்களாலும், மிக பணிந்து—நன்கு வணங்கி தன் ஆர்ந்த பக்தியுடன்—தம்மிடம் பொருந்திய பக்தியோடு என்னை பயிலுறுவர்—என்னைத் தியானம் செய்து கொண்டிருப்பார்கள்,

ஸததம் கீர்தயந்தோமாம்
3 4
யதந்தச்ச த்ருடவ்ரதா:
4
நமஸ்யந்தச்ச மாம்பக்த்யா
நித்ய யுக்தா உபாஸதே.

(இ-ள்) மாம்—என்னை ஸததம்—எப்பொழுதும், கீர்(த்)தயந்த:—புகழ்வோரும், யதந்தச்ச—முயற்சிசெய்கிறவர்களாயும், த்ருட வ்ரதா:—உறுதியான விரதமுடையவர்களாயும், மாம்-என்னை நமஸ்யந்தச்ச—வணங்குகிறவர்களாயும் பக்த்யா—பக்தியுடன், நித்ய யுக்தா:—ஜாக்கிரதையுடையவர்களாயும், மாம்—என்னை, உபாஸதே-உபாசிக்கிறார்கள்

இச் சுலோகத்திற்கு ஸ்ரீதரரும் ராமாநுஜரும் சற்று விரிவாக உரை எழுதியுள்ளனர்.

ஸ்ரீதரர்:—ஒரு சிலர் பகவதாராதனை முதலியவற்றில் பிரயத்தனம் செய்து திடமான விரதமுடையவர்களாய் உபாசிக்கின்றனர்; சிலர் எப்பொழுதும் ஜாக்கிரதையோடும் பக்தியோடும் கீர்த்தனம் செய்கின்றவர்களாய் பகவானை உபாசிக்கின்றனர் சிலர் ஜாக்கிரதையோடு பக்தியாலே எப்பொழுதும் பகவானை நமஸ்காரம் செய்கின்றவர்களாய் உபாசிக்கின்றனர்.

ராமாநுஜர்:—சிலர் எப்பொழுதும் பகவானுடைய குணவிசேஷங்களைச் சொல்லுகின்ற நாமங்களை (பெயர்களை) ஸ்மரிப்பதனால் புளகாங்கிதமும் தழதழத்த குரலும் பெறுகிறார்களாகையால் நாராயண கிருஷ்ண, வாசுதேவாதி நாமங்களையே சதா சொல்லுகிறார்கள். பின்னும் சிலர் ஆராதனைகளிலும் ஆராதனைக்கு உபயோகமாகக் கோயில் எடுத்தல் நந்தவனம் வைத்தல் முதலிய கைங்கரியங்களில் திடமான முயற்சியுடையவர்களாய் பக்தியும் சாந்த மனமும் பெற்றவர்களாய் எட்டு அங்கங்களாலே கல் முள் புழுதி முதலியனவுள்ள இடங்களென்று பாராமலே தண்டாகாரமாய்ப் பகவானை நமஸ்காரம் செய்து உபாஸிக்கின்றனர். சிலர் பக்தியோடு பகவானையே அடைய வேண்டுமென்ற எண்ணமுடையவராய் தமக்கென்றிருந்த சகல பொருள்களையும் அர்ப்பணம் செய்து மனத்தால் தியானம் செய்து உபாசிக்கிறார்கள்.

ஆக இச் சுலோகத்தில் சாத்துவிக குணம் மிக்க மகாத்மாக்கள் மிகுந்த பக்தியோடு மனம், வாக்கு, காயம் (உள்ளம், உரை, செயல்,) ஆகிய திரிகரணங்களாலும் பகவானை எப்படி உபாசிக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது அடுத்து வரும் சுலோகத்தில் ஞானத்தால் எப்படி உபாசிக்கிறார்கள் என்பது சொல்லப்படுகிறது

வேறுசிலர் ஞானமெனும்
வேள்வியான் மெய்த்தன்மை
தேறியெனை யேமருவிச்
சேவிப்பர்—கூறுபடும்
பல்வகையா லெங்கும்
பரந்தவெனை யேகமா
நல்வகையா லென்னை நயந்து

(இ—ள்) வேறு சிலர்—மற்றும் சில மகான்கள், ஞானம் எனும் வேள்வியான்—ஞானம் எனப்படும் யக்ஞத்தால், மெய் தன்மை தேறி—தத்துவத்தைத் தெளிந்துகொண்டு, எனையே மருவி—என்னையே (மனதால்) பொருந்தி, எங்கும் பரந்த எனை—எல்லாவிடங்களிலும் வியாபித்திருக்கின்ற என்னை, கூறு படும் பல்வகையால்—வேறுபட்ட அநேக விதங்களாகவும், ஏகமா—ஒன்றாகவும் (ஏக தத்துவமாகவும்), நல் வகையால் என்னை நயந்து சேவிப்பர்—நல்ல முறையில் என்னை விரும்பி உபாசிப்பார்கள்.

ஜ்ஞாந யஜ்ஞேந சாப்யந்யே
யஜந்தோ மாமுபாஸதே
ஏகத்வேந ப்ருதக்த்வேந
3 4 2
பஹுதா விச்வதோ முகம்.

(இ-ள்) அந்யேச—மற்றப் பெரியோர்கள், க்ஞாந யக்ஞேந—ஞானம் என்னும் யக்ஞத்தால் யஜந்த:—பூஜிப்பவர்களாய், மாம்—என்னை ஏகத்வேந— ஏகாகாரமாயும். ப்ருதக்த்வேந — பிருதக்த்வத்தாலும், பஹுதா—அநேக விதங்களால், விச்வதோ முகம்—விசுவதோ முகனை (என்னை,) உபாஸதே—உபாஸிக்கிறார்கள்.

புனிதமான பகவத் வியாதிகளைப் படிப்பதும் நினைப்பதும் ஆராய்வதும் பிறருக்குச் சொல்வதும், பிறர் சொல்லக் கேட்பதும் இவற்றால் மிக்கு மகிழ்வதும் ஞான யக்ஞத்தால் பகவானை உபாஸிப்பதாகும் மூலத்தில் வந்த 'முகம்' என்ற பதத்தை முழுப் பொருளைக் குறிக்க வந்த சினை ஆகு பெயராய்க் கொள்ளலாம், 'ஏகமா' என்பது நாராயணனாகவும், கூறுபடும் பல் வகையால் என்பது வாஸுதேவன், சங்கர்ஷணன் என்று வருகிற வெவ்வேறு நிலைகளாகவும் சிலரால் கொள்ளப்படும்

இச்சுலோகத்திற்கு த்வைத, விசிஷ்டாத்வைத, அத்வைத சித்தாந்த ரீதியாகக் கொள்ளப்படும் பொருள்களும் உற்று நோக்கத் தக்கன.

த்வைதம்—ராகவேந்திரர்:—எங்கும் நிறைந்த நாராயணன் ஒருவனே என்று சிலரும் அந்த நாராயணன் எல்லாப் பொருள்களைக் காட்டிலும் வேறுபட்டவன் என்று சிலரும், அந்த நாராயணன் அநேக ரூபங்களையுடையவனென்று சிலரும் உபாசிக்கின்றார்கள்,

விசிஷ்டாத்வைதம்—ராமாநுஜர்:—சில மகாத்மாக்கள் (முந்திய சுலோகத்தில் கூறியவாறு) கீர்த்தனங்களாலும், நமஸ்காராதிகளாலும், ஞான யக்ஞத்தாலும் பகவானைப் பஜித்து உபாசிக்கிறார்கள் அது எப்படி எனில் (1) ஜகதாகாரத்தாலே (உலக வடிவாலே) சகல சேஷியான (தலைவனை) பகவானை அநேக விதங்களாக ஒன்றே என்றறிந்து உபாசிக்கின்றார்கள் (2) பகவானாகிய வாசுதேவன் நாமரூபகங்கள் அற்றிருந்த சூட்சும சித் சூட்சும அசித் ஆகிய வஸ்துக்களை சரீரமாகவுடைத்தாயிருந்து. ஸ்தூல சித், ஸ்தூல அசித் ஆகிய வஸ்துக்களின் தேகியாகத்தான் ஆக வேண்டுமென்று சங்கற்பித்த மாத்திரத்தில், தேவ, மநுஷிய, பசு பக்ஷி மிருக ஸ்தாவரமாகிய வெவ்வேறு விசித்திரமான வஸ்துக்களைச் சரீரமாகவுடையவனாய் அப்பரமாத்மாவே இருக்கின்றானென்று அநுசந்தானம் செய்து உபாசிக்கின்றார்கள்.

அத்வைதம்—சங்கரர்:—விச்வதோமுகன்—விச்வரூபியான ஞான யக்ஞத்தாலே—பகவத் விஷய ஞானமாகிய யக்ஞத்தாலே; ஏகத்துவத்தால்—பரமாத்மா ஒருவனே என்கிற பரமாத்ம தரிசனத்தாலே, பிருதக்த்வத்தால்—ஒரு விஷ்ணுவானவர் சூரிய சந்திராதி தேவதா ரூபியாயிருக்கிறார் என்னும் பாவனையினாலே,

இவ்வத்தியாயத்தில் இது காறும் கூறியது ஞானம் மேலும் சொல்லப் போவது விக்ஞானம், அதை அடுத்த இதழில் காண்போம்.

சக்கரபுரி அரசன் பெயர் பீமன். அவனுக்கு ஒரு அழகிய மனைவியும் பிள்ளையும் இருந்தார்கள் அந்த அரசனுக்கு துஷ்டகேது என்ற மந்திரி இருந்தான் அவன் பேராசை உள்ளவன் அவனுக்கு பீமனைக் கண்டால் பிடிக்காது. எப்படியாவது அவனைத் தொலைத்து விடுவது என்று சூழ்ச்சி செய்தான். ஒன்றும் பலிக்கவில்லை.

'ஒருநாள் பீமனும், அவன் மனைவியும் நந்தவனத்தில் உலாவி விட்டு வரச் சென்றார்கள். ஆனால் அப்படிப் போனவர்கள் திருமபி வரவே இல்லை. எங்கெங்கெல்லாமோ தேடிப் பார்த்தும் அவர்களைக் காணவில்லை. ஆகவே ராஜாவையும், ராணியையும் சிங்கம், புலி ஏதாவது கொன்றிருக்கும் என்று நினைத்தார்கள் ஆனால் பீமன் பிள்ளை பலபீமன் மாத்திரம் பெற்றோர்களைக் காணாமல் வருந்தினான். இரவு தூக்கமோ, உணவோ இல்லை. எப்படியாவது அவர்களைக்கண்டு பிடித்து விடுவது என்று தீர்மானித்து விட்டான்.

வெகு நாளாக அவனுடைய ராஜ்யத்தைக் கைப்பற்ற எண்ணி இருந்த துஷ்டகேது பீமன் இறந்த உடன் அவன் பிள்ளை பலபீமனை அரசனாக்கினான். ஆனால் பலபீமன் அரசனாயிருந்தாலும் துஷ்டகேதுவின் ஆணைப்படிதான் நடக்க வேண்டும். ஆகவே துஷ்டகேதுவே தன்னிஷ்டப்படி அரசாண்டு வந்தான். பீமனுக்கு வேண்டிய அத்தனை பேர்களையும் சிறையிலடைத்து விட்டான். வரியை ஏராளமாக விதித்தான்; அவனைப் பற்றி யாராவது கடுமையாகப் பேசினால் சிரச்சேதம்தான் அதனால் ஜனங்கள் அவன் ஆட்சியில் வருந்தினர். அவன் எப்பொழுது தொலையப் போகிறான் என்று எதிர் பார்த்துக்கொண்டிருந்தனர். துஷ்டகேது இன்பக் கடலில் மூழ்கி இருந்தான். அவன் பீமன் இருந்த அரண்மனையில் வசிக்க ஆரம்பித்தான். மிகவும் டாம்பீகமாக வாழ்ந்துவந்தான். ஆனால் பல பீமனோ அரண்மனையிலுள்ள ஒரு இருட்டறையில் காலங் கழித்தான். அவன் பட்ட துன்பங்கள் சொல்லி முடியாது. அவனுக்கு உயிர் வைத்துக் கொண்டிருக்கவே இஷ்டமில்லை. எனினும் துஷ்டகேதுவை தொலைத்துவிட தீர்மானித்தான். பல வழிகளில் முயற்சித்தான் ஒன்றும் பயனளிக்கவில்லை.

ஒருநாள் இரவு துஷ்டகேதுவைக் கொல்ல கத்தியுடன் புறப்பட்டான். அடிமேல் அடி வைத்து துஷ்டகேதுவின் அறைக்கு வந்தான் அங்கு மந்திரி நன்றாக தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டான். அவன் அருகில் சென்று சரேலென்று கத்தியை கழுத்தில் செலுத்தினான். ஆனால் மறுகணம் கழுத்தில்பட்ட கத்தி உடைந்து விழுந்தது. பலபீமனுக்கு அக்காட்சி பயத்தைக் அளித்தது. சற்று அருகில் சென்று மந்திரியை உற்றுப் பார்த்தான். அவனுக்கு ஆச்சரியம் வேறு உண்டாயிற்று. ஏனெனில் அது உண்மை துஷ்டகேது அல்ல. அவன் மாதிரி பொம்மை. கலக்கத்துடன் திரும்பினான் பலபீமன் அப்படித் திரும்பியவுடன் வாயிலில் அவன் கண்ட உருவம் அவனைத் திடுக்கிடச்செய்தது. கண்ணை

நன்றாகத் திறந்து பார்த்தான் துஷ்டகேது நின்றுகொண்டிருந்தான். பலபீமன் திடுக்கிட்டான்.

"பல பீமா! உன்னை ஏமாற்றவே இச் சூழ்ச்சி செய்தேன் உன்னை இங்கு வைத்தால் என் உயிருக்கு ஆபத்து. நீ இவ்வளவு காலம் நாட்டு ராஜாவாக இருந்தாயல்லவா. இனி காட்டு ராஜாவாகப் போகலாம்" என்று சொல்லி ஒரு சேவகனை அழைத்து காட்டில் அவனை விடும்படிச் சொன்னான். துஷ்டகேதுவின் கட்டளையும் நிறைவேற்றப்பட்டது.

காட்டில் தன்னந்தனியாக அலைந்தான் பலபீமன். நிலா வெளிச்சத்தில் வெகு தூரம் சென்றான். அப்படிப் போய்க் கொண்டிருக்கையில் திடீரென ஏதோ சத்தம் கேட்டது. மரத்தின் பின்னால் ஒளிந்துகொண்டான். அங்கு பல நிறமுள்ள பூனைகள் ஓடிவந்து கொண்டிருந்தன. அதன் பின்னால் ஒருவன் வந்துகொண்டிருந்தான். பூனைகளைக் கண்டதும் அதில் ஒன்றைப் பிடித்துக் கொண்டு வர வேண்டுமென்று ஆசை ஏற்பட்டு பூனைகளை ஓடிச் சென்றவனை ரகசியமாக பின் தொடர்ந்தான். அங்கிருந்து கொஞ்ச தூரத்தில் ஒரு வீடு தென்பட்டது. அதனுள் எல்லாப் பூனைகளும் அடைந்து கொண்டன. அதன் தலைவனும் வீட்டிற்குள் போனவுடன் தாளிட்டுக் கொண்டு படுத்துக்கொண்டான். பல பீமனும் உள்ளே குதிக்க வழி இருக்கிறதா என்று பார்த்தான். அப்பொழுது ஓர் உருவம் ஒரு ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்து அவனைக் கூப்பிட்டு,

"டேய்! ஜாக்கிரதை. இது மந்திரவாதி வீடு ஓடிப்போய் விடு. இல்லாவிட்டால் நீயும் பூனையாகி விடுவாய். ராஜகுமாரன் ஒருவனை அழைத்து வந்து அவன் கையால் நீர் தெளித்தால், பூனைகள் மனிதர்களாகும்" என்று சொல்லி மறைந்தது. அதைக் கேட்டதும் பலபீமனுக்கு மட்டிலா மகிழ்ச்சி ஏற்பட்டது. அவனே ராஜகுமாரனல்லவா.

உடனே ஓடிச் சென்று பக்கத்தில் உள்ள சிறு குட்டையிலிருந்து நீர் கொண்டு வந்து ஜன்னல் வழியாக உள்ளே தெளித்தான். மறுகணம் அத்தனை பூனைகளும் மனிதர்களாக மாறின. அவர்கள் அத்தனை பேரும் வெளியே வந்தனர். அதில் ராஜாவும், ராணியும் இருந்ததைக் கண்டு களித்தான் பலபீமன். நடந்த விஷயங்களை அவர்களுக்குச் சொன்னவுடன் ஆச்சரியம் ஏற்பட்டது. அவர்கள் பலபீமனின் தைரியத்திற்கு மெச்சினர்.

அவன் அவர்கள் அத்தனை பேரையும் கூட்டிக் கொண்டு ஊருக்குள் வந்தான் ஜனங்கள் பீமனைக் கண்டு ஆரவாரம் செய்தனர். பீமன் வந்துவிட்ட விஷயம் துஷ்டகேதுவுக்குத் தெரிந்தவுடன் மாயமாய் மறைந்தான். அவனும், அந்த மந்திரவாதியும் போன இடமே இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. வழக்கம் போல் பீமன் ராஜ்யத்தை ஆண்டு வந்தான்.

★

நல்லோரும், புலியும்

நமக்கு மிகவும் பசிக்கிறது என்று வைத்துக் கொள்ளுவோம். அம்மாவை ஏதாவது தரும்படி கேட்கிறோம். அவள் சாப்பிடக்கூடிய பொருள் ஒன்றும் கிடையாது என்று சொல்லி விடுகிறாள். அதைக் கேட்டவுடன் நமக்குப் பிரமாதமான கோபம் வந்து விடுகிறது பசி, அம்மா சொன்ன பதில் இரண்டும் மூளையை கலக்க அடித்து விடுகிறது. கோபத்திலே வெளியே வந்து வாயிலில் உள்ள மாமரத்தில் கல்லை விட்டடித்து மாங்காய் இருந்தால் மாங்காயையோ அதுவும் இல்லாவிட்டால் மாந்தளிரையோ கடித்து சிறிது பசியைத் தீர்க்கிறோம். பசியைத் தீர்த்துக் கொள்ள எது இருந்தாலும் அதைச் சாப்பிடும் பழக்கம் நம்மிடம் உண்டு. கண்ட பொருளை தின்னாமல், நல்ல உணவைச் சாப்பிட வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் பசி வந்தால் எது கைக்கு அகப்படுகிறதோ அதைக் கபளீகரிக்கும் பழக்கம் உள்ளவர்கள் நாம். ஆனால், புலி நம் மாதிரி கண்டதைச்சாப்பிடாது. அதற்கு நம்மைக் காட்டிலும் பசி அதிகந்தான். இருந்தாலும் அது தனக்கு வேண்டிய பொருள் கிடைக்கும் வரையில் எதையும் கண்ணெடுத்துப் பார்க்காது. நல்ல பச்சைப் பசேலென்று இருக்கும் பயிர்களை தின்னட்டுமே என்றாலும் அது கேட்காது. அப்படி இருப்பது அதன் குணம் அம்மாதிரிதான் நல்லவர்களும். அவர்கள் எப்பொழுதுமே நன்னடக்கை உள்ளவர்கள். அதனால் ஏழ்மைத்தனம் ஏற்பட்டாலும் தங்கள் உயரிய நடக்கையை விடமாட்டார்கள். ஏழையாக இருக்கிறோமே கொஞ்சம் திருடினால் காசு கிடைக்குமே என்று சொன்னால் அவர்களுக்கு கோபம் வந்து விடும். பசியினால் இறந்துபோனாலும் நல்லொழுக்கத்தை விடமாட்டோம் என்று கண்டிப்பாகக் கூறி விடுவார்கள் இதைத்தான் கீழ் காணும் நீதி நெறி விளக்கச் செய்யுள் கூறுகிறது.

'நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற்கு ஒருப்படார் — பல்பொறிய
செங்கட் புலியேறு அறப்பசித்துந்தின்னுவாம்
பைங்கட் புனத்த பைங்கூழ்'

★

கோரிந்த்

இது கிரீஸ் நாட்டிலுள்ள ஒரு நகரம். இது மிகவும் பிரபல நகரமாக ஒரு காலத்தில் இருந்தது. இதன் துறைமுகம் மூலமாகத்தான் அந்நாட்டின் வியாபாரம் நடந்து வந்தது. இது 2000 அடி உயரமுள்ள பிரதேசத்தில் இருக்கிறது. பெரிய கோட்டையும் இருக்கிறது. இக்கோட்டை பெரிய பெரிய சண்டைகளை எதிர்த்து நின்றிருக்கிறது. உலகத்திலேயே மிகவும் பழைமையான விளையாட்டு ஸ்தலம் இங்குதான் இருக்கிறது. இங்கு ஸெயிண்ட் பால் என்ற கிறிஸ்தவ பாதிரி வாழ்ந்து வந்தார். ஜூலியஸ் ஸீஸர் இதை மிகவும் அழகாக புதுப்பித்து உலகத்திலேயே இதற்கு ஒப்பான நகரம் ஒன்றும் கிடையாது என்று சொல்லும்படி செய்து விட்டார். உலகத்திலுள்ள சில கட்டடங்கள் இங்குள்ள கட்டடங்கள் மாதிரியே கட்டப்பட்டிருக்கின்றன.

குள்ளநரி அண்ணாவை கேளுங்கள்

★

கேள்வி:—உலகத்தில் எத்தனை வகையான புஷ்பங்கள் இருக்கின்றன.

பதில்:—ஒன்பது வகை.

* * *

கே:—எங்கிருந்து காப்பிக் கொட்டை அதிகம் ஏற்றுமதி ஆகிறது.

ப:—தென் அமெரிக்காவிலுள்ள பிரெஸில் தேசத்திலிருந்து.

* * *

கே:—ஆகாய விமானத்தில் மிகவும் சத்தத்தைக் கிளப்பும் பாகம் எது?

ப:—விமானத்தின் முன்னுடைய விசிறிதான்.

* * *

கே:—உலகத்தில் உள்ள மிகவும் பெரிய பாலங்கள் எவை?

ப:—வட அமெரிக்காவின் ஸான்பிரான்ஸிஸ்கோ நகரின் உள்ள, பே பாலமும், கோல்டன் கேட் பாலமும்தான்.

* * *

கே:—தேனீக்கள் எந்த அளவில் விற்கப்படுகின்றன?

ப.—பௌண்ட் கணக்கில். அதில் சுமார் 5000 தேனீக்கள் இருக்கும்.

* * *

கே:—ஆக்ஸ் போர்டு கலாசாலையின் நூல் நிலையத்திற்கு என்ன பெயர்.

ப:—"போட்லியன்" நூல் நிலையம்.

* * *

கே:—பர்ஷியாவின் அரசாங்கப் பெயர் என்ன.

ப:—இரான்.

* * *

கே:—தென் அமெரிக்காவுக்கு சுதந்திரம் வாங்கிக் கொடுத்தவர் யார்:—

ப.—ஸைமன் பொலிவார்.

வீரப் பெண்கள்

கர்னி

நார்வீச்சிலுள்ள ஒரு பெரிய கோடீசுவரக் குடும்பத்தில் பிறந்தவர் இவர். பசி, பிணி, துன்பம் எவற்றையும் கனவிலும் கண்டறியாதவர். சிறிது வயது வந்தவுடன் வெளியிலே நடமாட ஆரம்பித்தவுடன் தெருவிலுள்ள ஏழைகள் படும் துன்பத்தைக் கண்டு துக்கித்தார். அவர்களை அதிலிருந்து மீட்க வகை அறியாமல் வருந்தினர். 1795-ம் வருஷம் அவர் தகப்பனருடன் ஒரு சிறைச்சாலையைக் காணச் சென்றார். அங்கு கைதிகளின் நிலையைக் கண்டதும் அவர் திடுக்கிட்டார். கிழிந்த உடையும், ஒட்டிய வயிறும், பஞ்சடைந்த கண்களும் அவர் மனதை உருக்கிவிட்டது. அவர்களுக்கு எப்படியாவது உணவு கொடுத்து உதவ வேண்டும் என்ற எண்ணம் உண்டாயிற்று. மறுநாள் தன் தகப்பனுக்குத் தெரியாமல் தின்பண்டங்கள் எடுத்துக் கொண்டு சிறைக்குச் சென்றார். அங்குள்ளவர்களுக்கு அதைக் கொடுத்தார். உணவைக்கண்டு வெகுகாலமாகிய அவர்களுக்கு, அவர் ஒரு தெய்வமாகவே விளங்கினர். உணவு கிடைத்ததினல் அவர்கள் முகத்தில் ஒளி ஏற்பட்டது. அவர்கள் இன்புறுவதைக் கண்டு அவர் மனமும் குதூகலித்தது. அம்மாதிரியே மறுநாளும் தின்பண்டங்கள் கொண்டுவந்து சிறையின் கதவைத் திறந்துவிட அதிகாரியை வேண்டினர். அவர்கள் துஷ்டர்கள் ஆனபடியால் கர்னி உள்ளே நுழைந்தால் அவர்கள் கொன்றுவிடுவார்கள். ஆகையால் திறக்க முடியாது என்று கூறினர். அவரை விடாமல் வேண்டிக் கொள்ளவே சிறைக்கதவு திறக்கப்பட்டது. அவரும் உணவைக் கொடுத்து சில உபதேசங்கள் செய்ய ஆரம்பித்தார். அம்மாதிரியே தினமும் செய்யவே, அவர்கள் எண்ணம், நடவடிக்கை எல்லாம் நல் வழியில் திரும்பியது. சில தினங்களுக்குள் முரடர்கள் நல்லவர்கள் ஆனதைப் பார்த்து சிறை அதிகாரிக்கு ஆச்சரியம் ஏற்பட்டது. விஷயத்தை விசாரித்துத் தெரிந்து கொண்டார். ஆகவே கர்னியைக் கொண்டு கைதிகள் எல்லோரும் நல்வழிப்படுத்தப்பட்டனர். இவருக்கு எல்லோரும் மரியாதைசெய்தனர். கைதிகளின் நல்வழிக்காகப் பாடுபட்ட கர்னி 1845-ம் வருஷம் கடவுளை அடைந்தார். இவர் நினைவாக ஒவ்வொரு சிறைச்சாலையிலும் இவர் உருவப்படம் வைக்கப்பட்டிருக்கிறது.

மழையும், குடிகளும்

மழை இல்லாவிட்டால் நாம் கண்டிப்பாக ஜீவிக்க முடியாது. தண்ணீர் வேண்டுமானல் மழை வேண்டும். மழை வேண்டுமானல் உயர்ந்த தவம் செய்ய வேண்டும். தவம் செய்ய எத்தனையோ இடையூறுகள் உண்டு. அதைக் களைந்து எறிய அரசன் உதவி வேண்டும். அரசனுக்குக் குடிகளின் உதவிவேண்டும். குடிகள் இல்லாவிடில் அரசன் இல்லை. ஆகவே, குடிகள் இருந்தால் அரசன் உண்டு. அரசன் இருந்தால் தவம் உண்டு. தவம் இருந்தால் மழை உண்டாகும். மழை உண்டானல்தான் குடிகள் வசிக்கலாம். இதையே நான்மணிக்கடிகை என்ற நூலில் வெகு அழகாக எழுதப்பட்டிருக்கிறது படியுங்கள்:—

'மழை இன்றி மாநிலத்தார்க்கில்லை
மழையும்
தவமிலார் இல்வழி இல்லை தவமும்
அரசிலார் இல்வழி இல்லை அரசனும்
இல் வாழ்வின் இல் வழி இல்லை

ஊர் வம்பு

கார்க்

இது பாட்டில் மூடி அல்ல. அயர்லாந்தில் லீ நதியின் கரை ஓரமாக உள்ள நகரம். இது அயர்லாந்தில் உள்ள மூன்றாவது பெரிய நகரம். இதன் துறைமுகம் நான்கு மைல் நீளம் உள்ளது. இங்கிருந்து முக்கியமாக ட்வீட் துணிகள் ஏற்றுமதி செய்யப்படுகிறது. 1920-ம் வருஷம் ஏற்பட்ட கலகத்தின் காரணமாக நகரம் அக்னி பகவானுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டது. அதன் பிறகுதான் அங்கு அழகிய கட்டடங்கள் கட்டப்பட்டன.

குள்ளநரி அண்ணவைக் கேளுங்கள்

★

கேள்வி.—'பாட்மிண்டன்' விளையாட்டிற்கு முதலில் என்ன பெயர்.

பதில்:—''பூனா'' என்று பெயர் முதலில் இந்தியாவில் உள்ள பூனாவில்தான் அது ஆரம்பிக்கப்பட்டது.

* * *

கே:—அமெரிக்காவிலுள்ள பனமா கால்வாய் யாரால் எப்பொழுது கட்டப்பட்டது.

ப:—பிரஞ்சுக்காரர்களால் 1879-ம் வருஷம் கட்டப்பட்டது

* * *

கே:—இந்தியாவிலுள்ள கோபி பாலைவனத்தை முதலில் கடந்து சென்ற யாத்ரீகர் யார்.

ப:—மார்கோ போலோ.

* * *

கே—பூனையின் தாடைக்கும், நாயின் தாடைக்கும் என்ன வேற்றுமை.

ப:—பூனையின் தாடைமேலும், கீழும் மாத்திரந்தான் அசையும். நாயின் தாடை எப்படி வேண்டுமானலும் அசையும்.

கே:—முதன் முதலில் ஏற்பட்ட நிறங்கள் என்ன.

ப.—சிவப்பு, மஞ்சள், நீலம்

* * * *

கே:—பௌண்டன் பேனவைக் கண்டு பிடித்த ஆசாமி யார்.

ப:—எல். ஈ. வாடர் மென்.

* * *

கே:—எந்த கண்டத்தின் முனை தென் துருவத்திற்கு அருகில் இருக்கிறது

ப:—தென் அமெரிக்காவின் முனை.

* * * *

கே—வௌவால் முட்டை இடுமா, அல்லது குட்டிபோடுமா

ப:—குட்டி போடும்.

* * *

கே:—எந்த ஊரில் மாமிசம் அதிகம் செலவாகிறது.

ப:—தென் அமெரிக்காவிலுள்ள அர்ஜண்டைனவில்.

கருணை வேண்டும்

ஒரு சிறுவன் கருணைக் கிழங்குகளை ஒரு கூடையுடன் வைத்துக் கொண்டு ஒரு நாயின் அருகில் நின்று கொண்டிருந்தான். அதைப் பார்த்துக்கொண்டிருந்த பெரியவர் ஒருவர் சிறுவனைப் பார்த்து, 'பையா! ஏன் அதை

வைத்துக்கொண்டு நாயிடம் நிற்கிறாய்?' என்று கேட்டார்.

சிறுவன்:—மிருகங்களிடத்தில் எப்பொழுதும் கருணையுடன் இருக்க வேண்டும் என்று வாத்தியார் சொல்லியிருக்கிறார்.

காந்திஜி கண்ட கனவு

ரா. சாரங்கபாணி

[நாஸிக் காங்கிரஸ் நடந்த இதே மகாராஷ்டிரத்தில்தான் 1937-ல் பெயிஸ்பூர் காங்கிரஸும் நடந்தது. அதைச் சேர்ந்த பொருட் காட்சியைத் திறந்து வைக்கும்போது மகாத்மாகாந்தி தம்முடைய ஒரு ரஸமான கனவின் விவரங்களை வெளியிட்டார். "அஹிம்ஸையின் இறுதி வெற்றியை ஏற்று வெகு சீக்கிரத்தில் இந்த நாட்டை நம்மிடமே விட்டு விட்டு, மூட்டை முடிச்சுகளுடன் இங்கிருந்து வெளியேறு முன்பு, வைஸ்ராய் என்னிடம் விடைபெற்றுக்கொள்ள வருவார். அப்போது நான் அவரை மனமார வாழ்த்தி, வைஸ்ராய் என்ற முறையின்றி சுதந்திரப் பிரஜையென்ற முறையில் இங்கேயே தங்கி வாழச் சொல்வேன்" என்றார் மகாத்மா. மகானின் வாக்கு மவுண்ட்பாட்டன் மூலம் பலிதமானது நமக்குத் தெரிந்த விஷயம். சுதந்திர இந்தியாவில் அதே மகாராஷ்டிரத்தில் இப்போது நடந்த காங்கிரஸ் மகாசபையைத் தொடர்ந்து வந்த இந்த காந்தி ஜயந்தியின் போது, காந்திஜியின் அந்தப் பழைய கனவுதான் கீழ்க்கண்ட கவிதையாக மலர்ந்திருக்கிறது.—

ஆசிரியர்]

★

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துக்கு என்றைக்காவது ஒரு நாள் மனமாற்றம் ஏற்பட்டபின்பு, வைஸ்ராய் என்னிடம் வந்து சொல்வார்:—

உண்மையறியாது உம்மை யெதிர்த்தனன், காந்திஜியே—மனத்
திண்மையைக் கொண்ட உம் சேனை மறந்தனன், காந்திஜியே !

வாள் முனை காட்டியே வான்புகழ் கோரினன், காந்திஜியே—எனின்
ஆ அபல மேன்மையை யானின் றறிந்தனன், காந்திஜியே !

தாங்கவொண்ணாதும்மைத் தாக்கியடக்கினன், காந்திஜியே—நீர்
ஓங்கி யடிபட்டால் ஓங்கியெழும் பந்தே, காந்திஜியே !

சத்திய சாத்வீக சாதனங்கள் கொண்டீர், காந்திஜியே—இன்று
நித்திய வாழ்வுற நீதிதனைப் பெற்றீர், காந்திஜியே !

நாட்டுத் தொழிலோங்கி நன்மை நிலைத்திட, காந்திஜியே—யாரும்
மாட்டைப் போலே யுழைமை வாட்டக்கூடா தென்றீர், காந்திஜியே !

சின்னக் கதிரோசை சேனைச் சீற்ற மென்றீர், காந்திஜியே—அது
பின்னெனைத் தள்ளிடும் பீரங்கி கர்ஜனை யாயிற்றின்றே !

போதும் போதுமென்றன் பத்திரிலா நீதி, காந்திஜியே—இன்றே
வாதுகள் செய்யாமல் வந்த வழி செல்வேன், காந்திஜியே !

மூட்டை முடிச்சுக்கள் முன்னனுப்பி விட்டேன், காந்திஜியே—இப்போ
கேட்டுக் கொள்ள வந்தேன் கீழான மன்னிப்பை, காந்திஜியே!

நாட்டில் கடன், பசி, ஞானமின்மையும் ஒழிந்து என்றும்—உம்
நாடடினர் மன்னராய் நன்கு விளங்கட்டும், காந்திஜியே !

அப்போது நான் பதிலுக்கு வைஸ்ராயிடம் சொல்லப் போவது:—

இச் சகத்தில் இன்னும் ஏகாதிபத்தியம் ஏற்கப் போமோ—ஆக
மெச்சினேன் உம்முடை மேன்மை முடிவினை, வைஸிராயே !

மன்னன் சிவாஜியின் வான்புகழ் தானென்ன, வைஸிராயே—அவன்
'இன்னுயிர் போன்றது எம்முடை விடுதலை' என்றுளானே !

வீர நபி யன்றே வேண்டிய விடுதலை, வைஸிராயே—இன்று
தீரர்களாமவர் சீடர்கள் வேண்டாரோ, வைஸிராயே ?

வீட்டுட் புகுந்தெம்மை வீட்டைவிடச் சொன்னீர், வைஸிராயே—எனின்
கூட்டு வலியோடு கொள்ளையைப் போக்கினம், வைஸிராயே !

முப்பத் தெட்டுக் கோடி வூமைகள் வீட்டினை, வைஸிராயே—ஒரு
கப்பற் கூட்டமிங்கே கட்டியாண்டு கொள்ளல் ஞாயமாமோ ?

அறமுயர்ந் தோங்கியே மறமழிந் தேங்குதல் நீதியன்றோ—அந்தப்
பரம ஸத்தியத்தைப் பாரினில் வெல்லுதல் ஆகாதய்யா !

தான தருமத்திற் சாலச் சிறந்ததிந் நாடுதானே—இங்கே
ஆனந்தமா யெங்கள் அன்னம் புசித்திடும், வைஸிராயே !

கருணன் பிறந்தயிக் கனக நிலந்தனில், வைஸிராயே—என்றும்
தருமம் செய்ய யாரும் தயங்குவதும் உண்டோ, வைஸிராயே ?

எங்கெவர் வந்தாலும் ஏற்றுணவூட்டுவம், வைஸிராயே—அவர்
பாங்கோ டிருப்பரேல் பண்புடன் போற்றுவம், வைஸிராயே !

ஊடல் நலம்

ஸ்ரீ ராஜகோபாலாச்சாரி

ஊரார் அறிய முறை வழிப்படி மணந்து இல்லறம் புரியும் அன்புடைய தம்பதிகளிடம் ஏற்படும் சிறு பூசலை ஊடல் என்பர் இதனை வட நூலார் பிரணயகலகம் என்று அழைப்பர்.

கொண்ட கணவன்பால் எல்லை கடந்த காதலுடைய நங்கை ஒருத்தி அவனும் தன்பால் பேரன்புகொண்டு ஒழுகவேண்டுமென்று எதிர்ப்பார்ப்பது முறையே ஆகும் தன்னை யல்லாது அயல் ஒருத்தியினிடம் தன் நாயகனது மனம் சிறிது நாடியது என்று கற்புடைய நங்கை நினைக்கவும் விரும்புவது இல்லை ஆகவே, தன் உள்ளத்தைக் கோயிலாகக்கொண்ட தன் கணவனது சொல்லையும், செயலையும் அவள் ஆராய்ந்தவண்ணமாய் இருக்கின்றாள் தன் காதல் தலைவனுக்கு அயல் ஒருத்திமேல் அன்பில்லை என்று தேரும் பொருட்டே அப்படிச் செய்கின்றாள், அது ஆழமுடைய அன்பின் காரியம்,

மருண்டவர் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் என்பர். இந்த ஆராய்ச்சியில் புகுந்தவருக்குக் காரணம் அகப்படுவது அருமை அன்று. நாயகன் தும்மினாலும், சிரித்தாலும் போதும். அவனது ஆசைக்குரிய ஒருத்தி அவனை நினைத்ததால் வந்த தும்மல் என்று கொண்டு ஊடல் கொள்வாள் அவன் சிரித்தால் தன்னை அவன் அவமதிப்பதாகக் கொண்டு வருந்துவாள்.

தன்னை நாடிவரும் நாயகனைச் சினந்து விலக்கி, 'ஐய, என்னைத் தீண்டேல். உன் கபட நாடகத்தை நான் அறிவேன்' என்று கூறி ஒருபுறம் ஒதுங்கிவிடுவாள் அவள் காரணம் என்று கருதுவதும் அற்பமாகத்தான் இருக்கும், காரணம் இல்லாமலே கூட சந்தேகம் பிறக்க வழி ஏற்பட்டால், ஏற்பட்ட அந்த சந்தேகத்தை ஸ்தாபித்துக் கொள்வதற்கு வேண்டிய ஆதாரங்களை அவனுடைய சொல், பார்வை. செயல் ஆயவைகளிலிருந்து வலிந்தேனும் தேடிக்கொண்டு விடுவாள்.

இந்த ஊடல் அற்ப நினைவினால் ஏற்படுவதொன்று அன்று. நாயகியின் அளவில் அடங்காத அன்பினில் திரண்டு எழுகின்றது இது. ஊடாத மனைவி ஒருத்தி இருப்பாளாயின் அவள் தன் நாயகனிடத்தில் அன்பு சிறிதும் இல்லாதவள் என்று கொண்டு விடலாம். இல்லற வாழ்க்கையில் இடையிடையே இவ்விதப் பிணக்குகள் நிகழ்தல் வேண்டப்படுவதாகும் இப் பிணக்குகள் காதலின் இன்பத்தைப் பெருக்கி வைக்கும் தன்மையன

எல்லாப் பெருங் காவியங்களிலும் இவ்வூடலுக்கு இடம் உண்டு. நாயகனும் நாயகியும் களிசிறந்த மனத்தினராய் இருக்கும் வேளையில்தான் புலவர்கள் இவ் வூடலை நிகழ்த்திக் காட்டுகின்றனர் இன்பத்திலும் அதற்கு எதிரான துன்பம் உண்டு சந்தோஷத்தின் மிகுதியில் அதற்கு எதிர் ஒன்று நேர்வதும் இயற்கையே. இந்த இயற்கைக்கு இணங்கக் கவிகள், தங்கள் நூல்களில் ஊடலை இடம் பார்த்து அமைக்கின்றனர். இனி இந்த ஊடலைப் பல காவியங்களிலிருந்து பார்க்கலாம்.

நளனது சரித்திரத்தை எல்லோரும் அறிவர். நளன் தமயந்தியை மணந்து கொண்டு நிடத நாடு திரும்புகின்றான்.



மனைவி:—இந்த வாரத்து 'ரேஷன் அரிசி'யை வாங்கிட்டேளோ ?

கணவன்:—ஓ, இன்னிக்கு மத்தியானம் தான் வாங்கினேன்......

மனைவி:—அரிசியை எங்க வச்சிருக்கேள் ?

கணவன்:—என் சட்டை ஜோபிலே இருக்கும் பாரு......

நளனும் தமயந்தியும் செல்லும் வழியில் ஓர் அழகிய சோலை அச்சோலையைத் தமயந்தி வியந்து நோக்குகின்றாள். தன் காதலியின் மனத்தைக் கவர்ந்த இச்சோலையினும் சிறந்த சோலைகள் தனது நாட்டில் உளது என்றுகூற நினைத்த நளன் கூறுவான்:—

> "நறை யொழுக வண்டுறையும்
> நன்னகர் வாய் நாங்கள்
> உறையும் இளமரக்கா ஒக்கும்..."

[தேன் ஒழுகும்படி வண்டுகள் தங்கி இருக்கும் எங்களுடைய நல்ல நகரத்திலே நாங்கள் தங்கி விளையாடும் இள மரங்கள் அடர்ந்த சோலையை (நீ கண்டு வியக்கும் இச் சோலை) ஒத்திருக்கும்]

நளனுடைய இவ்வுரை தமயந்தி சினங்கொள்வதற்குக் காரணமாய் அமைந்தது நாங்கள் உரையும் இள மரக்கா ஒக்கும் என்று கூறினான். இக் கூற்றினில் உள்ள நாங்கள் என்ற சொல் நங்கையின் உள்ளத்தை உறுத்திற்று அவனையும் அவனது ஆசைக்குரிய மாதரையும் நாங்கள் என்னும் பதம் குறிப்பதாகக் கொண்டாள்.

நளனோ தூயவன். தன் நாயகியை அவன் சொல்லாலும் செயலாலும் மனம் வருந்தச் செய்யான் கல்யாணம் ஆவதற்கு முன் ஆசைக் கிழத்தியர் இருந்திருக்கலாம் என்று கொண்டாலும், இவ்வேளை அதனைச் சொல்லி ஒரு பெண்ணை மனம் வருந்தச் செய்ய வேண்டுமென்பது இல்லை சிறுமானிடனும் அப்படிச் செய்யான். நளனை இப் பழிக்கு ஆளாக்குவது குற்றமாகும்.

மேலும், நளன் நினைத்துச் சொன்ன சொல்லுமன்று அது. அன்னம் சொன்ன பொன்னைப் பெற்றதால் உண்டான மகிழ்ச்சியில் தன்னையே இழந்திருக்கும் மன்னவன் வாய் வழிந்த சொல்லாகும் அது. எனவே, நாங்கள் என்னும் அச்சொல் எக்குறிப்பையும் கொண்டதன்று ஒருவேளை அவன் தன் பரிசனங்களை இப்பதத்தால் குறித்திருக்கலாம் மற்று தமயந்தியோ அதனில் விபரீதமான பொருளை நாடிக்கொண்டாள் "இக்கடிகா நீங்கள் உறையும் இளமரக்கா ஒக்குமதோ!" என்றாள் அவளது கண்கள் சிவந்தன. அவளது கனிவாய்

துடித்தது. நெற்றியில் வியர்வை அரும்பியது,

நங்கையின் நிலைகண்ட மன்னவன் குழம்பினான். அவளது கோபத்திற்குக் காரணம் தெரியவில்லை. நளனோ பிழையொன்றும் இழைக்கவில்லை. அவளது கோபத்தைத் தணிக்க என்ன செய்வது என்று யோசித்தான். ஊடிய பெண்களிடம் தருக்க வாதம் பயன்படுவதில்லை. எனவே, 'என் பிழை பொறுப்பாய்' என்று அவன் தான் தாழ்வதே வழி எனக் கண்ட மன்னவன் செய்ததை அடுத்த செய்யுள் கூறும்:—

> "சில்லரிக் கிண்கிணி மென்
> தெய்வமலர்ச் சீறடியை
> தொல்லை மணி முடிமேல்
> சூட்டினான் —வல்லை
> முழுநீலக் கோதை முகந்தே
> மலர்ந்த
> செழுநீல மாறச் சிவப்பு"

[சில்—சப்தம் செய்கின்ற, அரி—பருக்கை கற்களை உடைய கிண்கிணி—சலங்கைகட்டிய, மென்—மிருதுவான, தெய்வ மலர்—தாமரை மலரைப் போன்ற, சிறு—சிறிய, அடியை—அவளது பாதங்களை, தொல்லை—தன் குலத்திலே தொன்றுதொட்டு வந்த, மணி முடிமேல்—அழகிய கிரீடத்தின் மேல் சூட்டினான்—(நளன்) அணிந்து கொண்டான்; வல்லை—உடனே, முழு நீலம்—முழுதும் கரியதான, கோதை—கூந்தலை உடைய தமயந்தியின் முகந்தே—முகத்திலே, செழு நீலம்—செழுமையான நீலோற்பலம்போன்ற கண்கள், சிவப்பு—கோபத்தால் உண்டான சிவப்பு நிறம், மாற—மாறி, மலர்ந்த—(அவளது கண்கள்) மலர்ந்தன.]

எப்பிழையும் இழைக்காத நளன் தன் நாயகியின் ஊடலைத் தணிக்கும் பொருட்டுத் தனது கிரீடத்தின் மீது அவளது பாதத்தைச் சூட்டிக்கொண்டான். உடனே அவளது கோபம் தணிந்தது; முகமும் மலர்ந்தது

தங்கள் பழம் பெருங்குலத்தில் வழி வழி வந்த பழமையான மணி முடியைத் தமயந்தியின் பாதத்தில் தன்னுதல் பொருந்துமோ! என எவரும் வியக்க வேண்டா. காதலில் ஆடவர் எளியர் ஆகின்றனர் அன்னதற்கு ஆடவர் வருந்தவும் வேண்டுவதில்லை. அடியாரின் அன்பினிற்கு எதிர் ஆண்டவன் எளியனுவதுபோல், அன்புடைய காதலியின் அளப்பரிய காதலுக்கு முன் அடங்குதல் ஆடவனுக்குப் பெருமையே செய்து வைக்கின்றது இவ்வழியில் ஆடவன் கடவுளை ஒக்கின்றான். எனவே, தமயந்தியின் தூய காதலின் முன் எளிமையுற்ற நளன் மேன்மகனே ஆகின்றான், வாழி அவன்.



ஒருவர்:—ஒங்க ஆத்து கல்யாணம் நின்னுபோச்சாமே...

மற்றவர்:—ஆமாம் ஸார்...... பிள்ளை ஆத்துகாரா ஒரேடியா 2 படி அரிசியை வரதக்ஷிணையா தரணும்னு...அதுக்கு நாங்க எங்கே போரது......

பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்க்கண்டுள்ள விலைக்குகிடைக்கும்:—

காயகசிகாமணி அரியக்குடி ராமாநுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1 அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ 8 0 0
2 திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ 7 8 0
3 பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ 6 0 0
4 ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை.

1 ஸ்ரீ ப்ருஹ்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ 3 12 0
2 ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபமாக இல்லை தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும் தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்.

சுதேசமித்திரன் புத்தகசாலை,

மவுண்ட் ரோடு, சென்னை.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்துக்கு நல்ல உணவு அவசியமானது போல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும் உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்ட்) மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப்போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும். ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர் இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள். எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது. எப்பொழுதும் உபயோகியுங்கள்

ஆட்டோ டிஸ்பஹார் (ரிஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனை நீடித்தநறுமணம். தபால் சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் பெறுங்கள்.

Sole Agent ANGLO INDIAN DRUG & CHEMICAL CO., 285, Jamma Musjid P. O. Box 2065, Bombay 2.

வாக்குப்பலித்தது

'ஹாஸம்'

நெற் பயிரின் நடுவு நாள். காற்றோடு ஆண்குரலும் பெண் குரலும் சேர்ந்து "ஏலேலோ, ஐலஸா!" என்ற கோஷத்தை எழுப்பி, உற்சாக மூட்டுவதாய் இருந்தது 'மாலைச் சூரியன்' இரவு வருகிறது. சீக்கிரம் வேலையை முடியுங்கள்!' என்று செங்கிரணத்தை வீசி மறைந்துகொண்டிருந்தது. சூரியன் மறையவும், தங்கள் வேலையை முடித்து வீடு சென்றுகொண்டிருந்தனர் வேளாளர்கள். தில்லானாவும் புல்லாங்குழல் இசையும் மாடு மேய்ப்பவர்கள் வீடு திரும்புவதைத் தெரிவித்துக் கொண்டிருந்தன.

"கஞ்சி கொண்டா!", என்று சொல்லியபடி குடிசையின் வாசலிலேயே உட்கார்ந்துகொண்டான் காளிமுத்து. பொன்னி கஞ்சிக் கலயத்தையும் மிளகாய்களையும் கொண்டுவந்து அவன் எதிரே வைத்துவிட்டு, நின்றுகொண்டிருந்தாள். காளி உப்பை அள்ளிக் கஞ்சியில் போட்டுக்கலக்கி, மிளகாயை ஒரு கையிலும் கலயத்தை ஒரு கையிலும் எடுத்துக்கொண்டான்.

"பொன்னி! உனக்கு என்மேலே பிரியமிருக்குதா, இல்லையா? எனக்குத் தெரியணும்", என்று ஆரம்பித்தான் காளி.

'ஐய! இதென்ன வேடிக்கையா இருக்குது! உங்களுக்கு எப்படித் தோணுது?'

'ஏ, குட்டி! அதைக் கேட்கலே. அந்தக் கருப்பாயிகிட்ட என்னமோ சொன்னியாமே......'

'என்ன சொல்லிப்பிட்டேன்? என் அப்பனுக்கும் அவங்களுக்கும் ஆகாது. துரோகம்...அப்படின்னு சொல்லிக்கிட்டிருந்தேன்.'

'அது கிடக்குது! இன்றொரு குவளை கஞ்சி ஊத்து', என்று கேட்டுச் சாப்பிட்டுவிட்டு, நிலவொளியில் நன்றாக அமர்ந்தான். பொன்னியும் தனது காரியங்களை முடித்துக்கொண்டு வந்து அவன் பக்கத்தில் உட்கார்ந்து தலையில் பேண் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் மகன் காத்தானும் விஷமம் செய்யாமல் மடியின்மேல் சாய்ந்துகொண்டிருந்தான். சிறிது கண்ணை மூடிய காளி 'சட்'டென்று விழித்துக்கொண்டான். 'சல சல' வென்ற நீர் பாயும் ஓசை மெல்ல வந்துகொண்டிருந்தது. உடனே எழுந்து வயலை நோக்கி விரைந்தான் காளி.

சிறிது நேரத்திற்கெல்லாம் இருவர் சண்டை போட்டுக்கொள்ளும் சப்தம் கேட்டது. அதைக் கேட்ட பொன்னி, தன் மகனை இடுப்பில் தூக்கி வைத்துக்கொண்டு குடிசையின் வாயிலில் நின்றாள்.

'ஏய்! உங்க அப்பன் வீட்டு வாய்க்காலா?' என்றான் ஒருவன்.

'எவனுதாயிருந்தா என்ன? ஏண்டா கிழவா! என் வயல் தண்ணி ஏண்டா வடியுது......தூ!...'

'அடே, அவமரியாதையா பேசிக்கிட்டிருந்தே பல்லைக் கொட்டிபுடுவேன்!'

இப்படி வாக்குவாதம் வலுத்து, இருவரும் கைகலக்க ஆரம்பித்து விட்டனர். கிழவன் தான் கொண்டுவந்திருந்த மண்வெட்டியை ஓங்கிவிட்டான். 'ஐயோ! பிழைச்சேன்!', என்று ஓடிவந்த காளி, வயலின் கோடியிலிருந்தபடி 'ஏய், உன்னை சும்மா விட்டுடமாட்டேன்! நீ சாவணும், இல்லாட்டி நான் சாவணும்! நான் காளிடா......, என்று மீசையை முறுக்கிவிட்டுத் திரும்பினான்.

'போடா, போ,' என்றான் கிழவன்.

குரல் ஓசையிலிருந்து தன் தகப்பனும் காளியுந்தான் சண்டை போட்டுக்கொண்டார்கள் என்பதைத் தெரிந்துகொண்டாள் பொன்னி.

மறுநாள் நந்தக் கிராமத்து ஜமீன்தார் அருணாசல முதலியாரின் பண்ணைவீட்டு வாசலில் ஒரு சிறு கூட்டம் கூடியிருந்தது. ஜமீன்தார் எதையோ விசாரித்துக்கொண்டிருந்தார். காளி எதிரே கைகட்டி நின்றுகொண்டிருந்தான்.

'காளி! நீ மருக்கொழுந்து பிள்ளை ஆளு கோவிந்தப் படையாச்சியை ஏன் அடிச்சே? தண்ணீர் வடிஞ்சா வடிஞ்சுட்டுப் போவுது; உம்!'

'எசமான்! காளியாத்தாமேலே ஆணையா நான் அடிக்கவே இல்லீங்களே, எசமான்!'

'அவரே ஆளு அனுப்பியிருக்காரு. தெரியுமா? பொய் சொல்லி ஏமாற்றப் பார்க்காதே! பிச்சைக்கார நாயே!'

'எசமான்! சத்தியமா அடிக்கலிங்களே!......'

'அட, பிச்சைக்காரப் பயலே,' என்று இருபது புளியம் வளாற்று அடியுடனும் இருவாரச் சம்பளம் பிடித்தத்துடனும் காளியை வெருட்டிவிட்டார் முதலியார்.

காளியின் மனம் மிகவும் நொந்து போய்விட்டது. 'எதிரியைக் காட்டிலும் அதிகமாகவல்லவா புகார் செய்துவிட்டான். பூனையைக்கூட நாய் இப்படிக் கொல்லாதே! சொந்தம் கிந்தம் பார்க்காம போய் சொல்லிப்பிட்டானே. அன்னிக்கு சொன்னால் போல ஒன்று நான் சாகணும் இல்லாவிட்டால் அவன் சாகணும்; என்று சிந்தனைக் கடலில் மிதந்து தவித்தான், கஞ்சிக்கும் திண்டாட்டமாய்விட்டது. தன் மகன் காத்தான் அழும்போதெல்லாம் அவன் கண்ணீர் ஆறாகப் பெருகியது. பொன்னியைப்பற்றி நினைக்கும்போது ஒரு புறம் துக்கமும் ஒருபுறம் வியப்பும் தோன்றியது அவனுக்கு, இந்தச் சோற்றுக்கு திண்டாட்டமான காலத்திலும் தன்னை அலட்சியம் செய்யாமல் நடந்துகொள்ளும் பொன்னியைப் பற்றி அவன் வியப்படைவதில் வியப்பென்ன? ஆனால், அவளுடைய தகப்பன் கோவிந்தன் செயல் முன்னின்று அவனுடைய சிறிது ஆனந்தத்தையும் குலைத்தது.

நடவுப் பாட்டின் இசையைக் கேட்டதும் உற்சாகமும் வீரமும் தோன்றும் வயலில் சிறிது தண்ணீர் குறைவது போலத் தோன்றும் அப்பொழுது, தன் கையாலேயே அப்பச்சிளங் குழந்தைகளுக்குத் தண்ணீர் பாய்ச்ச வேண்டுமென்று அவன் மனம் போராடும். ஆனால், வேலைக்கு வரக் கூடாதென்ற எசமான் உத்தரவு யாவற்றையும் அறுத்துக் கீழே தள்ளும். இன்றோடு மூன்று நாட்கள் ஆகிவிட்டன காளி வயலுக்குப்போய். கண்கள் ஒளி மங்குவதுபோன்றிருந்தது அவனுக்கு.

'அக்கான்' முழுவதும் தலையை விரித்தாடக் கண்டதும், தன்னைக் காட்டிலும் பொன்னியின் சுகமும் காத்தான் சுகமுமே பெரிதாக நினைத்தான் அவன். இந்த நிலையில் என்ன செய்வது? வேறு எங்கே போவது? பொன்னியை அவளுடைய தகப்பன் வீட்டுக்காவது போயிருக்க வற்புறுத்தினான், ஆனால் "அங்கே போய் என்ன ஆவணும்" என்று மறுத்துவிட்டாள் பொன்னி. காத்தானுக்காக போயேன், பொன்னி" என்று மன்றாடினான் காளி. துக்கம் நெஞ்சை அடைத்துக்கொண்டது அவனுக்கு.

மெல்லிய புகைப்படலம் நிலாவைப் போர்த்துக்கொண்டிருந்தது. அதனால்

எங்கும் மங்கலான வெளிச்சமே பரவியிருந்தது. பொன்னி காத்தானைத் தோளில் சாத்திக்கொண்டு மெதுவாக கோவிந்தனின் வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தாள், அவள் மனம் நிலையற்று அலைந்துகொண்டிருந்தது. இயந்திரம்போல் நடந்துகொண்டிருந்த அவள் தோளில், காத்தான் கவலையற்றுத் தூங்கிக்கொண்டிருந்தான்.

"அப்பா, அப்பா!" என்று ஈனக் குரலுடன் தன் தந்தையை அழைத்தாள் பொன்னி, கண்ணயர்ந்துபோன கோவிந்தன், கொஞ்ச நேரம் கழித்து விழித்துக்கொண்டு குடிசையிலிருந்து வெளியே வந்தான். "யார்? பொன்னியா?..." என்று பிரமித்துப் போனான் கோவிந்து.

"ஏன், என்னைத் தெரியலையா?" என்றாள் பொன்னி.

"தெரியுது. தெரியுது! இங்கே எங்கே வந்தே? அப்பன் பேச்சைக் கேட்காமல் போனியே, இப்போ எப்படியிருக்கு உன் நிலமை! வெட்கமில்லே ஓடு!" அந்தப் பயலோடே ஓடு!" என்று பொன்னியின் முன் கழுத்தில் கையை வைத்துத் தள்ளினான். "அப்பா!" என்று அலறியபடி காத்தானுடன் கீழே சாய்ந்தாள் பொன்னி கோவிந்தனுக்குக் காளியின் மேல் இருந்த முழு ஆக்ரோஷமும் வெளிப்பட்டு நின்றது கோரமான கண்களுடன் அசையாமல் நின்றுகொண்டிருந்த கோவிந்தன், "தூ" என்று துப்பிவிட்டு குடிசைக்குள் நுழைந்தான்.

கால்மணி நேரம் நிசப்தம் நிலவியிருந்தது. மறுபடியும் கோவிந்தன் குடிசையை விட்டு வெளியே வந்தான். "பொன்னி! பொன்னி! காத்தான்! பொன்னி எங்கே?" தெருவின் இரண்டு கோடியையும் கண்ணோட்டம் பார்த்தான் கோவிந்தன். எங்கும் சூனியம், நாய்கூட குறுக்கு நெடுக்காகப் போகாமல் காட்சியளித்தது அந்தத் தெரு. "எங்கே தன் மாமியாளின் வாக்குப்படி நடந்துவிடுமோ' என்று அவன் மனம் 'திக், திக்'கென்று அடித்துக்கொண்டது "ஐயோ கடவுளே! குழந்தையிடம் அநியாயமாக நடந்துகொண்டேனே! பிசகு, பிசகு..." என்று கன்னத்தில் அறைந்துகொண்டு, குடிசைவாயிலில் உட்கார்ந்துவிட்டான் கோவிந்தன்.

ஒரு கரு மேகம் சந்திரனை வந்து கவிந்துகொண்டது எங்கும் அந்தகாரம் சூழ்ந்துகொண்டது.

* * *

அப்பொழுது கோவிந்தனின் கட்டிளமைக் காலம் சுமார் இருபது இருபத்திரண்டு வயதிருக்கும் அவனுக்கு. நல்ல முறுக்கான சரீரம். அதற்கேற்றாப்போல் அவனுடைய குணமும் சிறிது முறுக்காகவேயிருந்தது.

தாயும் தந்தையும் இல்லாத அவன் சுதந்திரமாகத் தகப்பன் வேலைசெய்து வந்த எசமானரிடமே வேளாண்மை பார்த்துக் கொண்டுவந்தான். என்ன காரணத்தினலோ அந்த ஊரில் எதற்கெடுத்தாலும் கோவிந்தனைத் தேடாதவர்கள் இல்லை. கோவிந்தனும் அவரவர்க்கு ஏற்றாப்போல காரியம்செய்து நல்ல மதிப்புச் சம்பாதித்துக்கொண்டான்.

வள்ளியம்மை வேலுப்படையாச்சியின் ஒரே மகள் வயதுவந்த அவளை அவளுடைய மாமன் மகனுக்குக் கட்டிக் கொடுப்பதில் அவருக்கு நல்ல அபிப்பிராயம் இருந்தது அவருடைய மனைவியும் ஒத்தைக்காலால் அதையே அடிக்கடி சாதித்துக்கொண்டிருந்ததால் அதுவும் உறுதியாயிற்று. ஆனால், வள்ளியம்மைக்குக் கோவிந்தன்மேல் கண் விழுந்திருந்தது.

ஒரு நாள் வேலுப்படையாச்சி வெளியேபோயிருந்த சமயம் அவரைத் தேடிக்கொண்டு வந்தான் கோவிந்து. "வேலு அண்ணே! வேலு அண்ணே!" என்று வெளியேயிருந்தபடி சப்தம் போட்டான் கோவிந்தன். ஆனால், வள்ளி வெளியே எட்டிப்பார்த்து "இல்லே! வெளியே போயிருக்காங்க" என்று புன்முறுவலித்தாள். அப்படியே சொக்கிப்போனான் கோவிந்தன்.

கோவிந்தனும் வள்ளியம்மையும் சொக்கிவிட்டால் சரியாகப் போய்விட்டதா? வள்ளியின் தாயும் தந்தையும் அவளுடைய மாமன் மகன் சம்பந்தத்தில் சொக்கிப் போயிருந்தார்களே!

அன்று முதல் அவர்களுடைய காதல் கொஞ்சம் கொஞ்சமாகப் பெருகிக் கொண்டிருந்தது அவர்கள் சந்திக்கத் தகுந்த சந்தர்ப்பத்தை அடிக்கடி ஏற்படுத்திக்கொண்டு, ஒருவரின்றி ஒருவர் வாழமுடியாது என்று சங்கல்பம் செய்துகொண்டார்கள். வேலுப்படையாச்சிக்கும் கோவிந்தனைப்பற்றிய நினைவு இல்லாமல் போகவில்லை. ஆனால், அவனுடைய சில குணங்கள் அவருக்குப் பிடிக்காததால் அவனுடைய சம்பந்தம் வேண்டியதில்லை என்று ஒதுக்கிவிட்டார் நாள் போய்க் கொண்டிருந்தது வள்ளியம்மையின் மாமன் விட்டிலிருந்து வந்து பரிசம் போட்டுவிட்டுப் போய்விட்டார்கள். வேலுப்படையாச்சி மேலே ஆகவேண்டிய வேலைகளை உற்சாகமாகக் கவனித்துக் கொண்டிருந்தார். அவருடைய மனைவி வள்ளியம்மையை சீர்படுத்திக் கொண்டிருந்தாள் வள்ளியம்மை தன் காதலை நினைத்து விம்மினாள் கோவிந்தன் பொருமிக் கொண்டிருந்தான்.

கல்யாண நாள் நெருங்கியது. ஊருக்குக் கிளம்பவேண்டிய ஏற்பாடுகளில் வேலுப்படையாச்சியின் வீடு அல்லோ கலப்பட்டது. மறு நாள் விடியற்காலை வண்டிக்குக் கிளம்பவேண்டும் வேலுப்படையாச்சி கோவிந்தனைக் கூப்பிட்டு "தம்பி! நம்ம பசுமாட்டையும் எருமையையும் இரண்டு நாளைக்குப் பார்த்துக்கிறீங்களா? உபயோகத்துக்குப் போக மீதி பாலை வித்துடுங்க. என்ன?" என்றார். "ஆகா! அதுக்



கென்ன, அண்ணே!'' என்ருன் கோவிந்தன். ஏற்பாடுகளைச் செய்த அசதியில், அரைகுறையாகத் தூங்கிவிட்டு, நான்கு மணிக்கே ரயில் ஸ்டேஷனுக்குக் கிளம்பினுர்கள். ''வள்ளி, வள்ளி!'' என்று அவள் தாயார் அறைக்குள் நுழைந்தாள். அறை காலியாக இருந்தது ''இந்தாங்க! வள்ளியம்மா எங்கே?'' என்று அங்கிருந்தே கூச்சல் போட்டாள். ''என்ன! வள்ளி இல்லையா?'' என்று வாயைப் பிளந்து கொண்டார் வேலுப்படையாச்சி. சிறிது திகைத்துப்போன அவர், உணர்வுக்கு வந்தவராய் கோவிந்துவின் குடிசைக்கு ஓடினுர் ''தம்பி! கோவிந்து! வள்ளியம்மையைக் காணேமாம்! தம்பி!' என்று குரல் கொடுத்தார் ஆனல், பதில் இல்லை. குடிசைக்குள் எட்டிப் பார்த்தார். யாரோ மனிதர் இருப்பது போல் இருந்தது நெருங்கிப் பார்த்த போது ஒரு கந்தல்துணி கொடியில் ஆடிக்கொண்டிருந்தது. விஷயம் விளங்கிவிட்டது அவருக்கு

ஆனல், கோவிந்தனும் வள்ளியம்மையும் இத்தனை நேரம் கூத்தனூர் போய்ச் சேர்ந்திருப்பார்கள் என்று விளங்கியிருக்குமா?

மௌனமாகத் திரும்பினுர் வேலுப் படையாச்சி. துக்கத்தை அடக்க முடியாமல் தவித்துக்கொண்டிருந்தாள் அவர் மனைவி. விஷயத்தைக் கேட்டதும் அவள் கலங்கிப் போய்விட்டாள், ''இப்படி நடக்குமென்று எதிர் பார்க்கவேயில்லை'' என்று முனகினுர் படையாச்சி. 'ஐயோ! என் கண்மணியைக்கொண்டு போய்விட்டானே, படுபாவி!'' என்று அங்கலாய்த்தாள் தாயார். இதனல் ஏற்பட்ட அவமரியாதையும் அவள் மனதை அதிகமாக அரித்துத் தின்றது.

இதே பைத்தியமாக வள்ளியம்மையின் தாயார் நாளடைவில் படுத்த படுக்கையாகி விட்டாள், பொறுமையாக படையாச்சி அவளுக்குப் பணி செய்தார், ''அலட்டிக்காதே! எப்படியாவது பார்த்து கூட்டிக்கிட்டு வரேன்!'' என்று ஆறுதல் சொன்னுர் ஆனல், நம்பிக்கையிழந்த அவள் ''என்னைப்போல அந்த பாவியும் தவிக்கணும்'' என்று மனமாறக் கூறிவிட்டு, கண்மூடிவிட்டாள்

* * *

இப்பொழுதுதான் கோவிந்தனுடைய மாமன் வந்து இந்தச் சாபத்தைச் சொல்லி நிந்தித்துவிட்டுப் போனது போல் இருந்தது 'நம் விஷயம்போல் ஆகிவிடப்போகிறது. பொன்னியின் கல்யாணம்'' என்று இறக்கும்போது அவன் மனைவி சொன்னதும், அது போல் நடவாமல் அரை மனதுடன் நடத்தி வைத்ததும் கோவிந்தனுக்கு ஞாபகம் வந்தது.

'சுள்'ளென்று சூரியன் மேலே பட்டதுந்தான் அவனுக்கு உணர்வு வந்தது எழுந்து காளியின் குடிசையை நோக்கி விழுந்தடித்து ஓடினுன் தெருவில் எல்லோரும் வியப்பாகப் பார்த்துக்கொண்டிருந்தனர், கோவிந்தனின் செய்கையை. ''பொன்னி, பொன்னி!'' என்று குடிசைக்குள் நுழைந்தான். குடிசை காலியாக இருந்தது 'கிர்' ரென்று ஐந்தாறு முறை உலகம் வேகமாகச் சுழன்றது அவனுக்கு.

குடிசைக்குத் திரும்பினுன் கோவிந்தன். ''என்ன, கோவிந்து! என்ன விஷயம்?'' என்று கிராமத்து ஜனங்கள் கேட்டதெல்லாம் அவன் காதில் விழவில்லை, தள்ளாடித் தள்ளாடிக் குடிசையைஅடைந்தபோது, குடிசைக்குள் பொன்னி இருப்பதுபோல் தோன்றியது அவனுக்கு ''பொன்னி! பொன்னி!'' என்று உள்ளே நுழைந்தான். குடிசை காலியாகத்தானிருந்தது பொத்தென்று கீழே உட்கார்ந்தான் கோவிந்தன்.

அவன் முன் பொன்னி தோன்றி, ''அப்பா! என்னைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டீங்களே! உங்க பேரன் காத்தானுக்காகவாவது நான் இங்கே இருக்கக்கூடாதா?''. என்று கெஞ்சுவதுபோலிருந்தது. 'வா, வா! பொன்னி, வா! உன்னை இருக்கக்கூடாதுன்னு சொன்னேன்! காத்தான்! வாடாப்பா! என்னவோ கோபத்திலே தள்ளிப்பிட்டேன்...'' என்று பிதற்றினுன். ஆனல், அந்தக் குடிசைகூட அதை எதிரொலிக்கவில்லை, பொன்னி!' என்று இரைந்து கத்தினுன் கோவிந்து. அவன் கண்ணில் தேங்கியிருந்த கண்ணீர் கீழே விழுந்தவுடன் தடையில்லாத வெளிச்சம் தான் அவன் கண்ணில் பட்டது.

வெகுநாளாகியும் காளி. பொன்னி இவர்களைப்பற்றிய செய்தி ஒன்றும் கோவிந்தனுக்குக் கிடைக்கவில்லை, அவன் வரவர அசௌக்யமடைந்து படுக்கையில் படுத்துக்கொண்டான். 'பொன்னி, பொன்னி!' என்று ஓயாமல் உளறிக்கொண்டிருந்தான், பக்கத்துக் குடிசையிலிருந்த மாணிக்கம் புண்ணியத்திற்காக அவனுக்கு வேளாவேளை கஞ்சி ஊற்றிக்கொண்டிருந்தான்

அந்திவேளை, பறவைகளின் கோலாகலம்கூட இல்லாமல் அவ்வளவு நிசப்தமாக இருந்தது, அப்பொழுது தான் வயலிலிருந்து திரும்பிய மாணிக்கம், கோவிந்தன் பிதற்றுவதைக் கேட்டு அவன் குடிசைக்குள் நுழைந்தான். கோவிந்தன் ஜுர வேகத்தில் எழுந்து ஓட முயற்சித்துக் கொண்டிருந்தான். அவனை இழுத்துப்படுக்க வைத்த மாணிக்கம் 'என்ன, அண்ணே இது!' என்ருன். 'பொன்னி, பொன்னி!' என்ருன் கோவிந்தன்.

திடும்பிரவேசமாக யாரும் எதிர் பாராதபடி காளி, பொன்னி, காத்தான் சகிதம் குடிசைக்குள் நுழைந்தான். 'அப்பா;', என்று அலறிக்கொண்டு அவனண்டையில் ஓடினுள் பொன்னி. காத்தான் அவனை இறுகக் கட்டிக் கொண்டான் காளியின் கண்களில் நீர் துளிர்த்தது.

'பொன்னி!', என்று அவளை இறுகப் பிடித்துக்கொண்டான் கோவிந்து. 'மாமா! என் விஷவாக்குப்படியா ஆச்சு! நீங்க சாகணும்; இல்லாட்டி நான் சாகணும் சொன்னேனே! நான் சாகக்கூடாதா...?' என்று நெஞ்சடைக்கக் கூறினுள் காளி

ஆனல், கோவிந்தன் காதில் அது விழுந்ததாகத் தெரியவில்லை. பொன்னியின் கையைப் பிடித்தபடியே உயிரை விட்டான் கோவிந்தன்.

'ஐயோ! என் துர்வாக்கு இப்படியா ஆச்சு!', என்று துக்கித்தான் காளி.

'ஆனல், அதில் கோவிந்தனின் மாமியாளின் வாக்கு ஒரு விதத்தில் பலிதமானதை காளிகண்டானென்ன?

ஸங்கீத பாரிஜாதம்

பண்டித கிருஷ்ணமாச்சார்யா

329. मेलः स्वरसमूहः स्या रागव्यञ्जनशक्तिमान् ।
श्लिष्टोच्चारणमेवात्र सतु उदारः प्रकीर्तितः ।

மேள : ஸ்வரஸமூஹ: ஸ்யாத்
ராகவ்யஞ்ஜன சக்திமாந் |
ச்லிஷ்டோச்சாரணமேவாத்ர
ஸது உதார: ப்ரகீர்த்தித: ॥

ராகத்தைத் தோற்றுவிக்கும் சக்தியையுடைய ஸ்வரங்களின் ஸமூஹத்திற்கு 'மேளம்' என்று பெயர் ஸ்வரங்களின் கோர்வையான ப்ரயோகத்தையே இங்கு ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார், அதற்கு வடமொழியில் 'உதாரம்' என்று பெயர் வழங்கப்படுகிறது.

330. आद्याद्यमूर्च्छनाभिश्च मेला ज्ञेया विचक्षणैः ।
331. सप्तभिश्च स्वरैः पूर्णः षड्भिस्तैः षाडवो मतः ॥
औडवः पञ्चभिः प्रोक्त एवं मेलस्त्रिधा मतः ।

ஆத்யாத்ய மூர்ச்சனுபிஸ்ச மேளா
க்ஞேயா விசக்ஷணை: |
ஸப்தபிஸ்ச ஸ்வரை : பூர்ண :
ஷட்பிஸ்தை : ஷாடவோ மத : ॥
ஔடவ: பஞ்சபி: ப்ரோக்த
ஏவம் மேளஸ்த்ரிதா மத : |

கீழ்க் கூறப்பட்ட மேளங்கள் மூர்ச்சனைகளின் முறையைப் பின்பற்றியே ஏற்படுகின்றன என்று அறியத்தக்கது. மேளம் மூன்று வகையையுடையது. அதாவது, ஏழு ஸ்வரங்களால் ஏற்படும் மேளம் ஸம்பூர்ணம். ஆறு ஸ்வரங்களால் தோன்றும் மேளம் ஷாடவம். ஐந்து ஸ்வரங்களால் உண்டாகும் மேளம் ஔடவம்.

332. षाडवा औडवा षड्जं विना मेला न ते मताः ।
शुद्धत्वविकृतत्वाभ्यां इति मेला मयोदिताः ॥

ஷாடவா ஔடவா : ஷட்ஜம்
விநா மேளா நதேமதா : |
சுத்தத்வ விக்ருதத்வாப்யாம்
இதி மேளா மயோதிதா : ॥

ஷாடவ—ஔடவ மேளங்கள் ஷட்ஜ—ஸ்வரமின்றி ஏற்படுவதில்லை. மேலும், சுத்தஸ்வர—விக்ருத ஸ்வரங்களாலும் முற்கூறியவாறு மேளங்கள் உண்டாகின்றன. இதனைப்பற்றி முன் மூர்ச்சனுப் பிரகரணத்தில் கூறப்பட்டிருக்கிறது.

333. तत्र ये च प्रसिद्धाः स्यूरञ्जका ये विशेषतः ।
लक्षणानि ब्रुवे तेषां सम्मत्या च हनूमतः ॥

தத்ர யேச ப்ரஸித்தா : ஸ்யூ
ரஞ்ஜகா யே விசேஷதா : |
லக்ஷணாநி ப்ருவே தேஷாம்
ஸம்மத்யா சஹநுமத : ॥

அவற்றுள் எவை ப்ரசித்தங்களாகவும் விசேஷமாக ரக்தியையுடையவைகளாகவும் அமைந்துள்ளனவோ, அத்தகைய மேளங்களின் லட்சணங்களை அனுமானது மதத்தைத் தழுவிக் கூறுகிறேன்.

334. गीतियुक्ताश्च ये रागा शुद्धास्ते शास्त्रसंमताः ।

கீதி யுக்தாஸ்ச யே ராகா
சுத்தா ஸ்தே சாஸ்த்ரஸம்மதா : ॥

எந்த ராகங்கள், மேற்கூறப்போகும் கீதிகளையுடையவையோ அவைகள் சுத்தங்கள் என்று ஸங்கீத நூலில் கூறப்பட்டுளது.

शुद्धा भिन्ना ततो गौडी वेसरा च ततः परम् ।
साधारणीति पञ्चैतास्तासां लक्षणमुच्यते ॥

சுத்தா பின்னா ததோ கௌட
வேஸராச தத : பரம் |
ஸாதாரணீதி பஞ்சைதாஸ்
தாஸாம் லக்ஷணமுச்யதே ||

(கீதிகள்)

கீதிகள் (1) சுத்தா (2) பின்னு (3) கௌட (4) வேஸரா (5) ஸாதாரணீ என ஐவகையின. அவை களின் லக்ஷணங்கள் வருமாறு:—

335. शुद्धावक्रस्वराज्ञेया ललितस्वरसंयुता ।

சுத்தா வக்ரஸ்வரா க்ஞேயா
லலிதஸ்வர ஸம்யுதா

1. சுத்தா:—இது வக்ரமும், லலிதமுமான ஸ்வரங்களை யுடைய கீதியாகும்.

भिन्ना सूक्ष्मस्वरै र्युक्तैर्मधुरैर्गमकैर्युता ।

பின்னு ஸூக்ஷ்ம ஸ்வரைர்யுக்தைர்
மதுரைர்கம கைர்யுதா |

2. பின்னு:—ஸூக்ஷ்ம ஸ்வரங்களையுடையதும், இனி மையைத் தரும் கமகங்களுடன் கூடியதுமான இது 'பின்னு' எனப்படும்

336. आरोहणावरोहाभ्यां स्थानत्रयसुशोभिता ।
अखण्डितस्थितिः स्थानत्रये गौडी मता सताम् ॥

ஆரோஹணுவரோஹாப்யாம்
ஸ்தானத்ரய ஸுசோபிதா |
அகண்டி தஸ்திதி : ஸ்தான
த்ரயே கௌட மதா ஸதாம்.

3. கௌட:—ஆரோஹண, அவரோஹணங்களுடன் மூன்று ஸ்தாயிகளிலும் விளங்குவதும், அகண்டமான (தொடர்ச்சியான) நிலையையுடையதும் ஆன கீதியை 'கௌட' என்று அறிஞர் கூறுவர்.

337. हुम्फिताभ्याञ्चानु द्रुतसरलैः स्वरैः ।
वेगस्वरैश्चतुर्मिश्र वर्णैः सा वेसरा मता ॥

ஹூம்பித கம்பிதாப்யாம் ச
ஹுத் ருதஸரலை : ஸ்வரை : |
வேகஸ்வரைஸ் சதுர் பிஸ்ச
வர்ணை : ஸா வேஸராமதா ||

4. வேஸரா:—'ஹூம் பிதம்' 'கம்பிதம்' என்ற இரு கமகங்களுடனும், அனுத்ருத அங்கத்துடனும், லளித ஸ்வரங்களுடனும், த்ருதகாலத்திலுள்ள நான்குவித (ஸ்தாயீ ஆரோஹீ, அவரோஹீ ஸஞ்சாரீ) வர்ணங்களுடனும் கூடிய கீதி 'வேஸரா' என கருதப்படுகிறது

338. चतुर्गीतगतं लक्ष्माश्रिता साधारणी मता ।

சதுர் கீதகதம் லக்ஷ்ம
ச்ரிதா ஸாதாரணீ மதா |

5. ஸாதாரணீ:—முற்கூறப்பட்ட நான்கு வகை கீதி களின் லக்ஷணமும் பொருந்திய ஒரு வகை கீதியை 'ஸாதா ரணீ' என்று வழங்குவர்.

கீதிகளின் லக்ஷணங்கள் முடிவடைந்தன.

339. रञ्जकः स्वरसन्दर्भो राग इत्यभिधीयते ।
सर्वेषामपि रागाणां समयोऽत्र निरूप्यते ॥

ரஞ்ஜக : ஸ்வரஸந்தர்போ
ராக இத்யபிதீயதே |
ஸர்வேஷாமபி ராகாணும்
ஸமயோத்ர நிரூப்யதே ||

ராகங்களின் பெயர்கள்

கேட்போரின் மனதிற்கு ஸந்தோஷத்தையளிக்கும் ஸ்வரங்களின் கோர்வை ராகம் எனப்படுகிறது

இனி ராகங்களைப் பாடும் சமயத்தைக் கூறுவோம்:—

340. धन्याश्रीर्मालवश्रीश्च रक्तहंसो वसन्तकः ।
देशाख्यो देशकारीच भूपाली प्रसभस्तथा ॥

341. मध्यमादिः कोल्लहासो वङ्गाली भैरवस्तथा ।
नारायणी विभासश्च प्रातर्गेया इमे बुधैः ॥

தனுச்ரீர் மாளவச்ரீஸ்ச
ரக்த ஹம்ஸோ வஸந்தக : |
தேசாக்யோ தேசகாரீ ச
பூபாலீ ப்ரஸபஸ்ததா ||
மத்யமாதி : கோல்லஹாஸோ
வங்காலீ பைரவஸ்ததா |
நாராயணீ விபாஸஸ்ச
ப்ராதர் கேயா இமே புதை : ||

ராகங்கள் பாடும் நேரம்

தனுச்ரீ, மாளவஸ்ரீ, ரக்தஹம்ஸம், வஸந்தம், தேசாக்யம், தேசகாரீ பூபாளம், ப்ரஸபம், மத்யமாதி, கோல்லஹாஸம், வங்காளீ, பைரவம், நாராயணீ விபாஸர். என்ற 14 ராகங்களும் காலையில் பாடுவதற்குரியவையாகும்



வாலாஜாபாத் இந்துமத பாட சாலையைச் சேர்ந்த வள்ளலார் மாணவர் இல்லத்தின் 1950–51ஆம் ஆண்டு ஆட்சி மன்ற திறப்புவிழா சமீபத்தில் நடைபெற்றபோது எடுக்கப் பெற்ற படம். சென்னை ஹைக் கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ ஏ. எஸ். பி. ஐயர் தலைமை ஏற்றார் தேவ கோட்டை நகராண்மைக் கழகத் தலைவர் அள. அரு. சோமநாதன் செட்டியார் திறந்து வைத்தார்.

★



(கீழ் படம்)

சுவாமி சிவானந்தர் ஊர்வலக்காட்சி

சுவாமி சிவானந்தர் சென்றவாரம் சென்னைக்கு விஜயம் செய்திருந்தபோது ஹம்ஸ ரூபத்தில் அலங்கரிக்கப்பட்ட மோட்டாரில் திருவல்லிக்கேணியில் நான்கு மாட வீதிகளிலும் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். மோட்டார் வாகனத்தில் சுவாமிஜியுடன் நீதிபதி விச்வநாத சாஸ்திரியும் அமர்ந்திருக்கிறார்.

ராமானுச நூற்றந்தாதி

காயகசிகாமணி அரியக்குடி ஸ்ரீ ராமானுஜய்யங்கார் ஸ்வரப்படுத்தியது

படி கொண்ட கீர்த்தி ராமாயண மென்னும் பத்திவெள்ளம்
குடிகொண்ட கோயில் ராமானுசன் குணம் கூறுமன்பர்க்
கடிகொண்ட மாமலர்த்தாள் கலந்துள்ளம் கனியும் நல்லோர்
அடி கண்டுகொண்டு கந்து என்னையும் ஆளவர்க்காக்கினரே

ஆக்கி அடிமை நிலைப்பித்தனை என்னை இன்று அவமே
போக்கி புறத்திட்டதென் பொருளா முன்பு புண்ணியர்தம்
வாக்கில் பிரியா ராமானுச நின்னருளின் வண்ணம்
நோக்கில் தெரிவரிதால் உரையாயிந்த நுண்பொருளே.

19-வது பாட்டு

ராகம் : வாசஸ்பதி   தாளம் : ஜம்பை (5-அக்ஷரம்)

64-வது மேள கர்த்தா.

கம பா ; பம	காரீ ரீ ரிக ஸா	; நித ஸா; ரீ	கா மா பா பா பா
படி கொண் ட ,	கீர் . த்தி ரா மா	. யண மென்னும்	ப . த்திவெள்ளம்
நித பா ; பம	பா ; பா பநி தபபா	. ம பம பா தா நீ	நித தப தநி தநி தா
குடி கொண் ட.	கோ யில் ரா. மா. .	. . னு சன் குணம்	கூ , . று . மன் பர்க்
பதநி தபம பா	தா. நி ஸ்ா ரி ரி	; கப்ம் க் ரீ ஸ்ா	ஸ்ரி நீ தா தநி ஸ்ா
கடி . கொண் . ட	மா . மலர்த்தாள்	. கலந் . துள் . ளம்	க . னியும் நல் லோர்
தநி ஸ்ா ஸ்ா ஸ்ரி	ரிரி நீ தா தப பா	மப தநி ஸ்ா ரிஸ் நித பா	பா ; பா பநி தப பா
அடிகண்டு கொண்	டு . கந்து என். .	னை யும் ஆ . . ள வர்	க் காக்கின . ரே . .
தா , நி தா தா	தா நீ தா தப நித	நீ தா நிஸ் நித பா	பா; பக மா பா
ஆக்கி அ . டி	மை நிலைப் பித் த .	னை என்னை . . . இன்	று அ. வ மே
பம நித பா பா	பா பம கா ரீ ரீ	ஸா ஸரி கம பா பா	பநி தபபா பக மா பா
போ க்கி . ப்புறத்	திட்ட . . தென்	. பொருளா. முன்பு	புண் ணி , யர் . தம்
பநி தபபா பா தா	நீ ; ஸ்ா ; ஸ்ா	; தா நீ ஸ்ா ஸ்ா	ஸ்ா ஸ்நி ரிஸ் நித தபபா
வா க் கில். பி ரி	யா ரா மா	. னு ச நின் ன	ருளின் வண் . . . ணம் .
தநி ஸ்ரி க்ா ரீ	ஸ்ரி நீதா நி ஸ்ரீ	ரிநி ரிஸ் ஸ் ஸ் நித பா	ரிஸ் நித பம கரி ஸரி
நோ . க்கில் தெ	ரி . வரி தால். .	உ . ரை . யா , யிந் த	நுண். . . பொ . ரு . ளே .

கம—
. .—   (படி கொண்ட)



புதிய டில்லியிலுள்ள சீனத் தூதர் காரியாலயத்தில் இம்மாதம் 1-ந் தேதியன்று சீனக்குடியரசு ஆண்டு விழா நடைபெற்றது. இவ்வைபவத்தில் இந்தியப் பிரதம மந்திரி பண்டித நேருவும், அவரது புதல்வியும் பிரசன்னமாயிருந்தனர். பண்டித நேரு, சீனர்கள் தயாரித்த சாப்பாட்டுப் பாத்திரங்களைப் பார்வையிடுகிறார். சீனத்தூதர் காரியாலயத்தின் முதல் காரியதரிசி மிஸ்டர் பிட் பக்கத்தில் நிற்கிறார்.



ராஜ்காட்டில் நடந்த அகண்ட பிரார்த்தனையில் பண்டித நேரு, ஸ்ரீ முன்ஷி, ஸ்ரீ திவாகர், ஸ்ரீ கர்மர்க்கர் ஸ்ரீமதி இந்திரா காந்தி முதலியோர் கலந்துகொண்டனர்.

[சில்லரை விலைகள்]

(விற்பனை வரி தனியாக செலுத்தவேண்டும்)

சென்னை அக்டோபர் 2—

அன்றாட வாழ்க்கைக்கு அத்தியாவசியமான பண்டங்களின் விலைவாசிப் போக்கைக் குடும்பத்திலுள்ளவர்கள் தெரிந்து கொள்வதற்கு உதவியாகச் சென்னை நகரிலுள்ள நிலவரத்தைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். இவையெல்லாம் அவ்வப்போது மாறுதலுக்குட்படக்கூடியவை. எனவே இதில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போலவே சில பண்டங்கள் கிடைக்கலாம் அல்லது சற்று ஏறத்தாழவும் சில இடங்களில் விற்கப்படலாம். பொதுவாக விலைகளின் ஓட்டத்தை உணர இது பயன்படும்.

		ரு	அ	பை.
உப்பு	1–படி	0	1	0
துவரம் பருப்பு	1–படி	1	1	0
உளுத்தம் பருப்பு	,,	1	4	0
பயத்தம் பருப்பு	,,	1	4	0
கடலைப்பருப்பு	,,	0	15	0
எள்ளு	,,	1	8	0
கடுகு	1 வீசை	2	0	0
வெந்தியம்	,,	2	0	0
மிளகு	,,	22	0	0
மிளகாய்–ராமநாதபுரம்	,,	4	4	0
தனியா	,,	3	12	0
புளி [புதுசு]	,,	1	4	0
சீரகம்	,,	4	0	0
வெல்லம்	,,	1	10	0
நாட்டு சர்க்கரை	,,	1	11	0
அஸ்கா சர்க்கரை	,,	1	5	0
மஞ்சள்	,,	2	2	0
பூசு-மஞ்சள்	,,	2	0	0
குங்குமம்	,,	2	0	0
பாதாம் கொட்டை	,,	4	11	0
சீயக்காய்	,,	1	2	0
வாஷிங் சோடா	,,	0	10	0
திராக்ஷை	,,	5	12	0
முந்திரிபருப்பு	,,	5	4	0
களிப்பாக்கு	,,	6	0	0
நெய்	,,	9	8	0
நல்லெண்ணெய்	,,	8	8	0
ஜவ்வரிசி	,,	2	4	0
தேங்காய் எண்ணெய்	,,	3	12	0
கடலெண்ணெய்	1–வீசை	2	13	0
ரேடியோ எண்ணெய்		8	4	0
விளக்கெண்ணெய் பாட்டில் பெரிசு.		1	12	0
தேசவர்த்தினி		0	13	0
[illegible] விளக்கெண்ணெய் 4 அவுன்ஸ் பாட்டில் 1–க்கு		1	5	6

		ரு	அ	பை.
க்வாக்கர் ஓட்ஸ்	1 டின்	2	4	0
சேமியா	1 ப.	1	2	0
காப்பிக்கொட்டை பீபரி	1 வீசை	5	9	0
,, 'A'	,,	5	3	0
காப்பி 1-வீசை 'R'		4	2	6
பார்லி	1-வீசை	2	10	0
கச கசா	1 வீசை	3	12	0
கரி 1 மூட்டை	(56 ப.)	4	0	0
'டால்டா வனஸ்பதி 10 ப		12	1	0
கற்பூரம்	1–பலம்	0	8	0
சாம்பிராணி	1 பலம்	0	6	0
பெருங்காயம்	,,	0	4	0
லவங்கம்	,,	0	3	6
ஏலக்காய்	,,	1	0	0
சுக்கு பலம் 1 க்கு		0	3	0
வால் மிளகு	,,	0	3	0
எல் ஜி பெருங்காயம் 1 சேர்		2	2	0
தீப்பெட்டி. 1 டஜன்		0	8	6
ஓவல்டின்	1 பவுன்ட்	3	10	0
போர்ன்வீடா		3	8	0
,,	½ பவு	2	1	0
போர்ன்வில் கோகோ 1 பவுன்ட்		2	12	0
,,	½ பவு	1	8	0
ப்ரைஸ் ப்ரெக்பாண்ட் கொக்கோ ½ ப		1	7	0
'ரௌண்டிரீஸ் (R.T.) கொக்கோ ½ ப		1	8	0
கோரா டீ (டஸ்ட்) 1–பவுண்ட்		2	5	6
கோரா டீ ¼ பவுண்ட்		0	4	9
ஹமாம் சோப்		0	6	3
லைப்பாய்		0	6	0
டாம்கோ 501 பார்		1	3	6
லக்ஸ்		0	6	3
பம்மாலிவ் சோப்		0	6	3
ரெக்ஸோனா (3½ அவுன்ஸ்)		0	6	6
மார்கோ சோப்பு		0	8	9
777 பார் 1-க்கு		1	4	0
காந்தி டாய்லட் சோப் 1-க்கு		0	6	0
மைசூர் "ஸாண்டல்' சோப்		0	10	0
கேரளா ஸாண்டல் சோப்பு		0	6	6
மெடிகோ டாயிலட் சோப்		0	8	0
காட்ரீஜ் சோப்	நெ. 1	0	11	0
ஷை	நெ. 2	0	8	6
ரூப் டாய்லெட் ஸோப்—ஸ்டாண்டர்டு		0	6	0
,, கெஸ்ட் ஸைஸ்		0	2	0
'டாம்கோ ஹேர் ஆயில் (சிறிய பாட்டில்)		1	1	0
ஷை (பெரிய பாட்டில்)		2	15	0
குங்குமப் பூ [1 பாட்டில்]		1	6	0
பச்சை கற்பூரம் 1 விராகனிடை		0	6	0
"பினைல்' பாட்டல்		0	13	0
நீம் டூத் பேஸ்ட்		1	0	0
மாக்லீன் பேஸ்ட்		1	0	0
பார்ஹான்ஸ் பேஸ்ட் (பெரியது)		2	12	0
7 ஓ'க்ளாக்' க்ஷவர ப்ளேட் (10 கொண்ட பாக்கட்)		1	0	0

198594



டாக்டர் மாண்டிஸோரி பிறந்த தின விருந்து சென்ற வாரம் மியூஸியம் தோட்டத்தில் நடந்தது. விழா இறுதியில் குழந்தைகள் 'கோரஸ்' பாடும்போது எடுத்த படம்.

1950-ம் வருஷத்திய நோபல் பரிசுபெற்ற டாக்டர் ரால்ப் பஞ்ச் நடுவேயிருப்பவர். அவரது [illegible]னைவியும், குழந்தைகளும் படத்தில் காணப்படுகின்றனர். 1949-ல் பாலஸ்தீனத்தில் சமரா[illegible] கவிருந்து தொண்டாற்றியதற்காக இப்பரிசு அவருக்களிக்கப்பட[illegible]

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamit[illegible] House, Mount Road, Madras. Editor: C. R. Srinivasan B[illegible]

Regd. No. 2514.



கனடிய தேசியக் காட்சி சமீபத்தில் டொரண்டோவில் நடந்தது. இந்தியாவில் தயாரான பல பொருள்கள் காட்சியில் இடம் பெற்றிருந்ததால் கனடிய மக்களுக்கு இதில் விசேஷ சிரத்தை ஏற்பட்டது. காட்சி சாலை அமைப்புவேலைகள் இந்திய சர்க்கார் வர்த்தகக் கமிஷனர் பொறுப்பில் நடந்தன. இந்திய சிற்ப வேலைப்பாடுகளுடன் உள்ள காட்சி சாலையின் முகப்புப் படமிது.



மேற்படி காட்சி சாலையில் இந்திய தேசியக் கொடியால் அலங்கரிக்கப்பட்டிருந்த மகாத்மாஜியின் முகச் சிலையை அநேகர் கண்டு களிக்கையில் எடுத்த படம்.

P'inted and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editr C. R. Srinivasan B. A.